DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223

Siva & Joy Real Estate Team
416-267-9700
Homelife/Future Realty Inc., Brokerage
Siva Shanmuganathan
Joy H Selvanayagam

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan, Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com

Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999
RE/MAX

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
RE/MAX

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tel: 647-344-6600

KANAGAAMBIKAI PAWN BROKERS
2613 Eglinton Ave, East, Scarborough, ON M1K 2S2, Canada
416 269 7198

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

25வது வெள்ளி விழா 2021
UTHAYAN
# உதயன்
$1.00
416-752-1524
416-752-6703
உதயம் 1303
CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM
Friday March 26, 2021

## "We are proud of our Premier because he always wants to get things done."

**- Ontario's Finance Minister Peter Bethlenfalvy**

# எமது முதல்வர் பற்றி நாம் பெருமிதம் கொள்கின்றோம்: அவர் எப்போதும் திட்டங்களை நிறைவேற்றுவதையே விரும்புகின்றவர்.

## — மாகாண நிதி அமைச்சர் புகழாரம்





எமது மரியாதைக்குரிய முதல்வர் டக் போர்ட் அவர்கள் எப்போதும் திட்டங்களை உடனடியாக நிறைவேற்றுவதிலேயே கவனம் செலுத்துகின்றார். அதுவும் எவ்வளவு விரைவாக திட்டங்கள் மக்களுக்கு பலனைத் தருகின்றன என்பதை எப்போதும் உறுதி செய்கின்றார். எனவே அவரது வழிகாட்டலில் நாம் பணியாற்றுவதை பெருமையாகக் கொள்கின்றோம்"
இவ்வாறு புகழாரம் சூட்டினார் ஒன்றாரியோ மாகாணத்தின் நிதி அமைச்சர் பீற்றர் பெத்லென்பல்வி.

(உள்ளே 17ம் பக்கத்தில் விபரமான செய்தி)

# முன்னாள் கிரிக்கெட் வீரர் முத்தையா முரளிதரன், சரத் பொன்சேகாவிடம் ரூபா 100 கோடி மான நஷ்டஈடு கோரியுள்ளார்.





இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வேகப் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன், தனது சட்டத்தரணியின் 24-03-2021 திகதியிடப்பட்ட கடிதம் மூலமாக முன்னாள் இராணுவத்தளபதியும் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினருமான சரத் பொன்சேகாவிடமிருந்து, ஒரு மில்லியன் ரூபாய்கள் நஷ்டஈட்டை வழங்குமாறு கோரியுள்ளார் என கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த மார்ச் 15ஆம் திகதி அரசியல் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர், சரத் பொன்சேகாவின் உரையில் சொல்லப்பட்டுள்ள விடயங்கள் அவதூறானது என்றும் சட்டத்திற்கு முரணானது என்றும் தெரிவித்து, தனக்கு உள ரீதியான பாதிப்புக்கள் ஏற்பட்டதாகவும் குறிப்பிட்டு முத்தையா முரளிதரன் குறித்த மான நஷ்டஈட்டுக் கோரிக்கை கடிதத்தை சட்டத்தரணி மூலமாக அனுப்பி வைத்துள்ளார். என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த அரசியல் கூட்டத்தில் சரத் பொன்சேகா தெரிவித்ததாக குறிப்பிடப்பட்டுள்ள விசமத்தனமான கருத்துக்கள் பின்வருமாறு உள்ளன என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.கருத்து வருமாறு,

முத்தையா முரளிதரன் எனும் ஒருவர் உள்ளார். முன்பு அவரை எங்களுக்கு மிகப் பிடிக்கும். பந்தை வீசும் போது, நாங்கள் கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருப்போம். உண்பதையும் குடிப்பதையும் நாம் மறந்து விடுவோம். இப்போது அவர் பந்தை மாற்றி மாற்றி மஹிந்த ராஜபக்சவினரின் ஆடைகளுக்குள்ளேயே வீசுகிறார். அதற்கு காரணம் வேகப் பந்து வீச்சாளருக்கு மிகவும் வேகமாக அரச நடைமுறைகள் எதுவும் கவனிக்கப்படாமல், வெலிக்கந்தவில் 2,000 ஏக்கர் வழங்கப்பட்டுள்ளது. ஒரு யானையால் கூட அங்கு செல்ல முடியாத வகையில் வேலியடைத்துள்ளார் முரளிதரன் எனவே இவ்வாறான வேலைகளைத்தான் முரளிதரன் போன்றவர்கள், சூழலை பாதுகாக்கும் முறை என்று சொல்கிறார்கள்.

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8
416.568.4301 , 905.471.4050

MONEY PROBLEMS?
உங்கள் அனைத்து கடன்களுக்குரிய கட்டணங்களை ஒரே சிறிய கட்டணமாக் எவ்வித வட்டியுமின்றிச் செலுத்த எம்மை நாடுங்கள்.
Direct Tamil Line (416) 489-2000
Visit GtaCredit.Com
North York * Scarborough * Mississauga * Brampton * Ajax

ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St. East, Mississauga, ON, L5A 1W7
905 272 1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905 794 4404


THE GUARDIAN
HOME REALTY INC.,BROKERAGE
Where life begins...
வீடு வாங்க
விற்க அல்லது
அது தொடர்பான
விடயங்களை அறியவும்,
இலவச ஆலோசனைகளை
பெற்றுக்கொள்ளவும்
முன்னணி நிறுவனமான
The Guardian
Home Realty
நிறுவனத்தை
நாடுங்கள்
REAL ESTATE முகவராக விரும்பும் அன்பர்களே
Join our team!
Discover how our results producing motivation, coaching, marketing, and technical support will maximize your income as a sales professional.
Email us at info@theguardianhomes.com for more details.
80 Nashdene Rd, unit# F119 Scarborough, ON M1V 5E4
416 090 6565 | www.theguardianhomes.com

உதயன் கதிரோட்டம்

# உலகத் தமிழர்களுக்கு ஏமாற்றத்தைப் பரிசாக வழங்கிய ஜெனிவா தீர்மானத்திற்கு பூமாலை சூட்டும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு

கடந்த செவ்வாய்கிழமையன்று ஜெனிவாவில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான சபையில் சமர்ப்பிக்கப்பட்ட இலங்கைக்கு எதிரான தீர்மானம் அதிக வாக்குகள் பெற்று ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாக கருதப்பட்டாலும், அந்த தீர்மானத்திற்குள் சொல்லப்பட்டுள்ள பிரிவுகளில் இலங்கை அரசிற்கு சார்பான விடயங்களே முன்னிலையில் உள்ளதாக விமர்சிக்கப்படுகின்றது. இதனால், மேற்படி தீர்மானம் இலங்கைக்கு எதிரானது என்று கூறப்பட்டாலும், அந்த தீர்மானத்தால் எவ்விதமான நற் பலனும் தமிழ் மக்களுக்கு ஏற்படாது என்று அரசியல் விமர்சகர் தெரிவித்து வருகின்றார்கள்.

இது தொடர்பாக கனடாவிலிருந்து கருத்து வெளியிட்டுள்ள நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் உறுப்பினர் திரு நிமால் விநாயகமூர்த்தி ஒரு இடத்தில் குறிப்பிடுகையில் "அண்மையில் ஜெனிவாவில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சபையில் கொண்டுவரப்பட்ட தீர்மானம் இலங்கைக்கு பாதிப்பை ஏற்படுத்தவில்லை. அது இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்பட்டது என்று கூறப்பட்டாலும் அவ்வாறு இடம்பெறவில்லை. மாறாக "குற்றவாளியே விசாரணைகளை நடத்தலாம் என்ற தமிழர்களின் விருப்புக்கு மாறாகவே அதன் உள்ளடக்கத்தில் கூறப்பட்டுள்ளது. அத்துடன், இந்தத் தடவை கொண்டு வரப்பட்ட தீர்மானம் என்பது 2015 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை விடவும் மிகவும் பலவீனமானது. 2015 ஆண்டு நிறைவேறிய ஐ.நா தீர்மானத்தில் கலப்பு பொறிமுறைகளுடன் கூடிய பல நாடுகள் இணைந்த நீதி விசாரணையை கோரியிருந்தது. ஆனால் இப்போதைய தீர்மானம் என்பது முழுக்கவும் இலங்கையே இந்த போர்க்குற்றத்தை விசாரிக்கலாம் என சொல்கிறது. இதை இந்தியா வாக்களிக்காமல் நடுநிலை வகித்தது தமிழ் மக்களுக்கே பாதகமான அதுவும், ஈழத்தமிழர்கள், தமிழக தமிழர்கள் மற்றும் உலகத்தமிழர்களின் மன எண்ணங்களுக்கு பாதகம் செய்த ஒன்றாகவே நான் பார்க்கின்றேன்." என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும் நாடு கடந்த அரசாங்கத்தின் பிரதமர் உருத்திரகுமாரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் " இந்த தீர்மானம் அரசாங்கத்திற்கு எதிராக கொண்டு வரப்பட்டு அதிகமான வாக்குகளைப் பெற்றது என்று தெரிவிக்கப்பட்டாலும், இந்த வாக்கெடுப்பால் தமிழ் மக்களின் காயங்களுக்கு மருந்து போடப்படவில்லை என்றும் இதனால் தமிழ் மக்களின் விருப்பு கவனிக்கப்வில்லை என்றும் குறிப்பிட்ப்பட்டுள்ளார்.

இவ்வாறு பலரும் இந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்ட தன்மையை விமர்சித்து வரும் சந்தர்ப்பத்தில், உலகத் தமிழர்களுக்கு ஏமாற்றத்தைப் பரிசாக வழங்கிய ஜெனிவாத் தீர்மானத்திற்கு பூமாலை சூட்டும் வேலையில் இலங்கையில், தமிழ்த தேசிய கூட்டமைப்பு ஈடுபட்டு வருகின்றதை நாம் செய்திகள் மூலமாக அறிகின்றோம். அத்துடன் அவர்களைப் பார்த்துச் சிரிக்கவும் செய்கின்றோம்.

இவ்வாறு இந்தியாவிற்கு புகழாரம் சூட்டும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன், ஸ்ரீதரன், சம்பந்தர் ஆகியோர் தங்கள் பதவிகளிலிருந்து சுகபோகத்தை தக்க வைக்க வேண்டியவர்களாக உள்ளார்கள். அவர்களுக்கு இந்திய அரசாங்கத்தையும் இலங்கை அரசாங்கத்தையும் சந்தோசப்படுத்த வேண்டிய 'அவசியம்' உள்ளது. அந்த மூன்று உறுப்பினர்களும் கடந்த மைத்திரி- ரணில் ஆட்சிக் காலத்தில் பொற்காலத்தை அனுபவித்தவர்கள். தற்போது இந்தியாவிற்கு புகழ்பாடும் 'தொழிலை'ச் செய்து மகிழும் மக்கள் பிரதிநிதிகளாகவே அவர்கள் உள்ளார்கள் என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

ஸ்ரீதரன் எம்பி பாராளுமன்றத்தில் இலங்கை அரசிற்கு புத்திமதி கூறி இந்தியாவிற்கும் பாராட்டைச் சொல்ல முனைகின்றார். இதற்காக அவருக்கு இந்திய தூதரகத்தின் "சன்மானம்' மெதுவாக வந்து சேரும். இப்படியே பழக்கப்பட்டவர்களாக அவர் உள்ள நிலையில் பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்ந்து வீதிகளிலேயே நிற்கின்றார்கள்.

ஜெனீவா பிரேரணை தொடர்பில் இந்தியா நடுநிலை வகித்திருந்தாலும் இலங்கையில் தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்கு தீர்வுகாணப்பட வேண்டுமென்ற செய்தியை தெளிவாக எடுத்துரைத்துள்ளதுடன், மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளதாகவும் அவர் கூறுகின்றார். அவரது மற்றுமொரு நோக்கம் தற்போது பதவி எதுவும் இல்லாமல் உள்ள தனது சகாவான 'மாவை'க்கு மாகாண சபைத் தேர்தலை நடத்துவதன் மூலம் முதலமைச்சர் பதவியை வழங்கலாம் என்று நினைகின்றார். தமிழ்த் தேசிய கூட்டமைப்பிற்கு தங்கள் இருப்பை தக்கவைத்துக கொள்ள எதைச் செய்ய வேண்டுமோ, அதையே செய்வார்கள். ஆனால் மக்கள் வீதிகளில் ஆண்டுகள் பலவாய் போராட்டம செய்தும் இன்னும் தங்கள் அன்பான உறவுகள் பற்றிய எந்தச் செய்தியும் வராமல் ஏக்கத்துடன் கதறுகின்றார்கள். இவர்களுக்கு எமது பாராளுமன்ற உறுப்பினர்களால் பலன் எதுவுமே இல்லை. மக்கள் வேறு. பாராளுமன்ற உறுப்பினர்கள் வேறு என்று நிலையே அங்கு தொடர்கின்றது.


## ROOM FOR RENT

**KENNEDY & EGLINTON**
**McCowan & Sheppard**

**2** அறை கொண்ட தொடர் மாடிக் கட்டடத்தில் 1 **water heater** அறை வாடகைக்கு உண்டு.

**Close to Kennedy Subway & Rt (McCowan RT). Includes: Internet, TV, TP, Radio.**

**1 Person - $1000  2 people - $1200 (Tamil people)**

தொடர்புகளுக்கு: **416-752-4444  416-857-5252**

## LOYAL PEST CONTROL

Licensed / Experienced Service Technician
உங்கள் வீடுகளில் மூட்டைப் பூச்சி, கரப்பான், பூச்சி, மற்றும் எலிகள் தொல்லையினை முழுமையாக ஒழித்திட எம்மை நாடுங்கள்.



Residential, Commercial, Industrial Elimination of Roaches & Mice

**RANJAN: (416) 464-2415**

## இந்தியன் விசா

- AIR TICKETS
- OCI - NEW APPLICATION/RENEWAL
- ENTRY VISA
- BUSINESS VISA 3 MONTHS/6 MONTHS/ 1 YEAR (Single / Double / Multy)

இலங்கை நாட்டுக்குள் உள் நுழைய, வெளிச்செல்ல தேவையான அரசாங்க ஆலோசனை வழங்கப்படும்.

**YARA GLOBAL (PVT) LTD**
No. 35, 1/4, Sagara Road, Colombo 4, Sri Lanka.
தொடர்பு: +94 7777 728707
E-mai: info@yaraglobal.lk



பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com


# மனித உரிமைகள் பேரவையுடன் ஆக்கபூர்வமாக இணைந்து செயற்படுமாறு இலங்கை அரசைக் கோரியுள்ள சர்வதேச மன்னிப்புச்சபை

AMNESTY INTERNATIONAL

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையுடன் ஆக்கபூர்வமான வகையில் இணைந்து செயற்படுமாறு இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தும் அதே-வேளை, புதிய பிரேரணையில் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கும் மனித உரிமைகள் நிலைவரங்களைக் கண்காணிப்பதற்கு அனுமதியை வழங்குமாறும் இலங்கை அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கின்றோம். இதிலிருந்து தவறும் பட்சத்தில் மனித உரிமைகள் பேரவையினால் சுயாதீனமான பொறுப்புக்கூறல் பொறிமுறையொன்று நிறுவப்படுவதற்கும் மேலும் வலுவான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்கும் வாய்ப்புக்கள் உள்ளன என்று சர்வதேச மன்னிப்புச்சபை இலங்கையின் பொறுப்புக் கூறல் தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

கடந்த செவ்வாய்கிழமையன்று ஜெனிவாவில் உள்ள் ஐக்கியநாடுகள் சபையில் கொண்டு வரப்பட்ட இலங்கைக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட்ட நிலையில், இது தொடர்பாக சர்வதேச மன்னிப்புச் சபையின் தலைமையகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்டிருக்கும் புதிய தீர்மானம் மிகமுக்கியமான முன்நகர்வு என்பதுடன் நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்டுவருகின்ற, 30 வருடகாலப்போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதி வழங்கப்படும் என்ற நம்பிக்கையையும் ஏற்படுத்தியிருக்கின்றது. அதுமாத்திரமன்றி புதிய பிரேரணையில் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும் என்று வலியுறுத்துப்படுகின்றது. அவ்வாறு, அதிலிருந்து தவறும் பட்சத்தில் மனித உரிமைகள் பேரவையினால் சுயாதீனமான பொறுப்புக்கூறல் பொறிமுறையொன்று நிறுவப்படக்கூடும். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட 46/1 பிரேரணை கடந்த செவ்வாய்கிழமையன்று 11 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் ஊடாக இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் சர்வதேசத்தின் கண்காணிப்பிற்கு உட்படுத்தப்படுவது மாத்திரமன்றி, நீதியையும் பொறுப்புக்கூறலையும் நிலைநாட்டுவதற்கான ஆதாரங்களை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் அலுவலகம் திரட்டுவதற்கும் வாய்ப்பு ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டுள்ளது.

சர்வதேச சமூகத்தின் அணுகுமுறையில் ஏற்பட்டுள்ள மாற்றத்திற்கான அடையாளமாக விளங்கும் இந்தத் தீர்மானம் மனித உரிமைகள் பேரவையினால் முன்னெடுக்கப்பட்டுள்ள முக்கிய நகர்வாகும். இலங்கைக்குள் தேசிய ரீதியான செயற்பாடுகள் மூலம் நீதியை நிலைநாட்டுவதற்குப் பலவருடகாலமாக ஆதரவு வழங்கப்பட்டுவந்த போதிலும், அதனால் எவ்வித பயனும் கிட்டவில்லை.

கடந்த காலத்தில் இடம்பெற்ற மற்றும் தற்போது இடம்பெறும் மீறல்களுக்குப் பொறுப்பானவர்கள் தொடர்ந்தும் தண்டனைகளிலிருந்து தப்பிக்கும் நிலை தொடர்வதற்கு அனுமதிக்கமுடியாது என்ற தெளிவாக சமிக்ஞை இந்தத் தீர்மானத்தின் ஊடாக வெளிப்படுத்தப்பட வேண்டும். இந்தத் தீர்மானத்தின் ஊடாக இலங்கையின் மனித உரிமை நிலைவரங்கள் கண்காணிக்கப்படுவதுடன் கடந்தகால மீறல்கள் தொடர்பான ஆதாரங்கள் திரட்டப்படும்.

அத்தோடு இது ஐக்கிய நாடுகளின் உறுப்புநாடுகள் ஒன்றிணைந்து சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் மூலமான சர்வதேச விசாரணை உள்ளிட்ட அடுத்தகட்ட நகர்வுகளை மேற்கொள்வதற்கான அடித்தளமாக அமையும். கடந்த காலத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் குற்றங்கள் தொடர்பில் நீதியைப் பெற்றுக்கொடுப்பதற்கான செயற்பாடுகள் தற்போதைய அரசாங்கத்தினால் மறுக்கப்பட்டு வருகின்றமையை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் அலுவலகம், சர்வதேச மன்னிப்புச்சபை ஆகியவை கடுமையாகக் கண்டனம் செய்திருந்த பின்னணியிலேயே இந்தப் புதிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

புதிய தீர்மானம் தொடர்பில் ஜெனிவாவில் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுவந்த காலப்பகுதியில் இலங்கை அரசாங்கம் அவற்றை முழுமையாக நிராகரித்தது. அதே-வேளை சிறுபான்மையினரை இலக்குவைக்கும் நடவடிக்கைகள் மூலமாக புதியதொரு தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டியதன் அவசியத்தையும் அரசாங்கமே ஏற்படுத்தியது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையுடன் ஆக்கபூர்வமான வகையில் இணைந்து செயற்படுமாறு இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தும் அதே-வேளை, புதிய பிரேரணையில் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கும் மனித உரிமைகள் நிலைவரங்களைக் கண்காணிப்பதற்கு அனுமதியை வழங்குமாறும் இலங்கை அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கின்றோம். இதிலிருந்து தவறும் பட்சத்தில் மனித உரிமைகள் பேரவையினால் சுயாதீனமான பொறுப்புக்கூறல் பொறிமுறையொன்று நிறுவப்படுவதற்கும் மேலும் வலுவான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்கும் வாய்ப்புக்கள் உள்ளன என்று மன்னிப்புச்சபையின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.


## பெண்களுக்கு வேலைவாய்ப்பு

ஸ்காபுறோவில் உள்ள தொழிற்சாலை ஒன்றில் உடனடியாக வேலைவாய்ப்புக்கள் உள்ளன.

தயவு செய்து பெண்கள் மட்டுமே விண்ணப்பிக்கவும்.

விபரங்களுக்கு: ஜெயா
647 669 2739
**(647) 669-2739**

## மணமகள் தேவை

கனடாவில் மகளுடன் நிரந்தரமாக வசிக்கும் பெற்றோர் இலங்கையில் வசிக்கும் கணனி தொழில் நுட்பவியாளராக பணிபுரியும், 5'6" உயரமும், மெல்லிய சிவந்த ஆழகிய தோற்றமுடைய தமது 31 வயது இந்து வேளாளர் குல மகனுக்கு கனடா, லண்டன், சுவிஸ், பிரான்ஸ் போன்ற நாடுகளிலிருந்து நற்குணமுடைய மணமகளைத் தேடுகின்றனர்.

தொடர்புகளிற்கு:
**(437) 237-5105**
Email: kirijah.ontario@gmail.com

# COVID-19 தடுப்பூசிகள் பாதுகாப்பானவை என்று நான் அறிந்து கொள்வது எப்படி?

Health Canada பாதுகாப்பான, பயனுள்ள உயர் தரமுள்ள தடுப்பூசிகளுக்கு மாத்திரமே அனுமதி வழங்குகிறது. கனடாவின் உயர் தரத்திலான, கடுமையான தடுப்பூசி மீளாய்வுச் செயன்முறைக்கு உலகம் முழுவதிலும் அங்கீகாரம் உள்ளது.

Canada.ca/covid-vaccine இணையத்தளத்தில் **COVID-19 தடுப்பூசிகள் தொடர்பில் மேலும் அறிந்து கொள்ளுங்கள்.**

1-833-784-4397



Government of Canada Gouvernement du Canada

Canada

# ஐ.நா தீர்மானம் இலங்கைக்கு தோல்வி, ஆனால் தமிழர்களுக்கு நீதிகிட்டவில்லை என்கிறது நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்

அனைத்துலக அரங்கில் இலங்கைக்கு ஏற்பட்ட தோல்வியாக, ஐ.நா மனித உரிமைச்சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் அமைந்துள்ளதென தெரிவித்துள்ள நாடுகடந்த தமிழீழ அரசாங்கம், இந்த தோல்வி தமிழர்களுக்கு நீதி கிட்டியுள்ள அளவிற்கு மாறவில்லை என்பதோடு பொறுப்புக்கூறலை அந்த படுகொலைகளுக்கு பொறுப்பான அரசி-டமே கொடுக்கின்ற ஓர் வலுவற்ற தீர்மானம் என்றும் தெரிவித்துள்ளது.

ஐ.நா மனித உரிமைச்சபையில் பிரித்தானியா தலைமையிலான கூட்டுநாடுகளால் முன்வைக்கப்பட்ட இலங்கை தொடர்பிலான தீர்மானத்துக்கு A/HRC/46/L.1 ஆதரவாக 22 நாடுகளும், எதிராக 11 நாடுகளும் வாக்களித்திருந்தன. வாக்கெடுப்பில் 14 பங்கேற்கவில்லை.

அண்மைக்காலத்தில் அனைத்துலக அரங்கொன்றில் இலங்கைக்கு ஏற்பட்ட தோல்வியாக இது இருந்தாலும், முன்னைய தீர்மானங்களை விட, வலுவற்ற நீர்த்துப்போன ஓர் தீர்மானமாக இது உள்ளதெனவும் நாடுகடந்த தமி-ழீழ அரசாங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த காலத்தில் இலங்கை சாமார்த்தியமாக "பயங்கரவாதத்தின் மீ-தான போர்" என்று பூச்சாண்டி காட்டி உத்திகளைக் கையாண்டது. 2015ல் ஏமாற்று அரசியலைக் கையாண்டு ஐ.நா மனித உரிமைசபையின் 30/1 தீர்மானத்தைப் பிற நாடுகளுடன் கூட்டாக முன்மொழிந்து விட்டு, அதனைச் செயலாக்காமல் அனைத்துலக சமூகத்தினை சமாளித்ததென நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தெரிவித்துள்ளது.

ஏற்கெனவே தங்களிடம் சான்று இருப்பதாக ஐ.நா மனிதவுரிமைச் சபையின் துணை ஆணையாளர் மெர் கான் வில்லியம்ஸ் கூறியுள்ள போதிலும், புதிய தீர்மானத்தில் ஒரு கூறு "ஐ.நா ஆணையாளர் அலுவலகம் தகவலும் சான்றும் திரட்டவும் ஒருங்கமைக்கவும் பகுத்தாராயவும் பாதுகாக்கவும் வேண்டும்" என்று கேட்டுக் கொள்வதாக உள்ளது. இது பாதிக்கப்பட்ட தமிழர்களை ஆற்றுப்படுத்துவதற்காக சேர்க்கப்பட்ட வெற்றுக்கூடான உள்ளடக்கமாக இது தோன்றுகிறது எனவும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தெரிவித்துள்ளது.

மேலும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, ஐ.நா மனிதவுரிமைப் சபையில் இலங்கைக்கு ஏற்பட்டுள்ள இந்த தோல்லி, அனைத்துலக இராஜதந்திர தளத்தில் இலங்கை ஒதுக்கி வைக்கப்பட்ட அரசாகிக் கொண்டிருப்பதை வெளிக்காட்டுகின்றது.

இந்தத் தீர்மானம் இலங்கை விவகாரத்தில் பின்னோக்கி சென்றுள்ளது. பொதுநலவாய நாடுகளைச் சேர்ந்த நீதிபதிகளும் அயல்நாட்டு நீதிபதிகளும் பங்கேற்கக வேண்டுமென 2015ம் ஆண்டு தீர்மானம் இலங்கையின் பொறிமுறை-யிடமே விட்டுவிடுகிறது. நாகரீக நாடுகளின் சட்டப்புத்தகங்களில் அசிங்கமான கறையாக வர்ணிக்கப்படும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தைப் பொறுத்த வரை, 2015 தீர்மானத்தில் இடம்பெற்ற "நீக்கம்" என்ற சொல் இன்றைய தீர்மானத்தில் காணப்படவில்லை.

இலங்கை அரசாங்கத்தின் உயர்நிலையில் இருப்பவர்கள் போர்க்குற்றங்கள் புரிந்திருப்பதைத் தெளிவாகக சுட்டிகாட்டும் வகையில் ஐ.நாவின் மூன்று அறிக்கைகள் உள்ளன. (ஐநா வல்லுநர் குழு அறிக்கை, உள்ளக ஆய்வறிக்கை (பெட்ரி அறிக்கை எனப்படுவது), சிறிலங்கா தொடர்பான மனிதவுரிமை ஆணை-யாளர் அலுவலக OISL அறிக்கை).

இலங்கையை அனைத்துலகக் குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்தவும், உலகளாவிய மேலுரிமையினை இலங்கை தொடர்பில் அனைத்துலக சமூகம் செலுத்த வேண்டும் என ஐநா உயராணையர் மிசேல் பசலே ஏற்கெனவே விடுத்த அழைப்பில் தெரிவித்துள்ளார்.

ஐ.நா மனித உரிமைச்சபையின் 4 முன்னாள் ஆணையாளர்களும், சிறிலங்காவுக்குச் சென்றுவந்த 13 முன்னாள் ஐநா சிறப்பு அறிக்கையாளர்களும், சிறிலங்கா தொடர்பான ஐநா பொதுச் செயலரின் வல்லுநர் குழுவில் இடம்பெற்ற 3 உறுப்பினர்களும் சிறிலங்காவை அனைத்துலகக் குற்றவியல் நீதிமன்றத்தின் பார்வைக்கு அனுப்பக் கோரியிருந்தார்கள். நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் 2011ம் ஆண்டில் இருந்து கோரிவருகின்றது.

தற்போதைய ஐ.நா கூட்டத் தொடரிமை மையப்படுத்தி தாயக தமிழர் அரசியல் தரப்புக்களும், தமிழ் சிவில் சமூகமும், தமிழ் சமயத் தலைவர்களும், புலம்பெயர் தமிழர் அமைப்புக்களும், தமிழுலகமும், உட்பட பலரும தமது முதன்மைக் கோரிக்கையாக இதனை முன்வைத்திருந்தனர்.

சிறிலங்காவை அனைத்துலகக் குற்றவியல் நீதிமன்றத்தில் கொண்டுபோய் நிறுத்துவதற்குத் தேவைப்படுவது நாடுகளிடத்திடத்தில் அரசியல் மனத்திட்பம்தானே தவிர புதிய செயல்திட்டமன்று.

அரசுகளின் கட்டுப்பாட்டிலுள்ள மன்றங்களில் நீதி பெறுவதில் அரசுகளற்ற தேசங்கள் சந்திக்கும் சவால்களை ஐநா மனிதவுரிமைச் சபையின் இன்றைய தீர்மானம் காட்டுகிறது.

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகான காலத்தில் ஐக்கிய நாடுகள் அமைப்பும் உலகச் சமுதாயமும் சுயநிர்ணய உரிமையை ஓர் அடிப்படைக் கொள்கையாக ஏற்றுள்ள போதிலும், அதனை நீதிநோக்கில் பயன்படுத்தும் முயற்சியை இப்போதிருக்கும் அரசுகள் தமது நலன்களின் அடிப்படையில் வழிமறிப்பதே வாடிக்கையாக இருந்து வருகிறது.

இந்தத் அரசுகள் தமது "இறைமையையும்" "ஆட்சிப்புலக் கட்டுக்கோப்பையும்" கட்டிக் காப்பதன் போர்வையில், நாசிக் கொடுமைகளை நினைவுபடுத்தும் இனஅழிப்புக்களையும், மானிடக்குற்றங்களை நடத்தத் தயங்குவதில்லை. மனித-வுரிமைகள் பற்றியும் ஜனநாயகம் பற்றியும் நீட்டி முழக்கும் உலக அரசுகள் தம் புவிசார் அரசியல் நலன்களுக்காக இந்தக் குற்றங்களைக் கண்டுகொள்வதில்லை என நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தெரிவித்துள்ளது.

# ஜெனிவாவில் இலங்கை அரசிற்கு எதிராக வாக்களித்த 22 நாடுகள்

House of Commons
Chambre des communes
Canada
Gary Anandasangaree
Member of Parliament
Scarborough—Rouge Park

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை-யின் 46/1 தீர்மானம் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி வெளியிட்ட அறிக்கை.

மார்ச் 23, 2021

ஸ்காபறோ-ரூஜ் பார்க் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி பின்வரும் அறிக்கையை இன்று வெளியிட்டார்:

"ஜெனிவாவில் இன்று 22 பெரும்பான்மை வாக்குகள் ஆதரவாகவும், 11 வாக்குகள் எதிராகவும் அளிக்கப்பட்டும், 14 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமலும் நிறைவேற்றப்பட்ட ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் தீர்மானம் இலங்கையில் இடம்பெற்ற பாரிய மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்புக்கூறலை அடைவதற்கான முக்கியமான ஒரு முன்னேற்றப்படியாகும். பொறுப்புக்கூறலை முன்னேற்றுவதற்கு இலங்கை தவறியுள்ளதை இந்தத் தீர்மானம் காட்டுகிறது. இந்தத் தீர்மானம் மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஆணையாளரின் கண்காணிப்பில் மேலதிகமாக சுதந்திரமான, சர்வதேச விசாரணை ஒன்றை உருவாக்கிறது. இந்தத் தீர்மானம், மேலதிக பொறுப்புக் கூறல் நடவடிக்கைகளுக்கான மூலோபாயங்களை முன்வைக்குமாறும், பேரவைக்குக் கிரமமாக அறிக்கையிடுமாறும் உயர் ஆணையாளருக்கு ஆணையிடுகிறது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை 2009 ஆம் ஆண்டு இந்த விடயத்தை எடுத்துக்கொண்ட பின்னர் நிறைவேற்றப்பட்ட மிகப் பலமான தீர்மானமாக இது அமைகிறது.

இலங்கை குறித்த மையக் குழுவின் நாடுகளின் கடின உழைப்பையும், அவர்கள் வழங்கிய தலைமைத்துவத்தையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்தத் தீர்மானத்தைப் பலப்படுத்தி நிறைவேற்றுவதற்கு ஜெனிவாவிலும், கொழும்பிலும் உள்ள கனேடிய தூதரகங்களும், கனேடிய வெளியுறவு அமைச்சர் மார்க் கார்னோவும் (Marc Garneau), நாடாளுமன்ற செயலாளர் றொப் ஒலிஃபண்டும் (Rob Oliphant), மையக் குழுவுடன் இணைந்து கவனத்துடன் பணியாற்றினார்கள். அவர்களது முயற்சிகளுக்கு நான் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கிறேன்.

இந்தத் தீர்மானம் இலங்கையில் புரியப்பட்ட அட்டூழியங்களால் பாதிக்கப்பட்டோருக்கும், தப்பிப்பிழைத்தோருக்கும் நீதி கிடைப்பதை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டது. இலங்கையில் தமிழ் மக்கள் மீது போர்க் குற்றங்களையும், மனித இனத்துக்கு எதிரான குற்றங்களையும், இனப்படுகொலையையும் புரிந்தவர்கள் நீதியில் இருந்து தப்பிவிட முடியாது. இன்றைய தீர்மானம் எங்களை அதற்கு ஒரு படி நெருக்கமாகக் கொண்டு செல்கிறது. உயர் ஆணையாளருக்கு வழங்கப்பட்ட புதிய ஆணைக்கு ஒத்துழைக்குமாறு அனைவரையும் நான் ஊக்குவிக்கிறேன். நாம் இலங்கையில் புரியப்பட்ட மீறல்களுக்குப் பொறுப்புக் கூறலைத் தொடர்ந்து கோருவதுடன், இந்த விடயத்தைச் சர்வதேச சமூகத்தின் நிகழ்ச்சி நிரலில் தொடர்ந்து வைத்திருப்போம்."



-30-

---

Statement on human rights in Sri Lanka by MP Gary Anandasangaree

March 23, 2021

Member of Parliament for Scarborough-Rouge Park, Gary Anandasangaree, today issued the following statement:

"The United Nations Human Rights Council Resolution 46/1, passed today in Geneva by a majority of 22 votes in favour, 11 against, and 14 abstentions is an important step forward towards attaining accountability for gross violations of human rights in Sri Lanka. The resolution is recognition of Sri Lanka's failure to advance accountability. It establishes an additional independent, international, investigation under the auspices of the United Nations High Commissioner for Human Rights. It mandates the High Commissioner to offer strategies for further accountability measures and with regular reporting to Council.

This is the strongest resolution since the UNHRC took up the matter in 2009.

I would like to acknowledge the members of the core group for their hard work, and leadership. Canada's Mission in Geneva and Colombo, along with Canada's Foreign Minister Marc Garneau and Parliamentary Secretary Rob Oliphant worked diligently with the Core Group to strengthen and pass the resolution. I thank them for their efforts.

Ultimately, this resolution is about ensuring justice for the victims and survivors of the atrocities committed in Sri Lanka. Those who committed war crimes, crimes against humanity, and genocide against the Tamil people in Sri Lanka cannot, and will not evade justice. The resolution today takes us one step closer. I encourage all to cooperate with the High Commissioner's new mandate. In this regard, we will continue to seek accountability for violations in Sri Lanka and keep this issue alive on the international agenda. "

-30-

# தமிழ் கட்சிகள் கூட்டுப்பொறுப்போடு, தமிழ் மக்களின் எதிர் கால நலனை கருத்தில் கொண்டு பணியாற்ற வேண்டும்



## தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ். சிவகரன்

சர்வதேச அரங்கில் இராஜதந்திர ரீதியாக இலங்கைக்கு ஒரு தோழ்வியை ஏற்படுத்தியுள்ளதாகவே இந்த பிரேரணை இருக்கின்றதே தவிர பாதீக்கப்பட்ட தரப்பிற்கு ஒரு நியாயம் கிடைக்கக்கூடிய வகையில் அல்லது பாதீக்கப்பட்ட தரப்பு எதிர் பார்க்கக்கூடிய அளவில் நீதியின் தன்மை வெளிப்படுத்தப்பட்டதாக இல்லை என தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் தெரிவித்தார்.

மன்னாரில் வியாழக்கிழமை காலை இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போ-தே அவர் அவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், ஜெனிவா கூட்டத்தொடர் செவ்வாய்க்கிழமை நிறை வடைந்துள்ளது. 46/1 தீர்மானம் நிறை வேற்றப்பட்டுள்ளது.

இந்த தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டிய வழிமை தொடர்பாக கடந்த ஜனவரி மாதம் பிரதான மூன்று தமிழ் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புக்களை ஒன்றிணைத்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையகத்தில் எவ்வாறான தீர்மானம் கொண்டு வரப்பட வேண்டும் என பாதீக்கப்பட்ட தரப்பினர் சார்பாக தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில், இணை அனுசரனை நாடுகளுக்கும், பிரதானமாக பிரேரணையை கொண்டு வந்த நாடுகளுக்கும் முன் யோசனைகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

ஆனால் எங்களுடைய எதிர்ப்பார்ப்புக்கள் முழுமையாக பூர்த்தி செய்யப் பட்டிருக்கக்கூடிய நிலமையில் முடிவுறுத்தப்பட்ட பிரேரணை இல்லை. எனி-னும் இலங்கையை சர்வதேச அரங்கில் இராஜதந்திர ரீதியாக இலங்கைக்கு ஒரு தோல்வியை ஏற்படுத்தியதாகத்தான் இந்த பிரேரணை இருக்கின்றதோ தவிர பாதீக்கப்பட்ட தரப்பிற்கு ஒரு நியாயம் கிடைக்கக்கூடிய வகையிலோ அல்லது பாதீக்கப்பட்ட தரப்பு எதிர் பார்க்கக்கூடிய அளவில் நீதியின் தன்மை வெளிப்படுத்தப்பட்டதாகவும் இல்லை.

பூகோள அரசியலின் பிரகாரம் இரு துருவ அரசியல் போக்கின் அடிப்படையில் அமெரிக்கா சார்பு, சீன சார்பு என்கின்ற இரண்டு சார்பு நிலைகளுக்குள் இந்த பிரே-ரணை நிறை வேற்றப்பட்டுள்ளது. குறைந்த பட்சம் 30/1 தீர்மானத்தினுடைய அளவு கூட 46/1 தீர்மானத்தின் உள்ளடக்கம் காணப்படவில்லை. குறிப்பாக சாட்சியங்களை பதிவு செய்தலும், பாதுகாத்தலும் என்கின்ற பொறிமுறையை தவிர ஏனைய பொறி-முறைகள் இந்த தீர்மானத்தின் வரைபில் இல்லை.

குறித்த திருத்தத்தைக் கூட எவ்வாறு முன்னெடுக்கப்போகின்றார்கள்? அதற்கான பொறிமுறைகள் என்ன? அதற்கு எவ்வாறு பெயரிடப் போகின்றார்கள் என எதிர் பார்க்கப்படுகின்றது. ஆனால் அவ்வாறு இருக்குமா என தெரியவில்லை. இந்த விடையங்கள் வெளி வரவில்லை. இருந்தாலும் ஹங்காரு நீதிமன்ற செயல் போல் குற்றவாளியே குற்றவாளியை விசாரிக்கின்ற நிலை போல் குறித்த தீர்மானத்தின் நிலைப்பாடு காணப்படுகின்றது.

அத்தீர்மானம் பாதீக்கப்பட்ட தரப்பினருக்கு எவ்வாறான நியாயத்தை கற்பிக்கப் போகின்றது என தெரியவில்லை. கடந்த காலத்தில் தரசுமன் அறிக்கையின் செயல்பாடுகளும் கூட சர்வதேச அளவில் முன்னெடுக்கப்பட்ட விசார-னையாக இருந்தும் கூட அதுவும் காணாமல் போய் விட்டது. இதன் பிரகாரம் உள் நாட்டில் உறுவாக்கப்பட்ட எல்.எல்.ஆர்.சி, பரன கம ஆணைக்குழு ஆகிய இரண்டு அறிக்கைகளின் முடிவுகளும் இந்த நாட்டிலே நடை முறைப் படுத்தப்படவில்லை.

ஜெனிவா தீர்மானத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகத்தினுடைய செயல்பாடு மிக மோசமான விளைவையே ஏற்படுத்தியுள்ளது. மொத்தத்தில் நல்லிணக்கம் என்கின்ற நிலைமாறு கால நீதி பொறிமுறை கூட இலங்கையில் தோற்று விட்ட இந்த சூழ் நிலையில் கடந்த 11 ஆண்டுகளில் பாதீக்கப்பட்ட தரப்பினருக்கு எவ்வாறான நியாயத்தையும் கற்பிக்கவில்லை.

கடந்த மூன்று ஆண்டுகளாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவகளி-னது போராட்டம் இடம் பெற்று வருகின்ற சூழ் நிலையிலும், அரசியல் கைதிகளின் போராட்டம் தொடர்கின்ற சூழ் நிலையிலும், யுத்தத்தில் கொல்லப்பட்ட அல்லது காணாமல் ஆக்கப்பட்ட ஒரு இலட்சத்து 46 ஆயிரத்து 679 நபர்களின் நிலை என்ன என்கின்ற கேள்விக்கு சர்வதேச சமூகத்தினால் அல்லது மனித உரிமைகள் ரீதியாக முன்னெடுக்கின்ற நாடுகள் பாதீக்கப்பட்ட தரப்பிற்கு ஒரு நீயாய பூர்வ விடையத்தை கற்பிக்கக் கூடியதாக இல்லை.

தீர்மானத்தை நாங்கள் மகிழ்வுடன் வரவேற்கக்கூடிய நிலையில் இல்லை. எங்களினுடைய எதிர்பார்பில் பல அம்சங்கள் இல்லை. சர்வதேச அரங்கில் இலங்கையை ஒரு குற்றவாளிக் கூண்டில் நிறுத்தக்கூடிய நிலைப்பாட்டில் சர்வதேச ரீதியாக இலங்கையின் போர்க்குற்ற விவகாரம் ஒரு விவாத பொருளாக இருக்கின்றது என்பதில் மட்டுமே திருப்தி கொள்ள முடியும்.

ஏனைய விடையங்களில் திருப்தி கொள்ளக் கூடிய நிலை இல்லை. இரு நாடுகள் சம்மந்தப்பட்ட விடையம். அந்த நாடுகள் தங்களின் நலனின் அடிப்படையில் இவ்வாறான தீர்வுகளை அவர்கள் முன்னெடுப்பதினால் தான் இந்த நிலைமை காணப்படுகின்றது.

இந்தியா இந்த விடையத்தில் நடு நிலை வகித்துள்ளது. இதனை மிக மோசமானா செயலாகவே பார்க்கின்றோம். பிரேரணையை ஆதரித்திருக்க வேண்டும். அல்லது எதிர்த்திருக்க வேண்டும். இலங்கைக்கு சார்பாக ஒரு நிலைப்பாட்டை எடுக்கக்கூடிய பூகோள அரசியலினுடைய ஒரு சித்தார்ந்தத்திலேயே இந்தியா இவ்வாரான நடவடிக்கையை முன்னெடுத்துள்ளது.

இந்தியாவிற்காக பரிந்து பேசுகின்ற தமிழ் கட்சிகள் அல்லது வடக்கின் மூன்று தீவுகளை சீனாவுக்கு கொடுக்கப் போகின்றார்கள் என போரட்டத்தை முன்னெடுத்த தமிழ் கட்சிகள் இன்றும் கூட இந்தியாவிற்கு ஆதரவான நிலைப்பாட்டில் இருக்கின்றனர் என்ற சூழல் மிக வேதனையளிக்கின்றது. சீனா ஒரு வலுவான நிலைப்பாட்டில் இலங்கைக்கு ஆதரவாக வந்துள்ளதோ அதே போல் ஒரு நிலைப்பாட்டில் இந்தியாவும் செயற்பட்டிருக்க வேண்டும்.

பாதீக்கப்பட்ட தமிழர் தரப்பிற்கு ஒரு நீதியை பெற்றுக்கொடுக்கின்ற நிலைப்பாடாக முன்னெடுக்கப்பட்டிருக்க வேண்டுமே தவிர இந்தியா மீண்டும், மீண்டும் அவர்கள் சீனா பக்கம் சென்று விடுவார்கள் என்கின்ற ஒரே நிலைப்பாட்டிற்காக இந்தியா இவ்வாறு மதில் மேல் பூனையாக இருப்பது மிகவும் வருந்தத்தக்க விடையமாக உள்ளது.

அவர்களுக்காக எம்மவர்கள் பரிந்து பேசுவது அதனை விட மோசமான விடையமாக உள்ளது. மிகப் பெரிய நாடு இந்தியா. ஜெனிவா சென்று மிகச் சிறிய இலங்கைக்காக 13 ஆவது சரத்தை நடை முறைப்படுத்துங்கள். மாகாண சபை தேர்தலை நடத்துங்கள் என்று கேட்பது இந்தியாவின் இராஜ தந்திரத்தின் மிகப் பெரிய தோழ்வியும், பின்டைவாகவுமே பார்க்கக்கூடியதாக உள்ளது.

இவ்விடையத்தில் தமிழர் தரப்பு எதிர் காலத்தில் ஐக்கியமாகவும், ஒற்றுமையாகவும், இணைந்து செயல் பட வேண்டிய பொறுப்பும், தார்மிக கடற்பாடும் எங்களுக்கு உள்ளது. இவ்வாறு இல்லாது விட்டால் எதிர் காலத்தில் இதன் விளைவுகளை நாங்கள் எவ்வாறு எதிர் கொள்ள போகின்றோம் என்கின்ற நிலை எங்களுக்கு உண்டு.

கட்டமைக்கப்பட்ட இன அழிப்பை எதிர் கொண்டுள்ள சமூகம் எல்லோறும் ஐக்கியத்துடன் இயங்க வேண்டும். ஜெனிவா விடையத்தில் நாங்கள் ஒரு கடிதம் அனுப்பி இருந்தோம். ஏனைய கடிதங்கள் அனுப்புகின்ற விடையத்தில் கட்சிகளுக்குள் முறண்பாடுகள் ஏற்பட்டு விட்டது.

தமிழ் தேசியக்கூட்டமைப்பு பேசிக்கொண்ட நிலைப்பாட்டிற்கு அப்பால் தாங்கள் சுயாதீனமாக ஏனைய நாடுகளுக்கு ஒரு கடிதம் அனுப்ப முற்பட்டமையும், சுயாதீனமாக சந்திப்புக்களை மேற்கொண்டு விடையங்களை தனித்துவமாக முன்னெடுக்க முற்பட்டமையும் கூட்டுப் பொறுப்பில் இருந்து விலகுகின்ற நிலையா-கும்.

தாங்கள் மாறுபட்ட கருத்துக்களை ஊடகங்கள் மூலம் மாறி மாறி குற்றம் சாட்டுவதையும் நிறுத்திக்கொள்ள வேண்டும். கூட்டுப்பொறுப்போடும், ஐக்கியத்தோடும்,தமிழ் மக்களின் எதிர் கால நலனை கருத்தில் கொண்டு விட்டுக் கொடுப்போடு எல்லோறும் இணைந்து பணியாற்ற வேண்டும் என்ற பொறுப்பு எல்லோர் மீதும் தினிக்கப்பட்டுள்ளது. தமிழ் கட்சிகள் எதிர் காலத்திலாவது தங்களின் நிலைப்பாட்டை புறிந்து கொண்டு செயற்பட வேண்டும்.

ஒன்றோடு, ஒன்று இணைந்து செயற்படுகின்ற போது, கூட்டுப்பொறுப்பை மதிக்கின்றவர்களாக இருக்க வேண்டும். அவ்வாறு இல்லை என்றால் எதிர் காலத்தில் இந்த நிலமைகளை எல்லாம் நாங்கள் எதிர் கொள்வதில் பல்வேறு விதமான சிரமத்தை எதிர் கொள்ள நேரிடும்.என அவர் மேலும் தெரிவித்தார்.

இதே வேளை குறித்த ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு மனித உரிமைகள் செயட்பாட்டாளர் அருட்தந்தை எஸ்.ஜெயபாலன் குரூஸ் அடிகளார் கருத்துக்களை முன் வைத்தமை குறிப்பிடத்தகக்து.

**- மன்னார் நிருபர் (25-03-2021)**

### பாச் சிமிழ்

புலம்பெயர்ந்து வாழும் சிறுவர் பட்டறிவிற்கு ஏற்ற

**சிறுவர் பாடலாக்கம்**

விரும்பிய யாரும் எழுதலாம்.

கொடுக்கப்படும் தலைப்பில் 4அடிகொண்ட 2 அல்லது 3 பாடல்கள்.

முதற் தலைப்பு: '**பனி**'ஏப்பிரல் 15க்கு முன் அனுப்பவேண்டும்

பாடல்கள் **பாச்சிமிழ்** என்னும் கையேடாக வெளிவரும்.

மேலதிக விவரங்களைப் பெற:

paachchimizh521@gmail.com (T.P.647-706-6124 )


TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE

எல்லாவிதமான வலிகளுக்கும் ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை மனத்தளர்ச்சி, தலைவலி, நீரிழிவு நோய், வயிற்றுவலி, மாதவிடாய் சம்மந்தமானவையும் உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும் Mrs. K. Vasanthakumar ஐ தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9







இந்திய செய்திகள்

# *இதுதான் மக்களாட்சியா* இந்திய குடிமகனாக குமுறுகிறேனென்கிறார் தங்கர் பச்சான்

ஏற்கெனவே தேர்தல் முறைகளில் செய்ய வேண்டிய சீர் திருத்தங்களைச் செய்யாமல் தேர்தல் ஆணையம் தேர்தலை நடத்தி முடித்துக்கொண்டேருக்கின்றது. கல்வி அறிவு இல்லாதவர்களுக்காகத்தான் சின்னங்களைப் பார்த்து வாக்களிக்கும் முறையைக்கொண்டு வந்தார்கள். இந்திய நாட்டில் 740 பல்கலைகழகங்கள் உருவானபின்னும் இன்னும் அதேமுறை தொடர்ந்து கொண்டிருக்கின்றது. இன்னும்கூட படிக்கத்தெரியாமல் வாழும் மக்கள் சின்னங்களைப் பார்த்து வாக்களிக்கும் முறை வேண்டும் என்பதால் தான் இம்முறை தொடர்கின்றது.

ஆனால் ஒவ்வொருக் கட்சிக்கும் நிரந்தரச் சின்னங்கள் ஒதுக்கப்படுவதும் அதனால் உண்மையான மக்களாட்சி உருவாக ஏற்பட்டுள்ள தடைகள் குறித்தும் தேர்தல் ஆணையம் சிந்திக்க வேண்டும். இனியாவது நிரந்தரச்சின்னங்களை ஒதுக்காமல் ஒவ்வொரு தேர்தலுக்கும் வேறு வேறு சின்னங்களை ஒதுக்க வேண்டும். இவ்வாறு செய்தாலே ஒவ்வொரு கட்சிகளின் நிரந்தரச் சின்னங்களுக்குப் பின்னாலும் ஒளிந்துகொண்டு மக்களை ஏமாற்றி சட்டமன்றத்திற்குள்ளும் ,நாடாளுமன்றதிற்குள்ளும் புகுந்துவிட்ட கொள்ளைக்காரர்களையும், திருடர்களையும், குற்றவாளிகளையும் அரசியலில் நுழையாமல் தடுத்து விடலாம்.

அதன் பின் மக்கள் நலனை சேவையாகக்கொண்டு அரசியல் செய்ய நினைப்பவர்கள் அரசியலை கையிலெடுப்பார்கள். இப்போது நிகழ்ந்து கொண்டிருக்கும் தேர்தல்கள் போல் மக்களிடமிருந்து கொள்ளையடித்தப் பணத்தையே மீண்டும் முதலீடு செய்து குற்றவாளிகளையும், கொள்ளைக்காரர்களையும், மக்கள் நலனுக்கு எதிரானவர்களையும், பணக்காரகளையும் மட்டுமே தேடிப்பிடித்து வேட்பாளர்களை நிறுத்தும் அரசியலைத் தொழிலாக நடத்தும் கட்சிகளிடமிருந்து மக்கள் தப்பிக்க முடியும்.

யார் யார் தேர்தல் முறைகளில் மாற்றத்தை விரும்பாதவர்களோ அவர்களிடம்தான் மக்களாட்சியின் திறவுகோல் தரப்படுகின்றது. அவர்கள் எப்படி எந்தக்கட்சிக்கும் நிரந்தரச் சின்னம் வேண்டாம் எனக்கூறி வாக்கெடுப்பு நடத்தி புதிய சட்டத்தை உருவாக்குவார்கள்? ஏறக்குறைய பாதி எண்ணிக்கைக்கும் கூடுதலான அளவில் குற்றவியல் வழக்குகளில் சிக்கியுள்ளவர்களைக் கொண்டுள்ள நாடாளுமன்றம் இவ்வாறான மாற்றங்களை எக்காலத்திலும் செய்யப்போவதில்லை! மிகக்கவனமாக அரசியல்வாதிகள் தொடர்ந்து மக்களை தங்களின் பிடிக்குள் வைத்துகொள்ளும் அரசியலை கையாண்டு வருகின்றனர்.

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரின் தகுதி என்ன? அவர் எப்படிபட்டவர்? அவர் எதற்காக கோடிக்கணக்கில் செலவழித்து தேர்தலில் போட்டியிடுகின்றார்? அவரிடத்தில் குவிந்துள்ளப் பணம் எங்கிருந்து வந்தது? என்பனக் குறித்தெல்லாம் சிந்திக்காமல் காலங்காலமாக இந்த சின்னத்திற்குத்தான் வாக்களிப்போம், அதேபோல் இந்த முறையும் அப்படியேதான் செய்வோம், அவர் எவ்வளவு கேடுகேட்டவராகவும் இருந்தாலும் அதுபற்றி எங்களுக்கு கவலையில்லை என நினைப்பர்களாகவே பெரும்பாலான வாக்காளர்கள் இருக்கின்றார்கள். தங்களின் வாக்குரிமையை வீணாக்குவதன் மூலம் மக்களுக்கு எதிரான தகுதியற்ற ஒருவரை தேர்ந்தேடுக்கின்றோமே எனும் புரிதல் கூட இல்லாததுதான் இம்மக்களாட்சியின் பெரும் சோகம்!

எந்தக்கட்சிக்கும் நிரந்தரச்சின்னம் ஒதுக்கக்கூடாது. ஒவ்வொரு தேர்தலுக்கும் குலுக்கல் முறையிலேயே சின்னங்கள் ஒதுக்கப்பட வேண்டும் என்பன போன்ற இன்னும் சில சீர் திருத்தங்களைச் செய்யாமல் எத்தனைத் தேர்தல் நடத்தினாலும் உருவாக்கப்படும் ஆட்சி என்பது உண்மையான மக்களாட்சியாகாது! பயந்து பயந்து திருடும் திருடர்களிடமே ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை திறவுகோலைக் ஐசாவியைஸ கொடுத்து விடும் செயலைப்போன்றதுதான் என்பதை எண்ணி ஒரு இந்தியக் குடிமகனாகக் குமைகின்றேன்!

# ஐ.நா. மனித உரிமை ஆணைய வாக்கெடுப்பிலிருந்து இந்தியா நழுவியமை தமிழக மக்களைப் புண்படுத்தும் செயலாகும் என பழ. நெடுமாறன் கண்டனம்

தமிழர் தேசிய முன்னணியின் தலைவர் பழ. நெடுமாறன் விடுத்துள்ள அறிக்கை: இலங்கையில் போர்க் குற்றங்கள் தொடர்பாக நடுநிலையான விசாரணையை இலங்கை அரசு நடத்தவேண்டும் என ஐ. நா. மனித உரிமை ஆணையத்தில் பிரிட்டன் உட்பட பல நாடுகள் இணைந்து கொண்டுவந்த தீர்மானத்திற்கான வாக்கெடுப்பில் பங்கேற்காமல் இந்திய அரசு புறக்கணித்திருப்பதை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

ஏற்கெனவே இதே போன்று ஒரு தீர்மானத்தை ஐ.நா. மனித உரிமை ஆணையம் நிறைவேற்றியிருந்த போதிலும், அதை இலங்கை அரசு செயல்படுத்தவில்லை. இப்போதும் செயல்படுத்துமா? என்பது ஐயத்திற்குரியதாகும்.

இலங்கையிலிருந்து தொலைதூரத்தில் உள்ள பிரிட்டன் உட்பட 22 நாடுகளின் ஆதரவுடன் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆனால், இலங்கைக்கு மிக அண்மையில் உள்ள இந்திய அரசு இப்பிரச்சனையில் உறுதியான நிலைப்பாடு எடுக்காமல் நழுவிவுள்ள செயல் தமிழ்நாட்டு மக்களின் உள்ளங்களை ஆழமாகப் புண்படுத்தியுள்ளது.

# இந்தியாவில் 4.2 கோடி பேருக்கு கொவிட் — 19 தடுப்பூசிகளை செலுத்தப்பட்டுள்ளது



கொவிட்-19 பெருந்தொற்றுக்கு எதிரான போராட்டத்தில் இந்தியா மேலும் ஒரு குறிப்பிடத்தக்க உச்சத்தை எட்டியுள்ளது. இதுவரை மொத்தம் நான்கு கோடிக்கும் அதிகமான தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன. இன்று காலை 7 மணி வரை, நாடு முழுவதும் 6,86,469 முகாம்களில் 4,20,63,392 பயனாளிகளுக்கு கொவிட் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. 77,06,839 சுகாதாரப் பணியாளர்களுக்கும் (முதல் டோஸ்), 48,04,285 சுகாதாரப் பணியாளர்களுக்கும் (இரண்டாவது டோஸ்), 79,57,606 முன்கள ஊழியர்களுக்கும் (முதல் டோஸ்), 24,17,077 முன்கள ஊழியர்களுக்கும் (இரண்டாவது டோஸ்), இதர உடல் உபாதைகள் உள்ள 45 வயதுக்கு மேற்பட்டோரில் 32,23,612 பேருக்கும் (முதல் டோஸ்), 60 வயதைக் கடந்த 1,59,53,973 பயனாளிகளுக்கும் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன. 2021 மார்ச் 18-ஆம் தேதி வரை நாடு முழுவதும் 3,93,40,000 தடுப்பூசிகள் செலுத்தப்பட்டன. இதன்மூலம் அதிக தடுப்பூசிகளை வழங்கிய நாடுகளுள் இந்தியா இரண்டாம் இடம் (அமெரிக்காவை அடுத்து) பிடித்துள்ளது. மகாராஷ்டிரா, பஞ்சாப், கர்நாடகா, குஜராத் மற்றும் மத்தியப் பிரதேசத்தில் அன்றாட புதிய பாதிப்புகள் அதிகரித்துள்ளன. கடந்த 24 மணி நேரத்தில் 40,953 புதிய பாதிப்புகள் நாட்டில் ஏற்பட்டுள்ளன. அதிகபட்சமாக மகாராஷ்டிராவில் 25,681 பேரும், பஞ்சாபில் 2,470 பேரும், கேரளாவில் 1,984 பேரும் புதிதாக தொற்றுக்கு ஆளாகியுள்ளனர். தமிழகம் உள்ளிட்ட எட்டு மாநிலங்களில் புதிய பாதிப்புகள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன.

இந்தியாவில் தற்போது 2,88,394 பேர் கொரோனா தொற்றுக்கு சிகிச்சை பெற்று வருகின்றனர். இது நாட்டின் ஒட்டு மொத்த பாதிப்பில் 2.50 சதவீதமாகும். இந்தியாவில் குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 1,11,07,332 ஆக (96.12%) இன்று பதிவாகியுள்ளது. கடந்த 24 மணிநேரத்தில் 23,653 பேர் புதிதாகக் குணமடைந்துள்ளனர். கடந்த 24 மணி நேரத்தில் கொவிட்-19-ஆல் 188 உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன.



# மோடி அரசு, தமிழர்களின் விரோதி என்பது மீண்டும் நிரூபணமாகியுள்ளதென்கிறார் வேல்முருகன்

சிங்கள பேரினவாத அரசுக்கு மறைமுகமாக மோடி அரசு துணை போய் உள்ளது. கடந்த 2008-2009-ல் ஈழத்தில் சுமார் 1.70 இலட்சம் தமிழர்களை சிங்கள பேரினவாத அரசும், அந்நாட்டின் ராணுவமும் சுட்டுக்கொன்றது. ஆயிரக்கணக்கான தமிழ்ப் பெண்கள் பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாகினர். விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் அவர்களின் மகன் பாலச்சந்திரன் உள்பட ஆயிரக்கணக்கான சிறுவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர். இது தொடர்பாக, சிங்கள பேரினவாத அரசுக்கு எதிரான குற்றங்களை விசாரிக்க கோரியும், ராஜ பக்சே-வை குற்றவாளிகள் கூண்டில் ஏற்றக்கோரியும், உலகம் முழுவதும் உள்ள தமிழர்கள் சார்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது. இதற்கான பல்வேறு ஆர்ப்பாட்டங்களையும், போரட்டங்களையும் முன்னெடுத்துள்ள தமிழக வாழ்வுரிமைக் கட்சி, தோழமை கட்சிகளும், இயக்கங்களும் நடத்திய போராட்டங்களில் பங்கேற்றுள்ளது. இப்படியான சூழலில், ஐ.நா மனித உரிமை மன்றத்தில் இலங்கையின் போர்க்குற்றங்கள் குறித்து தீர்மானத்தின் மீதான விவாதம் 23.3.2021 அன்று நடைபெற்றது. இந்த தீர்மானத்தை ஜெர்மனி, கனடா, பிரிட்டன், வடக்கு மாசிடோனியா, மாலவி, மான்டினிக்ரோ ஆகிய நாடுகள் முன்னெடுத்தன. 47 உறுப்பு நாடுகள் கொண்டுள்ள ஐ.நா மனித உரிமை மன்றத்தில், ஜெர்மனி, கனடா, பிரிட்டன் உள்ளிட்ட 22 நாடுகள், சிங்கள பேரினவாத அரசுக்கு எதிரான தீர்மானத்தை ஆதரித்தனர். அந்நாடுகளுக்கு தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் சார்பில் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே நேரத்தில், சீனா, ரஷ்யா, பாகிஸ்தான் உள்ளிட்ட 11 நாடுகள், சிங்கள பேரினவாத அரசுக்கு ஆதரவாக நின்றன. சிங்கள பேரினவாத அரசுக்கு ஏதிரான தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும் என்று தமிழர்கள் கோரிக்கை விடுத்து வந்த நிலையில், அத்தீர்மானத்தை ஆதரிக்காமல் இந்தியா புறக்கணிப்பு செய்துள்ளது வன்மையாக கண்டிக்கதக்கது. சிங்கள பேரினவாத அரசுக்கு ஆதரவாக தான் இந்திய அரசு நிற்கும் என்பது நமக்கு முன்பே தெரிந்தது தான். இதில் ஏதும் வியப்பொன்றும் இல்லை. ஏனென்றால், சிங்கள பேரினவாத அரசின் பக்க தான் இந்தியா நிற்க போகிறது என்பது, கடந்த 19-ஆம் தேதியே, இலங்கையின் வெளியுறவுச் செயலாளர் ஜெயநாத் கொலம்பகே கூறிவிட்டார். மேலும், ஐ.நா மனித உரிமை மன்றத்தில் தங்களுக்கு எதிரான தீர்மானத்தை ஆதரிக்காமல், புறக்கணித்தாலே போதும் என்று இந்தியா அரசுக்கு கோத்தபய ராஜபக்சே கோரிக்கை விடுக்கப்பட்டிருந்ததை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதாவது மறைமுகமாக சிங்கள பேரினவாத அரசுக்கு, மோடி அரசு துணை போயியுள்ளது. இந்திய அரசின் இத்தகைய நடவடிக்கை ஈழத்தமிழர்களுக்கு மட்டுமின்றி, உலகத்தமிழர்களுக்கும் துரோகமிழைத்துள்ளது கண்கூடாகத் தெரிகிறது. மோடி தலைமையிலான அரசு, தமிழர்களை உதாசீனப்படுத்திவிட்டது. எனவே, வரும் சட்டமன்ற தேர்தலில், அதிமுக, பாஜக கூட்டணிக்கு நாம் தக்க பாடம் கற்பிக்க வேண்டும் என தமிழக மக்களை தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன். சிங்கள பேரினவாத அரசுக்கு எதிரான தீர்மானம் வெற்றி பெற்றுள்ள நிலையில், இனியும் தாமதிக்காமல் பன்னாட்டு விசாரணை நடத்தி, சிங்கள பேரினவாத அரசை குற்றவாளிகள் கூண்டில் நிறுத்த, இந்திய அரசு முன் வர வேண்டும். இந்த கோரிக்கையும் அலட்சியப்படுத்தும் பட்சத்தில், தமிழக வாழ்வுரிமைக் கட்சி, தோழமை கட்சிகளை திரட்டி பல்வேறு போராட்டங்களை முன்னெடுக்கும் என்று எச்சரிக்கை விடுக்கிறேன்.

# ஜெனிவாவில் இந்தத் தடவை கொண்டு வரப்பட்ட தீர்மானம், 2015ம் ஆண்டு கொண்டுவரப்பட்டதை விட மிகவும் பலவீனமானது என்கிறார் நிமால் விநாயகமூர்த்தி

"அண்மையில் ஜெனிவாவில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சபையில் கொண்டுவரப்பட்ட தீர்மானம் இலங்கைக்கு பாதிப்பை ஏற்படுத்தவில்லை.அது இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்பட்டது என்று கூறப்பட்டாலும் அவ்வாறு இடம்பெறவில்லை. மாறாக "குற்றவாளியே விசாரணைகளை நடத்தலாம் என்ற தமிழர்களின் விருப்புக்கு மாறாகவே அதன் உள்ளடக்கத்தில் கூறப்பட்டுள்ளது. அத்துடன், இந்தத் தடவை கொண்டு வரப்பட்ட தீர்மானம் என்பது 2015 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை விடவும் மிகவும் பலவீனமானது. 2015 ஆண்டு நிறைவேறிய ஐ.நா தீர்மானத்தில் கலப்பு பொறிமுறைகளுடன் கூடிய பல நாடுகள் இணைந்த நீதி விசாரணை-யை கோரியிருந்தது. ஆனால் இப்போதைய தீர்மானம் என்பது முழுக்கவும் இலங்கையே இந்த போர்க்குற்றத்தை விசாரிக்கலாம் என சொல்கிறது. இதை இந்தியா வாக்களிக்காமல் நடுநிலை வகித்தது தமிழ் மக்களுக்கே பாதகமான அதுவும், ஈழத்தமிழர்கள், தமிழக தமிழர்கள் மற்றும் உலகத்தமிழர்களின் மன எண்ணங்களுக்கு பாதகம் செய்த ஒன்றாகவே நான் பார்க்கின்றேன். இது பாதிக்கப்பட்ட ஈழத்தமிழர்களுக்கான தீர்மானம் என்பதை விடவும், மேற்குலக நாடுகள் புவிசார் அரசியலில் தங்களின் இருப்பை நிலைநிறுத்த எங்களை பயன்படுத்துவதாகவே இத்தீர்மானத்தை கொண்டுவந்ததாக பார்க்கிறேன். ஏனைய நாடுகளோடு சேர்ந்து இந்தியாவும் எமது மக்களை ஏமாற்றிவிட்டது".

இவ்வாறு கூறினார் கனடாவில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் முன்னாள் அமைச்சரும் தற்போதைய அங்கத்தவருமான திரு நிமால் விநாயகமூர்த்தி.

மேற்படி விடயம் தொடர்பாக அவர் தமிழ்நாட்டின் "புதிய தலைமுறை இணையத்திற்கு வழங்கிய பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை சபையில், 2009 ஆம் ஆண்டு இலங்கையில் ஈழத்தமிழர்கள் மீது நடத்தப்பட்ட இனப்படுகொலை மற்றும் போர்க்குற்றங்களுக்கு விசாரணை நடத்தவேண்டும் என்ற தீர்மானத்தை இங்கிலாந்து, ஜெர்மனி, கனடா உள்ளிட்ட 6 நாடுகள் கொண்டுவந்தன. உல-கமே உற்று நோக்கிய வண்ணம், உலகத் தமிழர்கள் மிகுந்த ஆர்வத்துடன் காத்திருந்த இந்த தீர்மானம் 21 நாடுகள் ஆதரவுடன் நிறைவேறியது. ஆனால் இத்தீர்மானத்தை சீனா, பாகிஸ்தான், ரஷ்யா, கியூபா, வங்கதேசம், பிலிப்பைன்ஸ் உள்ளிட்ட 11 நாடுகள் எதிர்த்தன. இந்தியா, நேபாளம், ஜப்பான், இந்தோனேசியா உள்ளிட்ட 14 நாடுகள் இந்த வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை. முக்கியமாக, இந்தியா இந்த வாக்கெடுப்பில் வாக்களிக்காமல் இருந்தது உலகத் தமிழர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக மேற்படி "புதிய தலைமுறை" இணையத்தளம் கனடாவில் வாழ்ந்து வரும் நிமால் விநாயகமூர்த்தி அவர்களின் வாக்களிப்பு தொடர்பாக ஈழத் தமிழர்கள் என்ன நினைக்கின்றார்கள் என்று கேட்டபோது. அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துக்களைப் பகிர்ந்து கொண்ட போது பின்வருமாறு தெரிவித்தார்.

"இந்தியா இந்த தீர்மானத்தை ஆதரிக்க வேண்டும் என்பதே ஈழத்தமிழர்கள், தமி-ழக தமிழர்கள் மற்றும் உலகத்தமிழர்களின் விருப்பமாக இருந்தது. ஆனால் இந்தியா இந்த வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை என்பது அவர்களின் ஏமாற்றமாக உள்ளது. "இப்போது நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் என்பது ஈழத்தமிழர்களுக்கு ஏமாற்றமான தீர்மானமே. இனப்படுகொலை உள்ளிட்ட கொடிய அடக்குமுறைகள், ஒடுக்குமுறைகளுக்கு உட்படுத்தப்பட்டு நொந்துபோயுள்ள ஈழத்தமிழர் சமூகம், ஐ.நா சபை மற்றும் உலக நாடுகள் மூலமாக இம்முறையாவது உரிய நீதி கிடைக்கும் என்றுதான் நம்பிக்கையோடு இருந்தோம்.



இந்த தீர்மானத்தில் ஆதரவு, எதிர்ப்பு என்ற நிலைப்பாட்டை எடுக்காமல், இந்தியா வாக்கெடுப்பை தவிர்த்தது எங்களுக்கு பெரிய ஏமாற்றம். சீனாவின் ஆதிக்கம் இலங்கையில் அதிகரித்துவிடும் என்பதால், இந்தியா இந்த நிலைப்பாட்டை எடுத்திருக்கும் என நான் நினைக்கிறேன். ஆனால் தொன்று தொட்டு இந்தியாவுடன் ஒட்டி உறவாடக்கூடிய சமூகம் ஈழத்தமிழர் சமூகமே. எனவே இந்திரா காந்தி காலத்தில் எப்படி எங்களை இந்தியா அணுகி-யதோ, அதேபோல இப்போதைய அரசும் அணுக வேண்டும் என்பதே எமது விருப்பம்.

ஈழத்தமிழர்கள் முழுக்க முழுக்க ஐ.நாவையே நம்பிக் கொண்டிருப்பது சரிதானா என தெரியவில்லை. இனிவரும் காலங்களில் உலக அளவில் ஈழத்தமிழர்கள் அறிவுசார் தளங்களில் ஒருங்கிணைந்து செயல்படவேண்டும் என நினைக்கிறேன். இப்போதைய தீர்மானத்தால் எந்த மாற்றமும் ஏற்படபோவதில்லை, இந்தியா எங்களுக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுத்தால் மட்டுமே, எங்களுக்கான நிரந்தரமான அரசியல் பாதுகாப்பு பொறிமுறை உருவாகும் என நினைக்கிறேன். சீனாவின் ஆக்கிரமிப்பில் உள்ள தற்போதைய இலங்கையில், ஈழத்தமிழர்களுக்கு நியாயமான அரசியல் தீர்வை உருவாக்குவதே இந்தியாவுக்கும் சாதகமான விஷயமாகும். சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகள் இலங்கைக்கு ஆதரவாக இருக்கும் போது, இந்தியா ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக இருக்கவேண்டும் என்பதே எங்கள் விருப்பம்.

ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட மூன்று தீர்மானங்களின்படியும், அதனை காலம் கடத்தும் வாய்ப்பாகவே இலங்கை அரசு பயன்படுத்தியதே தவிர, எந்த காத்திரமான நடவடிக்கையும் இல்லை, உலக நாடுகளும் இதற்கு அழுத்தம் கொடுக்கவில்லை. முன்பை விடவும் இலங்கை அரசு இப்போது வலுவாக உள்ளது அதனால் இப்போதைய தீர்மானத்தை அவர்கள் பொருட்படுத்தவே மாட்டார்கள், இந்த தீர்மானம் எங்களின் வெற்றிதான் என்று இலங்கை அரசே சொல்கிறது. ஈழத்தமிழர் மற்றும் புலம் பெயர் தமிழர்களின் தொடர் போராட்டமாக இருக்கும் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்வாக விவகாரங்களில் கூட ஐ.நா எந்த அழுத்தமும் கொடுக்கவில்லை என்பது பெரும் வருத்தமாக உள்ளது.

தற்போது உலகம் முழுவதும் ஈழத்தமிழர்கள் தனித்தனியாக போராடுகிறார்கள், ஆனால் இது அறிவுசார்ந்த தளங்களின் ஒற்றுமையுடன் வடிவமைக்கப்படவேண்டும் என்பதே எங்கள் விருப்பம். மேற்குலக நாடுகளை மட்டுமே முழுமையாக நம்பியிருந்தால் எங்கள் போராட்டம் பின்னடைவை சந்திக்கும் என்றே நினைக்கிறேன். தமிழகமும், ஈழத்தமிழர் விவகாரத்தில் எத்தகைய அழுத்தம் கொடுக்க முடியுமோ, உதவ முடியுமோ அதை தொடர்ச்சியாகச் செய்கிறார்கள். எனவே, இந்தியா இனியேனும் எங்களை ஆதரிக்கும் என்ற நம்பிக்கை உள்ளது, அதன் மூலமே எங்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வு கிடைக்கும் என்றும் எதிர்பார்க்கின்றோம்" என்றும் கூறினார். - திரு நிமால் விநாயகமூர்த்தி.



# வடக்கின் காணி ஆவணங்கள் ஏன் திருடப்பட்டன?

ஸ்ரீலங்கா அரசாங்கம் மிகப் பெரிய குற்றமான அரசு என்பதை மீண்டும் மீண்டும் நிரூபித்துக் கொண்டிருக்கிறது. ஈழ மண்ணில் நிகழ்த்தப்பட்ட இனப்படுகொலையினால் மாத்திரமின்றி, அதற்குப் பிந்தைய இனக்குமுறைச் செயல்களினாலும் தான் பெருத்தவொரு குற்றம் மிக்க அரசு என்பதை இந்த உலகிற்கு காட்டிக் கொண்டிருக்கிறது. ஸ்ரீலங்கா அரசு இழைத்த இனப்படுகொலை குற்றத்திற்காக சர்வதேச நீதிமன்றத்தில் அவ் அரசை நிறுத்த வேண்டும் என்று தமிழர்கள் போராடி வரக் கூடிய நிலையில், இன்னுமும் குற்றம் இழைக்கிற ஒரு அரசை குறித்து இந்த உலகம் எப்படி எடுத்துக் கொள்ளப் போகிறது?

கடந்த மார்ச் மாதம் 9ஆம் திகதி இரவு வடக்கு மாகாணத்தில் திடீ-ரென ஒரு மின்தடை ஏற்பட்டது. கல்விப் பொதுத்தராதார பரீட்சைகள் நடந்து கொண்டிருக்கும் சமயத்தில் இந்த மின் தடை ஏற்பட்டது. மாலை ஐந்து முப்பது தொடக்கம் இரவு ஒன்பரை வரை இந்த மின்தடை நீடித்தது. வடக்கு மாகாணத்தில் பரீட்சை எழுதுகின்ற மாணவர்களை பாதிக்கும் வகையில்தான் இந்த மின்தடை திட்டமிட்டு ஏற்படுத்தப்பட்டதாக சமூக ஊடங்களில் விமர்சனங்கள் எழுதப்பட்டன. அதற்கு மறுநாள் இன்னொரு கதை உலாவியது. மின் தடை இருந்த சமயத்தில் வடக்கு மாகாணத்தின் காணி ஆவணங்கள் அனுராதபுரத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டதாக ஒரு செய்தி அதிகாரபூர்வமற்ற ரீதியில் உலாவியது.

அதற்குச் சில நாட்களின் முன்னர் வடக்கு மாகாண காணி ஆவணங்களை எடுத்துச் செல்ல முற்படுவதாக கூறி போராட்டங்களும் நடந்தன. இந்த நிலையில் மின் தடை இயல்பாக நடந்தது தான் என்றும் அந்த சமயத்தில் அரச நிறுவனம் ஒன்றில் இருந்து ஆவணங்களை கொண்டு செல்ல வாய்ப்பு இல்லை என்றும்கூட சிலர் கூறினார்கள். அப்படி கொண்டு செல்லப்பட்டிருந்தால் அது பாரதூரமான விசயம் என்றும் முன்னாள் அமைச்சர் மனோ கணேசன் கூறியிருந்தார். இந்த நிலையில் ஸ்ரீலங்கா அரச ஆதரவு எம்பியான சுரேன் ராகவன், வடக்கு மாகாண ஆவணங்களை கொண்டு செல்வதால் தமிழர் தேசத்தின் காணி அதிகாரம் பறிபோகாது என்று ஒரு புதிய கதையை குழம்பிய நிலையில் கூறினார்.

உண்மையில் வடக்கு மாகாணத்தின் காணி ஆவணங்கள் திருடப்பட்டுள்ளன என்பதை அறிவித்த அதிகாரபூர்வமான ஒரு அறிவித்தலாக சுரேன் ராகவனின் கருத்தையே எடுத்துக் கொள்ள வேண்டியிருந்தது. உண்மையில் பெரும் அதிர்ச்சியாகவே இருந்தது. அரச திணைக்களத்தில் இருந்து இப்படி ஆவணங்களை திருட்டுத் தனமாக களவாடிச் செல்வது என்பது அல்லது கடத்திச் செல்வது என்பது இந்த நாட்டில் உள்ள மிகப் பெரிய அநீதி நிலையைதான் எமக்கு உணர்த்துகிறது. குற்றங்கள் பெருக்கப்பட்ட தேசத்தில் திருடர்கள் மின்சாரத்தை துண்டித்துவிட்டு வீடுடைத்துக் கொள்ளையடிப்பதற்கு ஒப்பாகவே வடக்கு காணி ஆவணங்களை ஸ்ரீலங்கா அரசாங்கம் திருடி இருக்கின்றது. ஏன் வடக்கின் ஆவணங்களை இவ்வாறு ஸ்ரீலங்கா அரசாங்கம் திருடிச் செல்ல வேண்டும்? ஈழ விடுதலைப் போராட்டம் என்பது நிலத்திற்கான போராட்டம் ஆகும். ஈழத் தீவு முழுவதும் தமிழர்கள் நிறைந்து வாழ்ந்த ஒரு காலம் இருந்தது. அதன் எச்சமாகவே இன்றைக்கும் கதிர்காமம் திருத்தலம் காணப்படுகின்றது. ஈழத்தின் ஐந்து முனைகளிலும் காணப்படுகின்ற ஈச்சரங்களும் இதற்கு தக்க சான்றாதாரங்கள் ஆகும்.

ஸ்ரீலங்காவுக்கு பிரித்தானியா சுதந்திரம் வழங்கிய காலத்தில் இருந்தே சிங்கள தேசத்தின் நில ஆக்கிரமிப்பு தொடங்கிவிட்டது. சுதந்திரத்திற்கு முந்தைய காலம் வரையில் தமிழர்களின் நிலங்களை ஆக்கிரமித்து வந்த சிங்களவர்கள், சுதந்திரத்திற்குப் பிறகு, வடக்கு கிழக்கில் கால் வைக்கத் தொடங்கினர். இதற்குப் பிறகு பாரிய சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. வடக்கு கிழக்கு எல்லைக் கிராமங்களை ஆக்கிரமிக்க அங்கே தமிழர்கள் படுகொலை செய்யத் துவங்கியது சிங்களம். நிலத்தை ஆக்கிரமிக்கவே இனப்படுகொலை இப்படித் துவங்கியது.

கோல்புறூக் அரசியலமைப்பில் தமிழர்கள் வாழந்த நிலப்பரப்பு, அதாவது தமிழர்களின் தாயகமாக 26 ஆயிரம் சதுர கிலோமீட்டர் என பதிவு செய்யப்பட்டுள்ளது. இன்றைக்கு தமிழர்கள் வடக்கு கிழக்கில் வாழுகின்ற நிலரப்பு பற்றி ஆய்வு செய்தால் மிகப் பெரிய அதிரச்சியே காணப்படும். தமி-ழீழ விடுதலைப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர், மிக நீண்ட காலமாக தமிழர்களின் தாயகத்தின் நில அளவு பாதுகாக்கப்பட்டு வந்தது. ஸ்ரீலங்கா அரச படைகள் தமிழர் தாயகத்தை இராணுவ நடவடிக்கை மூலமாக கைப்பற்றினாலும் வெகு காலங்களிலேயே அவை தமிழீழ விடுதலைப் புலிக-ளால் மீட்கப்பட்டன.

அத்துடன் பெருமளவுக்கு சிங்களக் குடியேற்றங்கள் தவிர்க்கப்பட்டன. இந்த நிலையில் 2009 இனப்படுகொலை போரை முடித்த சிங்களப் பேரி-னவாத அரசு, அதற்குப் பிந்தைய காலத்தில் தமிழர்களின் தாயக நிலப்பரப்பை ஒடுக்கும் விதமாக நிலத்தை மிக வேகமாக ஆக்கிரமித்து வருகின்றது. முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் என வடக்கின் எல்லைக் கிராமங்களில் பல குடியேற்றங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. கொக்கிளாய் என்ற கிராமத்தின் பெரும் பகுதி ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. அதைப் போல வவுனியா நெடுங்கேணி தெற்கிலும் ஆக்கிரமிப்பு தலைவிரித்தாடுகிறது.

அதேபோல கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை அம்பாறை முத-லிய மாவட்டங்களின் எல்லைக் கிராமங்கள் பறிபோன நிலையில் இப்போது மட்டக்களப்பையும் பல துண்டுகளாக ஆக்கிரமிக்கும் முயற்சிகள் நடக்கின்றன. கிழக்கு மாகாணத்தில் முஸ்லீம் இனவாத தலைவர்களின் ஆக்கிரமிப்பு ஒரு புறத்தில் நடக்க, சிங்களப் பேரினவாதிகளின் ஆக்கிரமிப்பு இன்னொரு புறத்தில் தமிழர்களை வருத்துகின்றது. இதேபோல வடக்கு கிழக்கில் பெருமளவான காணிகளில் இராணுவத்தினர் நிலை கொண்டுள்ளனர். சுமார் ஒரு லட்சம் ஏக்கர் காணிகளை வடக்கு கிழக்கில் சிங்கள இராணுவத்தினர் ஆக்கிரமித்துள்ளனர். அத்துடன் உயர்பாதுகாப்பு வலயங்களை அமைத்து மக்களை மீள்குயேற அனுமதிக்காமல் அவர்களை அகதியாக அலைய வைக்கும் அநியாயங்கள் இன்னமும் தொடருகின்றது. இப்படி ஒரு நிலையில் தான் வடக்கு காணி ஆவணங்களை திருடும் முயற்சியை சிங்களப் பேரி-னவாத அரசு மேற்கொண்டிருக்கிறது.

இது தமிழர்களின் தாயகத்தை ஒட்டுமொத்தமாக திருட முயல்கின்ற முயற்சி. தான் இழைத்த இனப்படுகொலைக்காக இவ் அரசு தண்டிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்படுகின்ற காலத்தில்கூட, அதாவது ஐ.நத மனித உரிமைப் பேரவையின் அமர்வுகள் நடக்கின்ற ஜெனீவாக் காலத்தில்கூட இப்படியொரு நிலத்திருட்டை நில ஆவணங்களின் கடத்தலை செய்கின்ற அரசின் கீழ் ஈழத் தமிழினம் எப்படி வாழ்வது?இப்படி ஆவணங்களை திருடுகின்ற ஸ்ரீலங்கா அரசு, ஈழத் தமிழ் இனத்தையே இனப்படுகொலை குழியில் தள்ளிவிட்டு எல்லோரும் ஒட்டுமொத்தமாக காணாமல் போய்விட்டனர் என்றும் சொல்லக் கூடியது.

**- தீபச்செல்வன்**

# சிங்கராஜாக் காட்டுக்குள்ளும் சீன நிறுவனம் சூழற்படுகொலையில் கோட்டா அரசாங்கம்

**- பொ. ஐங்கரநேசன் கண்டனம்**




இலங்கையின் சிங்கராஜாக் காடு உலகில் எஞ்சியிருக்கும் மிகத்தொன்மையான மழைக் காடுகளில் ஒன்று. இதனைக் கருத்திற் கொள்ளாது, இந்த ஆதிக் காட்டுக்குள்ளே இரண்டு பாரிய நீர்த்தேக்கங்களை அமைக்கும் திட்டத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச அவர்களின் தலைமையிலான அரசாங்கம் முன்னெடுத்திருக்கிறது. இவற்றை நிர்மாணிப்பதற்காகச் சீன நிறுவனமொன்றுடன் ஒப்பந்தமும் செய்யப்பட்டுள்ளது. உலகின் உயிர்ப் பல்வகைமை மிக்க வெகுசில இடங்களில் ஒன்றாகப் பாதுகாக்கப்படும் சிங்கராஜாக் காட்டைச் சீர்குலைப்பது சூழற்படுகொலையே அன்றி வேறல்ல. இனப்படுகொலையாளிகளான இவர்களுக்கு இது ஒரு பொருட்டாகவே இல்லை என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தனது கடுமையான கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஐக்கிய மக்கள் சக்தியினால் முன்னெடுக்கப்பட்டுள்ள காடழிப்புக்கு எதிரான போராட்டம் தொடர்பாகத் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைமை அலுவலகத்தில் பொ. ஐங்கரநேசன் நிகழ்த்திய ஊடகவி-யலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தனது கண்டனத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

ஊடகவியலாளர் சந்திப்பில் தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில், மகிந்த ராஜபக்ச அவர்களின் பிறந்த இடமான அம்பாந்தோட்டையின் வீரக்கெட்டிய நகரத்துக்கு ஜின் கங்கையில் இருந்தும் நிலவள கங்கையில் இருந்தும் தண்ணீர் கொண்டு செல்வதற்காகவே சிங்கராஜக் காட்டின் உள்ளே இரண்டு நீர்த்தேக்கங்களைக் கட்டும் பணி முன்னெடுக்கப்பட்டுள்ளது. நீர்ப்பாசன அமைச்சரும் ராஜபக்ச சகோதரர்களில் ஒருவருமான சமல் ராஜபக்ச அவர்கள் அழிக்கப்படும் காட்டுக்குப் பதிலாகப் புதிதாகக் காடு உருவாக்கப்படும் என்று தெரிவித்திருக்கிறார். பல்லாயிரக்கணக்கான வயதுடைய இந்தக் காட்டை எந்தப் புதிய காட்டாலும் ஈடுசெய்ய முடியாது.

இலங்கையின் மிகமுக்கிய பன்னிரு ஈரவலயங்களில் ஒன்றான நீர்கொழும்பின் முத்துராஜவெல கண்டற் சூழலும் அழிவைச் சந்திக்கத் தொடங்கியுள்ளது. சரணாலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருந்த முத்துராஜவெல வனஜீவராசிகள் திணைக்களத்திடம் இருந்து இப்போது நகர அபிவிருத்திச் சபையிடம் கைமாற்றப்பட்டுள்ளது. பல இடங்களில் சரணாலயத்தின் பெயர்ப் பலகைகள் அகற்றப்பட்டு தனியார் நிறுவனங்களின் பெயர்ப் பலகைகள் நாட்டப்பட்டுள்ளன. ஒருபுறம், ஏற்கனவே கொழும்பின் குப்பைகளால் நிரப்பப்பட்டுக் கொண்டிருக்கும் முத்துராஜவெல ஈரநிலம், இன்னொரு புறம் அபிவிருத்தியின் பெயராலும் நிரப்பப்படவுள்ளது.

இலங்கையின் அரசியற் ஸ்திரத்தன்மை பற்றிக் கருத்திற் கொள்ளாமல் சீன சார்பு நிலையெடுத்து இலங்கையை வல்லரசுகளின் போட்டிக் களமாக்கியுள்ள அரசாங்கம் இப்போது இலங்கையின் சூழல் ஸ்திரத் தன்மையையும் சீர்குலைப்பதில் முனைப்பாக ஈடுபட்டு வருகின்றது. இவை தென்னிலங்கைச் சம்பவங்கள் என்று நாம் பேசாது இருக்க முடியாது. இயற்கைச் சூழலுக்கு எல்லைகள் இல்லை. இவை தென்னிலங்கையை மாத்திரம் அல்ல; ஒட்டுமொத்த இலங்கையையும், உலகையும் பாதிக்கப்போகின்ற சூழற் பேரழிவுகள். இவற்றின் காரணமாகத் தென்னிலங்கையில் காடழிப்புக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி முன்னெடுத்துள்ள பேராட்டத்தை நாம் வரவேற்கிறோம்.


ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசா அவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்த போதும் சரி, இப்போதும் சரி தமிழ் மக்களின் போராட்டம் தொடர்பான நியாயப்பாடுளை ஏற்றுக் கொண்டவராகவோ, இனப்படுகொலைக்கு நீதி வேண்டுபவராகவோ, வடக்கு கிழக்கில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற வளச் சுரண்டல்களுக்கு எதிராகக் குரல் கொடுப்பவராகவோ இருந்தவர் அல்லர். ஆனாலும் சூழலியம் என்ற கோட்பாட்டைத் தேசியத்தின் ஒரு கூறாகவும் விளங்கிக் கொண்டிருக்கும் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் இதன் காரணமாக ஐக்கிய மக்கள் சக்தி முன்னெடுத்துள்ள சூழற்படுகொலைக்கு எதிரான போராட்டத்துக்குத் தனது தார்மீக ஆதரவை வழங்குகின்றது என்றும் தெரிவித்துள்ளார்.

# ஐ.நா கூட்டத்தொடரின் பின்னணியில் நிலம் பற்றிய சிந்தனைகள்

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**



பகுதி -1




**க**டந்த சில கிழமைகளுக்குள் நிலம் தொடர்பாக இரண்டு முக்கிய நிகழ்வுகள் இடம்பெற்றன. முதலாவது இம்மாதம் ஒன்பதாம் திகதி யாழ் ஊடக அமையத்தில் நடந்த ஒரு மெய்நிகர் நிகழ்வு. இதில் அமெரிக்காவின் கலிபோர்னியாவை தளமாகக் கொண்டியங்கும் ஒக்லாண்ட் என்று அழைக்கப்படும் ஒரு சிந்தனைக் குழாம் முதல்நாள் வெளியிட்ட ஓர் ஆவணத் தொகுப்பு தாயகத்தில் அறிமுகம் செய்யப்பட்டது. முடிவற்ற யுத்தம் என்ற பெயரிலான இந்த ஆவணத்தொகுப்பு தமிழ்ப்பகுதிகளில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வரும் நில ஆக்கிரமிப்பு பற்றிய தகவல்களைத் திரட்டித் தருகிறது. 2009க்கு பின் தமிழ் பகுதிகளில் நிலம் எவ்வாறு படைத்தரப்பால் திணைக்களங்களால் ஆக்கிரமிக்கப்படுகிறது என்பதனை விவரமாக தொகுத்துத் தருகிறது.

யாழ் ஊடக அமையத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த அறிமுக நிகழ்வில் ஒக்லாண்ட் நிறுவனத்தின் முக்கியஸ்தர்களும் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரான விக்னேஸ்வரனும் நல்லை சிவகுரு ஆதீனத்தின் குருமுதல்வரும் நிலாந்தனும் உரையாற்றினார்கள். இந்த ஆவணத்தை தொகுக்கும் வேலைகளில் ஒக்லண்ட் நிறுவனத்துக்கு பின்புலமாக இருந்தது விக்னேஸ்வரனுக்கு நெருக்கமான புலம்பெயர்ந்த தரப்புக்களே என்று தெரியவருகிறது. அவர்களுடைய பின்னணியில்தான் மேற்படி சிந்தனைக் குழாம் இப்படி ஒரு ஆவணத்தை தொகுத்ததது. விக்னேஸ்வரன் அதை தனது கட்சியின் சாதனையாகக் காட்ட விரும்பவில்லை. இது தொடர்பாக யாழ் ஊடக அமையத்தில் நடந்த நிகழ்வை ஒரு கட்சி நிகழ்வாக அன்றி பொது நிகழ்வாகவே அவருடைய கட்சியினர் ஒழுங்குபடுத்தினார்கள். ஒரு மக்கள் கூட்டத்தின் தாய்நிலம் அபகரிக்கப்படுவது தொடர்பான ஆவண தொகுப்பை ஒரு கட்சியின் சாதனையாக வெளியிடாமல் உலக அங்கீகாரத்தை பெற்ற ஒரு சிந்தனை குழாத்தின் வெளியீடாக அறிமுகப்படுத்தியது விக்னேஸ்வரனின் வெற்றி என்றே குறிப்பிட வேண்டும். அது ஒரு இனத்துக்கான ஆவணம் அதை அவர் கட்சிக்குரியதாக காட்டவில்லை. இது கட்சிகளை நிர்மாணிப்பதை விடவும் தேசத்தை நிர்மாணிக்கும் ஓர் அரசியல் போக்கின் நல்ல முன்னுதாரணம் என்று கூறலாம்.

இந்த மெய்நிகர் நிகழ்வுக்கு சில வாரங்கள் கழித்து மற்றொரு மெய்நிகர் நிகழ்வை விக்னேஸ்வரனின் கட்சியினரே புலம்பெயர்ந்த தமிழர்களின் உதவியோடு ஒழுங்குபடுத்தினார்கள். அதுவும் நில ஆக்கிரமிப்பு தொடர்பான ஒரு அனைத்துலக கருத்தரங்கு ஆகும். கருத்தரங்கில் தாயகத்திலும் புலம்பெயர்ந்த தமிழ்ப்பரப்பில் உள்ள சட்டச் செயற்பாட்டாளர்களும் புலமையாளர்களும் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் முன்னாள் ஆணையாளரான நவநீதம்பிள்ளை அம்மையாருமுட்பட வெளிநாட்டு துறைசார் நிபுணர்களும் உரை நிகழ்த்தினார்கள். ஏறக்குறைய ஒரு நாளின் நாலில் ஒரு பகுதி நேரம் அதாவது ஆறு மணித்தியாலங்கள் நடந்த அந்த மிக நீண்ட கருத்தரங்கில் முக்கியமான அம்சம் என்னவென்றால் புலம்பெயர்ந்த தமிழ் தரப்பில் உள்ள இளையவர்கள் குறிப்பாக புலமைசார் தகமை பெற்ற இளையோர் அதில் உரை நிகழ்த்தியமை ஆகும். மூன்று தலைமுறைகளைச் சேர்ந்தவர்கள் அக்கருத்தரங்கில் பங்குபற்றினார்கள் என்பதையும் விக்னேஸ்வரன் மகிழ்ச்சியோடு சுட்டிக்காட்டினார். முதலாவது- அவருடைய தலைமுறை. இரண்டாவது - நடுத்தர வயதை சேர்ந்த செயற்பாட்டாளர்கள். மூன்றாவது - புலம்பெயர்ந்த தமிழ்ப் பரப்பில் மேலெழுந்து வரும் இளைய தலைமுறை. இவ்வாறு மூன்று தலைமுறைகளையும் நிலம் தொடர்பான ஒரு கருத்தரங்கில் ஒன்றிணைத்தமை ஒரு மகத்தான வெற்றி.

இக்கருத்தரங்கையும் ஒரு கட்சி நிகழ்வாக விக்னேஸ்வரனின் கட்சியினர் ஒழுங்குபடுத்தவில்லை.மாறாக நில ஆக்கிரமிப்பை அறிவுபூர்வமாக கண்கொண்டு சட்டக் கண்கொண்டு அணுகும் அனைத்துலக புலமைசார் கருத்தரங்காகவே கட்டமைத்திருந்தார்கள். இதுவும் கட்சிகளை நிர்மாணிப்பதற்கு பதிலாக தேசத்தை நிர்மாணிக்கும் ஓர் அரசியல் போக்கின் முக்கியமான ஒரு எடுத்துக்காட்டு ஆகும். அதிலும் குறிப்பாக இந்நிகழ்வில் விக்னேஸ்வரன் சிறப்புப் பேச்சாளராக சம்பந்தரை அழைத்திருந்தார். தனது அரசியல் வைரியை ஓர் அனைத்துலக நிகழ்வில் அதிதியாக அழைத்தமை என்பது அரசியல் முதிர்ச்சியைக் காட்டுவது.

இக்கட்டுரை விக்னேஸ்வரனின் கட்சிக்கு காசில்லாத ஒரு விளம்பரம் அல்ல. மாறாக நல்லதை யார் செய்தாலும் அதை ஊக்குவிக்க வேண்டும். அதிலும் குறிப்பாக ஜெனிவா கூட்டத் தொடரை நோக்கி இந்த இரு மெய்நிகர் நிகழ்வுகளும் ஒழுங்கு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. எனவே இவ்விரு நிகழ்வுகளையும் ஒழுங்கு படுத்திய காலம் அதை ஒழுங்குபடுத்திய கட்சி திரைமறைவில் நின்றமை அரசியல் விரோதங்களை மறந்து ஒரு தேசத்தைக் கட்டியெழுப்புவதும்மக்களைத் திரளாக்குவது என்ற அடிப்படையில் சிந்தித்தமை போன்றவை நல்ல முன்னுதாரணங்கள் ஆகும். அதை எந்தக்கட்சி செய்தாலும் பாராட்ட வேண்டும். தமது தாய்நிலம் தொடர்பில் புலம்பெயர்ந்த தமிழ் தரப்பின் விழிப்பையும் அக்கறையையும் பங்கீடுபாட்டையும் இந்த இரு நிகழ்வுகளும் காட்டுகின்றன. எனவே தாயகத்துக்கு வெளியேயும் ஒரு உளவியல் தாயகம் பலமாக காணப்படுகிறது என்ற உணர்வை இவ்விரு நிகழ்வுகளும் வெளிப்படுத்தின.

நிலம் தொடர்பான விழிப்புணர்வு என்பது நீதிக்காகப் போராடும் ஒரு மக்கள் கூட்டத்தை பொறுத்தவரை அத்தியாவசியமானது. அரசறிவியலின் ஆரம்பப் பாடங்களில் தேசம் எனப்படுவது ஒரு பெரிய மக்கள் திரள் என்று வரைவிலக்கணம் செய்யப்படுகிறது.

ஒரு பெரிய மக்கள் திரளை தேசமாக வனையும் அம்சங்களாவன முதலாவது தாயகம். அதுதான் பாரம்பரிய தாயகம் அல்லது நிலம். இரண்டாவது இனம். ஒரு இனமாக திரட்சியாக காணப்படுவது. மூன்றாவது மொழி ஒரு பொது மொழியைக் கொண்டிருப்பது. நாலாவது பொதுப் பண்பாடு. ஐந்தாவது பொதுப் பொருளாதாரம். இந்த ஐந்து அம்சங்களும் ஒரு மக்கள்திரளை தேசமாக கோர்த்துக் கட்டுகின்றன. இந்த ஐந்து அம்சங்களுக்கும் எதிரான தாக்குதலே இன ஒடுக்குமுறை எனப்படுகிறது. இந்த ஐந்து அம்சங்களையும் அழிப்பதே இனப்படுகொலை எனப்படுகிறது. ஒரு மக்கள் கூட்டத்தின் தேசிய இருப்பை பௌதீக மற்றும் உளவியல் ரீதியாக அழிப்பது அல்லது நீண்டகால நோக்கில் நீர்த்துப்போகச் செய்வது எல்லாவற்றையும் இனப்படுகொலையின் வெவ்வேறு வடிவங்களாகவே பார்க்கவேண்டும். இது மேற்சொன்ன மெய்நிகர் கருத்தரங்கில் புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் மத்தியில் உள்ள இளம் தலைமுறையினரால் கூர்மையாக சுட்டிக்காட்டப்பட்டது.

தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரளவிடாமல் தடுக்கும் உத்திகள் இலங்கைத்தீவு கொலனியாதிக்கத்தில் இருந்து விடுதலை பெற்ற உடனடியாகவே தொடங்கப்பட்டன. இலங்கைத் தீவின் முதலாவது பிரதமர் டி எஸ் சேனநாயக்கவின் காலத்தில் குடியேற்றங்களின் மூலம் நில ஆக்கிரமிப்பு தொடக்கப்பட்டது. நில ஆக்கிரமிப்பு தமிழ் மக்களைப் பொறுத்தவரை தாயகத்தை அபகரிப்பது அல்லது சிதைப்பது. சிங்கள மக்களைப் பொறுத்தவரை அது சிங்கள பௌத்த விரிவாக்கம். இதன் தந்தையாகக் கருதத்தக்க டி. எஸ். சேனநாயக்கவிலிருந்து தொடங்கி இப்பொழுது மட்டக்களப்பில் மேய்ச்சல் தரை வரையிலும் தாய்நிலம் தொடர்ச்சியாக அபகரிக்கப்படுகிறது. இவ்வாறு நிலத்தை அபகரித்து அரசின் அனுசரணையுடனான குடியேற்றங்களின்மூலம் தமிழ்மக்களின் குடித்தொகை அடர்த்தியை நீர்த்துப் போகச் செய்யும் நடவடிக்கைகளில் தொடர்ச்சியாக வந்த சிங்கள அரசாங்கங்கள் அம்பாறை மாவட்டத்தில் வெற்றி பெற்றுவிட்டன. திருகோணமலை மாவட்டத்திலும் அவர்கள் வெற்றியை நெருங்கி வருகிறார்கள்.

அடுத்தது முல்லைத்தீவு மாவட்டம். இலங்கைத் தீவிலேயே சன அடர்த்தி குறைந்த ஒரு மாவட்டம் அது. அதோடு அங்கே தமிழ்மக்களின் பாவனையில் இருக்கும் மொத்த காணிகளின் எண்ணிக்கை கிட்டத்தட்ட 19 விகிதம் என்று கற்றுக் கொண்ட பாடங்களுக்கான ஆணைக்குழுவின் பின்னிணைப்பில் காணப்படுகிறது. அந்த 19 விகிதத்தையும் கூட இப்பொழுது அரசு திணைக்களங்கள் அபகரிக்க முற்படுவதை ஒக்லாண்ட் நிறுவனத்தின் ஆவணம் கூர்மையாக வெளிப்படுத்துகின்றது. இவ்வாறு நிலத்தை அபகரிப்பதன் மூலம் தமிழ் மக்களின் தாயகத்தை சிறுக்கச் செய்யலாம். நில அபகரிப்பு என்பதனை அல்லது தமிழர் தாயகத்தைச் சிதைத்தல் என்பதனை இலங்கை அரசாங்கங்கள் பல தசாப்தங்களாக நீண்ட கால நோக்கில் திட்டமிட்டு மேற்கொண்டு வருகின்றன.


அரசின் அனுசரணையுடனான குடியேற்றத் திட்டங்கள் மூலம் ஒருபுறம் நிலம் அபகரிக்கப்டுக்கப்படுகிறது இன்னொருபுறம் தாயகத்தின் நிலத் தொடர்ச்சி அறுக்கக்கப்படுகிறது. அதன் விளைவே மணலாறு மாவட்டத்தில் சில பத்து ஆண்டுகளுக்கு முன் அங்கு சில ஆயிரங்களாக குடியமர்த்தப்பட்ட மக்கள் இப்பொழுது ஒரு தேர்தல் தொகுதிக்குரிய வளர்ச்சியை நெருங்கி வருகிறார்கள். கடந்த பொதுத்தேர்தலின் போது தாமரை மொட்டுக்கு அதிகம் வாக்குகள் கிடைத்த பிரதேசங்களுக்கு நிறம் தீட்டிப் பார்த்தால் இது தெரியவரும். தாமரை மொட்டு நிறம் வடக்குக்கும் கிழக்குக்கும் இடையே ஒரு பகுதியில் செறிவாக காணப்படுகிறது. அதுதான் மணலாறு. அதாவது பௌதீகரீதியாக வடக்கையும் கிழக்கையும் பிரிக்கும் ஒரு நிகழ்ச்சி நிரலை அவர்கள் வெற்றிகரமாக முன்னெடுத்து வருகிறார்கள்.
இப்பொழுது வவுனியா மாவட்டத்திற்கும் திருகோணமலை மாவட்டத்திற்கும் இடையில் உள்ள நிலத்தொடர்பையும் அறுப்பதற்கு முயற்சிகள் நடக்கின்றன. மகாவலி அபிவிருத்தித் திட்டங்களின்மூலம் நிர்வாக நடைமுறைகளின் ஊடாக செய்யப்படக்கூடிய மாற்றங்களின்மூலம் தமிழ் மாவட்டங்களின் எல்லையோரப் பகுதிகள் சிங்கள நிர்வாக அலகுகளிற்குள் கொண்டுவரப்படுகின்றன. இதுவும் ஆக்கிரமிப்பின் ஒரு பகுதிதான். நில ஆக்கிரமிப்பு எனப்படுவது இலங்கைத் தீவை பொருத்தவரை டி.எஸ் சேனநாயக்கவின் காலத்திலிருந்து தொடங்கி கிட்டத்தட்ட 80 ஆண்டுகளாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இது விடயத்தில் சேனநாயக்கவும்சரி ராஜபக்சக்களும்சரி தொடர்ச்சியாக ஒரே விதமாகத்தான் சிந்திக்கின்றார்கள். தாயகக் கோட்பாட்டை சிதைத்தால் தமிழ் மக்களின் போராட்டம் படுத்துவிடும் என்று ஒருமுறை ஜெனரல் சிறில் ரணதுங்க கூறியிருந்தார். அவர் ஜெயவர்த்தனாவின் காலத்தில் பாதுகாப்புத்துறை செயலராக இருந்தார். அக்காலகட்டத்தில்தான் மணலாற்றில் குடியேற்றங்கள் திட்டமிட்டு உருவாக்கப்பட்டன.

எனவே தாயகத்தை சிதைக்கும் சுமார் 80 ஆண்டுகால அரசியலின் பின்னணியில் தாயகத்தை பாதுகாக்கும் நடவடிக்கைகள் என்ற அடிப்படையில் பார்த்தால் கடந்த சில கிழமைகளுக்குள் நிகழ்ந்த இரண்டு மெய்நிகர் நிகழ்வுகளும் முக்கியமானவை. தமிழ் மக்களை ஒரு தேசமாக கட்டியெழுப்பும் நோக்கிலானவை. குறிப்பாக ஜெனிவாத் தீர்மானம் திரும்பவும் ஒருமுறை தமிழ் மக்கள் வெற்றி பெறவில்லை என்பதை நிரூபித்திருக்கும் ஒரு பின்னணியில் தமிழ் மக்கள் தங்களை ஒரு தேசமாக கட்டியெழுப்புவதற்குரிய தற்காப்பு நடவடிக்கைகளை தங்களால் இயன்ற அளவுக்கு முன்னெடுக்க வேண்டும். குறிப்பாக புலம்பெயர்ந்த தமிழர்களின் உதவியோடு தமிழ் மக்கள் தமது சொந்த பாதுகாப்பு கவசங்களை கட்டி எழுப்பலாம் என்ற நம்பிக்கையை ஏற்படுத்திய இரண்டு நிகழ்வுகள் இவை.

# தமிழர்களின் உரிமைக்கான நெருப்புக்குரல் "இதுவரை"

- தீபச்செல்வன்

கனடா உதயன் பத்திரிகையில் வெளியாகும் கதிரோட்டம் எனும் ஆசிரியர் தலையங்கப் பகுதி, என் பள்ளிக் காலத்தில் அறிமுகமானது. தமிழ் இணையத்தளங்களிலும் தமிழீழத்தின் ஊடகங்களிலும் கனடா நாட்டில் இருந்து ஈழத் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்திற்கான ஆதரவுக் குரலாக எழுதப்பட்ட, அரசியல் விடங்களை நெருப்புப் பார்வையுடன் அணுகிய இப் பத்திகளை ஒரு சேர "இதுவரை" என்ற பெரும் புத்தகமாக பார்க்கின்ற போது ஈழ விடுதலைப் போராட்டத்தின் குறிப்பிட்ட காலம் பற்றிய குறுக்கு வெட்டு முகத்தை நமக்கு வரலாறாக காண்பிக்கிறது.




கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஆர்.என். லோகேந்திரலிங்கம், அவர்கள் மூத்த இலக்கியவாதி என்பதையும் தேர்ந்த இலக்கியவாதி என்பதையும் கதிரோட்டங்களின் தலையங்கத்தில் இருக்கும் நேர்த்தியும் அதன் ஆழமான வீச்சும் எடுத்துரைக்கிறது. அத்துடன் இலக்கியங்களின் ஆழமான பரீட்சியத்திற்கும் அப்பால், அரசியல் ரீதியாக கொண்டிருக்கும் அனுபவமும் ஈழ விடுதலைப் போராட்டம் மீதான நேர்மையான பற்றுதியும் இப் பத்திகளின் செறிவுக்கு ஆதாரமாக அமைந்துவிட்டன என்பதும் குறிப்பிட்டுக் கூற வேண்டிய விசயங்கள்.

ஈழ விடுதலைப் போராட்டம் ஒரு முக்கியமான கட்டத்தில் நகர்ந்த காலத்தில் அதாவது 2004இன் ஆரம்பத்தில் இருந்து எழுதப்பட்ட இப் பத்திகள் முள்ளிவாய்க்கால் இன அழிப்புப் போர் காலம், அதன் பின்னர் போருக்குப் பிந்தைய காலம் 2013 வரையான மிக முக்கிய கால காட்டங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. கிட்டத்தப்ட்ட பத்தாண்தாண்டுகளின் அல்லது முக்கியமான ஒரு தசாப்த காலத்தின் வரலாற்று ஆவணமாகவும் இப் புத்தகத்தின் தனிச்சிறப்பு பெறுகிறது. ஒவ்வொரு தலையங்கமும் மிகத் தனித்துவமாகவும் செறிவாகவும் எழுதப்பட்டிருக்கின்றன. நிகழ்கால நிலமைகளை வரலாற்று பூர்வமாகவும் நிலைத்து நிற்கும் மொழியிலும் திரு. லோகேந்திரலிங்கம் அவர்கள் எழுதியிருப்பதும் இப் பத்தியின் சிறப்புக்கள் என்பேன்.

தாயகம், புலம்பெயர் தேசம், மற்றும் தமிழகத்தின் நிலவரங்கள் குறித்து மாத்திரமின்றி சர்வதேச அரசியல் தளங்களின் ஊடாகவும் தமிழர்களின் அரசியலை உணர்வுபூர்வமாகவும் அதேநேரம் அறிவுபூர்வமாகவும் அணுகியுள்ள இப் பத்திகளில் மாவீரர்களின் மகத்துவங்களும் கரும்புலிகளின் நிகரற்ற தியாகங்களும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. புலம்பெயர் தேசத்தின் புதிய தலைமுறையினருக்கும் தாயகத்தின் நிலவரங்களை மாத்திரமின்றி தாய் நிலத்திற்காக போராட்டத்தின் தேவையையும் உணர்வையும் ஊட்டும் விதமாக அமைந்திருப்பதும் இந் நூலின் தனித்துவ இயல்புகள் எனலாம்.

முக்கியமாக சிங்களப் பேரினவாத்தின் கோரத்தையும் இன அழிப்பு அரசுக்கு முண்டுகொடுக்கும் தமிழ் ஒத்தோடி கைக்கூலி நபர்களையும் மிகச் சீற்றத்துடன் "அமைச்சன்" என சுட்டெரிக்கும் வார்த்தைகளில் சாடியுள்ளார் லோகேந்திரலிங்கம். இன ஒடுக்குமுறை கண்டும் அதற்கு ஒத்துழைக்கும் துரோகங்கள் கண்டும் கொள்ளும் அளவற்ற ரௌத்திரமே இச் சொற்களின் நியாயங்களாகவும் வாசகர்களை ஆற்றுப்படுத்துகின்றன. தமிழகத்தின் அரசியல் நிலைகளை அதன் யதார்த்த நிலையில் இருந்தும் அதேநேரம் நிகழ்த்தப்பட்ட துரோகங்களை சமரசமின்றியும் விமர்சிப்பதில் திரு. லோகேந்திரலிங்கத்தின் எழுத்துக்கள் நீதியின் தராசாக நிற்கிறது.

அத்துடன் புலம்பெயர் தேசத்தின் கடமைகள் தொடர்பிலான இடித்துரைப்புக்கள் மிகச் சிறந்த பொறுப்புணர்வுடன் தேசத்திற்கான பெரும் கடமையை நிறைவேற்ற வேண்டிய வலியுறுத்தலுடன் எழுதப்பட்டுள்ளன. அதேவேளை புலம்பெயர் தேச மக்களின் தாயக பற்றுதியையும் அவர்கள் செய்யும் நிகரற்ற பணிகளையும் பாராட்டி எழுதி அவர்களை மதிப்பளிக்கவும் செய்கிறார் ஆசிரியர். அத்துடன் கனேடிய அரசியலும் அந்நாட்டுக்கும் ஈழ விடுதலைக்குமான தொடர்புகளும் எடுத்துரைக்கப்படுவதுடன் வலியுறுத்தவும்படுகிறது. இதன்வழி ஈழ விடுதலைக்கு கனேடிய தேசத்தின் ஆதரவை கோரும் குரலாகவும் ஒலிக்கிறது.

இலக்கியம், பத்திரிகை, பதிப்பு, இணைய ஊடகம், மனிதநேயப் பணி என இன்றைய இளைஞர்களை விஞ்சும் வகையில் இயங்கும் ஈழத்தின் மூத்த பத்திரிகையாளராக மதிக்கப்படும் லோகேந்திரலிங்கம் அவர்கள், ஊடகப் பணிக்கு வரும் இளைஞர்களுக்கு மிக முன்னுதாரணமானவர். இவர் எழுதிய "இதுவரை.." என்ற இந்த நூல் தமிழர் தேசத்திலும் புலம்பெயர் தேசத்திலும் ஒவ்வொரு வீடுகளிலும் நூலகங்களிலும் இருக்க வேண்டியது. ஏனெனில் இப் பத்தி எழுத்துக்கள் நிகழ்கால போராட்டக் குரலாக மாத்திரமின்றி வரலாற்று ஆவணமாகவும் வடிவம் கொள்ளுகின்றன.

அச்சுப் பத்திரிகை இலத்திரனியல் பத்திரிகை என கால மாற்றங்களும் தொடர்பாடல் யுகத்திற்கும் ஏற்ப தம்மை தகவமைத்துக் கொண்ட உதயன் பத்திரிகை, புலம்பெயர் தேசத்தில் இருந்து தாயகம் நோக்கிய மண் பற்றுக் குரலாகவும் கனதி பெறுகிறது. நிலத்தில் எழுத மறுக்கப்பட்ட சொற்கள் என்ற வகையிலும் இவை வீச்சுக் கொள்ளுகின்றன. நாடு கடந்து தாய் மண்ணின் விடுதலை மற்றும் உரிமை குறித்து நெருப்புக் கனலும் மனங்களோடு வாழ்கின்ற புலம்பெயர் தேச உறவுகளின் ஒட்டுமொத்தக் குரலும் திரு. லோர்கேந்திரலிங்கம் அவர்களின் இப் பத்திகளில் வெளிப்படுவதுவே இந் நூலுக்கு வரலாற்றுச் சிறப்பை சேர்க்கிறது.

புத்தகத்தின் தலைப்பு: "இதுவரை"
நூல் ஆசிரியர்: ஆர்.என். லோகேந்திரலிங்கம்
வெளியீடு: கனடா உதயன் பத்திரிகை
Email: uthayannews@yahoo.com



# இலங்கையில் சிறுபான்மையினருக்கு எதிரான புதிய ஒழு ங்குவிதிகளுக்கு உலகின் முன்னணி சட்ட வல்லுநர்கள் கண்டனம்

- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர்)




**உ**லகின் பல நாடுகளிலுள்ள முன்னாள் நீதியரசர்கள், முன்னணி சட்ட வல்லுநர்கள், சட்டத்துறை பேராசிரியர்கள் மற்றும் மனித உரிமை ஆர்வலர்கள் உறுப்பினர்களாக இருக்கும் பன்னாட்டு சட்டவாளர்கள் ஆணையம் (ஐ சி ஜே), இலங்கையின் "தீவிரவாத சித்தாந்தங்களிலிருந்து விடு-படும் ஒழுங்குவிதிகளை" கடுமையாக கண்டித்துள்ளனர்.

மிகவும் கொடூரமான இந்த ஒழுங்குவிதிகள் வகைதொகையின்றி நிர்வாக ரீதியாக வழக்கு விசாரணையின்றி மக்களைத் தடுத்து வைக்க வழி செய்கிறது.

"இந்த ஒழுங்குவிதிகள் நாட்டிலுள்ள சிறுபான்மையினரைச் சமமற்ற வகையில் இலக்கு வைக்கக் கூடும்" என்று ஐ சி ஜே எச்சரித்துள்ளது.

இந்த நிர்வாக ஒழுங்குவிதிகளை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்க்ஷ வர்த்தமானி ஒன்றின் மூலம் இம்மாதம் 12 ஆம் திகதி பிரகடனப்படுத்தினார். இந்த ஒழுங்குவிதிகள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அதன் ஒப்புதலைப் பெறாமலேயே ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

மிகவும் சர்ச்சைக்குரிய இந்த வர்த்தமானி அறிவிப்பின் மூலம் சந்தேகத்திற்குரிய நபர்களின் பேச்சு அல்லது சைகைகள் "மத, இன அல்லது சமூக நல்லிணக்கத்தைப் பாதிக்கும் வகையில்" இருப்பதாகவோ அல்லது "வெறுப்புணர்வை தூண்டி சமூக இனக்கப்பாட்டிற்கு குந்தகம் விளைவிப்பதாகவோ" கருதப்பட்டால், அவர்களைப் "புனர்வாழ்வுக்கு" அனுப்பும் வகையில் இரண்டு ஆண்டுகளுக்கு வழக்கு விசாரணையின்றி "மீள் ஒருங்கிணைப்பு மையங்களில்" தடுத்து வைக்க முடியும்.




"நிறைவேற்று அதிகாரம் மூலம் வெளியிடப்பட்டுள்ள இந்த ஒழுங்கு வி-திகள், வழக்கு விசாரணையின்றி தடுத்து வைக்க வழி செய்கிறது. இது இலங்கையின் சொந்த அரசியல் யாப்பில் 13ஆவது ஷரத்தின் கீழ் அளிக்கப்பட்டுள்ள அரசியல் சாசனப் பாதுகாப்பை மீறுவதோடின்றி, பன்னாட்டு சட்ட வழிமுறைகள் மற்றும் கடப்பாடுகளை மீறும் செயலாகும்" என்று ஐ சி ஜேயின் சட்டம் மற்றும் கொள்கைக்கான இயக்குநர் இயன் சீடர்மேன் கூறியுள்ளார்.

ஆனாலும் இந்த ஒழுங்குமுறையை விமர்சிப்பார்கள், இது போர்க் காலத்தில் நிலவிய அட்டூழியங்களை நினைவுபடுத்துகின்றன என்று கூறுகின்றனர். அந்த சமயத்தில் வகைதொகையின்றி, காரண காரியமற்று, எவ்விதமான முகாந்திரமும் இல்லாமல் தமிழ் மக்கள் நாடு முழுவதும் கைது செய்யப்பட்டு விசாரணையின்றி பல ஆண்டுகளாக சிறையில் அடைக்கப்பட்டு துன்புறுத்தப்பட்டனர் என்று மனித உரிமை ஆர்வலர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். ஐ சி ஜே, இதர கண்காணிப்பு அமைப்புகள் மற்றும் ஐ நா ஆகியவற்றின் அறிக்கைகள் போருக்கு பின்னர் தமிழ்ப் போராளிகளுக்கு அளிக்கப்பட்ட புனர்வாழ்வு திட்டங்கள் சர்வதேச அளவுகோல்களை எட்டவில்லை அவை என்றும் சித்திரவதைக்கு வழிவகுத்திருக்கலாம் என்று கூறுகின்றன.

ஆனால் இலங்கை அரசோ சர்ச்சைக்குரிய அந்தத் திட்டத்தை "உலகத் தரம் வாய்ந்த மறுவாழ்வு திட்டம்" என்று கூறுகிறது.

இப்போதும் கூட இலங்கையின் மிகவும் கொடூரமான பூசா, மகசின், மஹர மற்றும் அனுராதபுரம் போன்ற சிறைச்சாலைகளில் நூற்றுக் கணக்கான தமிழ் மற்றும் முஸ்லிம்கள் பாதுகப்பாபு அச்சத்திற்கு இடையே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

"தீவிரவாத சிந்தனையிலிருந்து மீள்வதற்காக" கொண்டுவரப்பட்டுள்ள இந்த புதிய ஒழுங்குமுறை விதிகள் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களை இலக்கு வைத்தே கொண்டுவரப்பட்டுள்ளது என்று மனித உரிமை ஆர்வலர்கள் கூறுகின்றனர். அதே நேரம் "நஞ்சைக் கக்கி" தொடர்ச்சியாக "மதத் துவேஷத்தை" வெளிப்படுத்தி சமூக நல்லுறவை பாதிக்கும் வகையில் பேசும் பௌத்த அரசியல்வாதிகள் மற்றும் பிக்குமார்கள் தொடர்ந்து சுதந்திரமாக நடமாட அனுமதிக்கப்படுகின்றனர் என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.



மனித உரிமைகள் மற்றும் அர-சியல் உரிமைகள் குறித்த பன்னாட்டு உடன்படிக்கையின் 9வது ஷரத்தின்படி தனி நபரின் சுதந்திரம் பேணப்படுவதற்கு அளிக்கப்பட்டிருக்கும் உரி-மை பாதுகாக்கப்பட வேண்டும் என்று ஐ சி ஜே சுட்டிக்காட்டுகிறது. அந்த உடன்படிக்கைக்கு இலங்கையும் ஒரு பங்குதாரராக இருப்பதால் அந்த உரிமை-யைப் பாதுகாக்கும் கடப்பாடு இலங்கைக்கு உள்ளது என்றும், ஆனால் இந்தப் புதிய ஒழுங்குமுறை விதிகளில் தனி நபர் சுதந்திரம் குறித்த பல அம்சங்கள் காணப்படவில்லை என்று அந்த பன்னாட்டு அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

"நிர்வாக அதிகாரங்களைப் பயன்படுத்தி இப்போது கொண்டுவரப்பட்டுள்ள ஒழுங்குமுறை விதிகள் அனுமதிக்கப்பட்டவை அல்ல" என்று ஐ நா மனித உரி-மைகள் ஆணையம் தொடர்ந்து கூறி வந்துள்ளது.

இந்த ஒழுங்குமுறை விதிகளைப் பிரகடனப்படுத்துவதற்கு முன்னர் பயங்கரவாதத் தடை சட்டத்தைப் பயன்படுத்தி சிறுபான்மையின மக்களை அதிகாரிகள் துன்புறுத்தி வந்தனர், எனினும் இது தொடர்பில் மிகக் குறைந்த நடவடிக்கை அல்லது முற்றாக நடவடிக்கை எடுக்கப்படாத சூழலே இலங்கையில் நிலவுகிறது என்று ஐ சி ஜே கூறியுள்ளது. சிறுபான்மையினருக்கு எதிரான வன்முறையை முன்னெடுப்பவர்கள் மீது எவ்விதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படுவதில்லை என்றும் அந்தப் பன்னாட்டு அமைப்பு கூறுகிறது.

"இந்தப் புதிய ஒழங்குமுறை விதிகள் தடுத்து வைக்கப்படும் நபர்களும் பேரம் பேச பயன்படும்" என்கிறார் ஐ சி ஜேயின் இயன் சீடர்மேன். அதாவது தடுத்து வைக்கப்படும் நபர் காலவரையின்றி தடுத்து வைக்கப்பட விரும்புகிறாரா அல்லது இரண்டு ஆண்டுகள் "புனர்வாழ்வு" மையத்தில் செலவிட விரும்புகிறாரா எனக் கேட்டு அவர்களை அச்சுறுத்தி பணிய வைக்க அரசு முனையக் கூடும் என்றும் அவர் கூறுகிறார்.

உண்மையான குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் நியாயமான வழியில் வழக்கு முன்னெடுக்கப்பட்டு சட்டம் மற்றும் சாட்சியங்களின் அடிப்படையில் நீதி வழங்குவதே "மக்கள் நலனில் செயல்படுவதாகக்" கூறும் ஒரு அரசு செய்ய வேண்டிய செயல் என்று பல்துறையைச் சேர்ந்தவர்கள் வலியுறுத்துகின்றனர்.


## தேர்தல் வரலாறு தெரிந்து கொள்வோம்:

# 1952: மெஜாரிட்டி இல்லாத காங்கிரஸ் அரசு

**(தமிழ்நாடு சட்டமன்றம் 16-வது பொதுத்தேர்தலை வருகிற 6-4-2021 அன்று சந்திக்க இருக்கிறது. இதற்கு முன் 1952 முதல் 2016 வரை 15 முறை தேர்தலை சந்தித்த தமிழக சட்டமன்றத்தின் தேர்தல் வரலாற்றுத்தொகுப்பை தினமும் இங்கே காணலாம்).**

**சு**தந்திர இந்தியாவில் நாடாளுமன்றத்துக்கும், மாநில சட்டமன்றங்களுக்கும் முதல் பொதுத்தேர்தல், 1951-ல்தொடங்கி 1952 வரை வெவ்வேறு கட்டங்களாக நடந்தது. தமிழ்நாடு சட்டமன்றம் அப்போது மதராஸ் மாகாண சட்டமன்றமாக (மெட்ராஸ் ஸ்டேட் அசெம்பிளி) இருந்தது. மதராஸ் சட்டமன்றத்தின் எல்லைகள் பரந்து விரிந்து இருந்தன. இன்றையஆந்திரம், கர்நாடகம், கேரளம் ஆகிய மாநிலங்களின் பலபகுதிகள் மதராஸ் மாகாணத்திற்குள் அடங்கி இருந்தன.





### இரட்டைஉறுப்பினர் தொகுதிகள்

மதராஸ் மாகாண சட்டமன்றத்தின் மொத்த தொ-குதிகள் 309 உறுப்பினர்கள் எண்ணிக்கை 375. அது எப்படி 309 தொகுதிகளுக்கு 375 உறுப்பினர்கள் என்று கேள்வி வரும். அப்போது பட்டியலின மக்களுக்கு தனித்தொகுதிகள் கிடையாது. அதற்குப்பதில் குறிப்பிட்ட சிலதொகுதிக-ளில் இரட்டைஉறுப்பினர் முறை அமலில் இருந்தது. அதாவது 66 தொ-குதிகளில் இருந்து தலா இரண்டு உறுப்பினர்கள் தேர்ந்துஎடுக்கப்பட்டனர். வாக்காளர்கள் இருவாக்குகள் அளிக்கவேண்டும். ஒன்று பொது உறுப்பினருக்கு் இன்னொன்று பட்டியலின உறுப்பினருக்கு. இதற்கேற்றவகையில் வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டனர். இவர்களில் அதிகவாக்குகள் பெற்ற இருவர் வீதம் தேர்ந்து எடுக்கப்பட்டனர். (66-ல் 62 பட்டியலினத்தவர் 4 பழங்குடியினர்).

### காங்கிரஸ் - கம்யூனிஸ்டுநேரடிபோட்டி

1952-ல் செல்வாக்காக இருந்த கட்சிகள், காங்கிரசும், இந்தியகம்யூனிஸ்டு கட்சியும்தான். இவைபோக, கிசான்மஸ்துகீர்பிரஜாகட்சி, கிரிஷிகர்லோக்பார்ட்டி, காமன்வீல்கட்சி, தொழிலாளர்கட்சி (டாய்லர்ஸ்பார்ட்டி), நீதிக்கட்சி ஆகியவையும் களம் கண்டன. மொத்தஇடங்கள் 375-ல் 372-க்கு மட்டும் தேர்தல் நடந்தது. மொத்தவாக்காளர்கள்: 3,66,00,615 வாக்களித்தவர்கள்: 2,00,38,423. வாக்குப்பதிவு சதவீதம் 54.75. ஜனவரி 2-ந்தேதி தொடங்கி, 25-ந்தேதி வரை 9 கட்டங்களாக தேர்தல்நடந்தது. தேர்தல்முடிவுகள் எந்தக்கட்சிக்கும் பெரும்பான்மையை அளிக்கவில்லை. காங்கிரஸ் 152 இடங்களில் வென்று தனிப்பெருங்கட்சி என்ற அந்தஸ்தைப் பெற்றது. திராவிடர் கழகத்தின் ஆதரவைப்பெற்றிருந்த இந்திய கம்யூனிஸ்டு கட்சி 62 இடங்களில் வென்று இருந்தது.

### முதல் தேர்தலில் திமுகவின் தாக்கம்

1949-ல் தொடங்கப்பட்டதிமுகழகம், 1952 தேர்தலில்போட்டியிடவில்லை என்றாலும், வன்னியர்கள் அதிகம் இடம்பெற்றிருந்த காமன்வீல் கட்சியையும், டாய்லர்ஸ் பார்ட்டியையும் ஆதரித்தது. அதற்குபிரதிபலனாக சட்டமன்றத்தில் தங்கள்கோரிக்கைக்கு (திராவிடநாடு) ஆதரவாக குரல்எழுப்பவேண்டும் என்று உத்தரவாதம் பெற்றிருந்தது. அப்படி திமுகவின் ஆதரவைப்பெற்றிருந்த டாய்லர்ஸ் பார்ட்டி 34-ல்போட்டியிட்டு 19 இடங்களையும், காமன்வீல்கட்சி 13-ல்போட்டியிட்டு 6 இடங்களையும்வென்றிருந்தன.

எந்தக்கட்சியும்தனிப்பெரும்பான்மை பெற்றிராதநிலையில் இந்தியகம்யூனிஸ்டுகட்சி இதரகட்சிகளின் ஆதரவைத்திரட்டி பெரும்பான்மைபலத்தைக்காட்டி, கூட்டணிஆட்சி அமைக்க முன்வந்தது. ஆனால் அன்றையமத்திய காங்கிரஸ் அரசும், இங்கிருந்த கவர்னரும் கம்யூனிஸ்டு தலைமையில் ஆட்சி அமைவதை விரும்பவில்லை. மத்தியமந்திரியாக இருந்த ராஜாஜியை முதல் மந்திரியாக்க டெல்லி மேலிடம் திட்டமிட்டது. அதற்கு ஏற்றவகையில் காய்கள் நகர்த்தப்பட்டன. ராஜாஜி மத்தியமந்திரி பதவியைத்துறந்து சென்னை வந்து, "டெல்லி ஆசி"யுடன் முதல்ருமந்திரியாகப் பதவி ஏற்றார். தனிப்பெரும்பான்மை இல்லாவிட்டாலும் "தனிப்பெருங்கட்சி" என்றநிலையில், ராஜாஜி தலைமையில் காங்கிரஸ் அரசு அமைந்தது. சட்டமன்ற உறுப்பினராக இல்லாத ராஜாஜி, இடைத்தேர்தலில் போட்டியிட விரும்பாமல் மேல் சபைஉறுப்பினர் (எம்எல்சி) ஆகிக்கொண்டார். அதோடு, பிறகட்சி எம்எல்ஏக்களை வளைத்து இழுத்து, காங்கிரசின்ஆதரவை 152ல் இருந்து 167 ஆகப்பெருக்கிக்கொண்டார். அப்போது கட்சித்தாவல் தடைச்சட்டம்இல்லாதது அவருக்கு வசதியாகப்போய்விட்டது.

### ராஜாஜியின்வீழ்ச்சி

1952 ஏப்ரலில் முதல் மந்திரியாகப்பதவிஏற்ற ராஜாஜியால் 1954 மார்ச் வரை மட்டுமே பதவியில் நீடிக்க முடிந்தது. அவர் கொண்டுவந்த குலக்கல்விதிட்டத்தின்மூலம் அவருக்கு அவரே ஆப்பு வைத்துக்கொண்டார். அத்திட்டத்திற்கு எதிராக தமிழகமே கிளர்ந்து எழுந்ததால் அவர் பதவி விலக

(**தொடர்ச்சி** ------->)

# வனத்தை அழித்து வினையைத் தேடிக் கொள்ளும் இலங்கை அரசு

- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர்)

"நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வான்இன்று அமையாது ஒழுக்கு".

(குறள் பால்: அறத்துப்பால், குறள் இயல்: பாயிரவியல். அதிகாரம்: வான் சிறப்பு)

பொருள்: எத்தனை பெரியவரானாலும் நீர் இல்லாமல் வாழமுடியாது அந்த நீரோ மழை இல்லாமல் கிடைக்காது.- பேராசிரியர் சாலமன் பாப்பையா

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த வள்ளுவப் பெருந்தகை இயற்கை வளம், நீர் மேலாண்மை, பல்லுயிர் போற்றுதல் என எக்காலத்திற்கும் பொருந்தும் விஷயங்களை மிகவும் தீர்க்கத்தரிசனத்துடன் கணித்து நாம் பின்பற்றுவதற்கு விட்டுச் சென்றுள்ளார். அவர் அன்று கூறியதை இன்றைய சுற்றுச்சூழல் ஆர்வலர்களும் அறிவியல் வல்லுநர்களும், அரசியல் அவதானிகளும் மீண்டும் சுட்டிக்காட்டுகின்றனர். மூன்றாவது உலகப் போர் ஒன்று மூண்டால் அது தண்ணீருக்காக இருக்குமே தவிர எண்ணெய்க்காக இருக்காது என்று பல ஆண்டுகளாகப் பலர் தொடர்ந்து கூறி வருகின்றனர்.

ஆனால் இலங்கை அரசோ தாங்கள்- தனித்துவமான வேற்று கிரக வாசிகள் போல நடந்து கொள்கின்றனர் என்ற குற்றச்சாட்டுக்கு ஆளாகியுள்ளனர். தொடர்ச்சியக நாட்டின் பல பகுதிகளில் இயற்கை வளங்களை அழிக்கும் நடவடிக்கையில் ராஜபக்ச அரசாங்கம் ஈடுபட்டு வருகிறது. வடக்கே வன்னி பெருநிலப் பரப்பு தொடக்கம் தெற்கில் பல பகுதிகள் வரை இயற்கை வளங்களை அழிக்கும் நடவடிக்கை தொடருகின்றன.



சீரழியும் சிங்கராஜா வனம்

இலங்கையில் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் முக்கியமானதொரு இடம் சிங்கராஜா வனப்பகுதிக்கு உண்டு. ஐ நாவால் உலக மரபுச் சின்னம் என்று இலங்கையில் அறிவிக்கப்பட்டுள்ள இரண்டு இடங்களில் இந்த வனப்பகுதியும் ஒன்று. அதேபோன்று அது இலங்கையில் கடைசியாக எஞ்சியிருக்கும் மழைக்காடு மட்டுமின்றி ஐ நாவால் பல்லுயிர் பாதுகாப்பு வலையமாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், இவ்வளவுச் சிறப்பு வாய்ந்த அந்த வனப்பகுதிக்குள் இரண்டு நீர் நிலைகளை அமைக்க சீன நிறுவனம் ஒன்றுடன் இலங்கை அரசு ஒப்பந்தம் செய்துள்ளது பெரும் கவலைகளையும் கலக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

அந்த நீர்நிலைகள் மூலம் தென் பகுதிக்கு குறிப்பாக ராஜபக்சக்களின் வாக்கு வங்கிப் பிரதேசங்களுக்கு நீரி விநியோகம் திட்டமிடப்பட்டுள்ளது என்பது திட்டத்தின் வரைவு அறிக்கையைக் காணும் போது புலனாகிறது.

நாட்டின் நீர்ப்பாசனத்துறை அமைச்சரும் ஜனாதிபதி மற்றும் பிரதமரின் மூத்த சகோதரருமான சாமல் ராஜபக்ச முதற்கட்டமாக அங்கு ஐந்து ஏக்கர் பரப்பளவில் இரண்டு நீர்நிலைகள் கட்டப்படும் என்றும் அதற்கு ஈடாக அந்தப் பரப்பளவை விட மிகப் பெரியதாக 100 ஏக்கர் அளவுக்கு வேறு இடத்தில் காடு உருவாக்கப்படும் என்கிறார். நாட்டின் ஒரே மழைநீர் காட்டின் ஒரு பகுதியை அழித்துவிட்டு வேறொரு பகுதியில் வனத்தை உருவாக்கும் எண்ணம் எந்த வகையிலும் அழிக்கப்பட்ட காட்டுக்கு ஈடாகாது என்பது அனைவரும் அறிந்ததே. மழைநீர் காடுகள் என்பது இயற்கை கொடுத்த கொடை. அதை செயற்கையாக உருவாக்குவது என்பது எந்தளவுக்கு யதார்த்தமானது என்பதற்கு பதிலில்லை. தொலைக்காட்சி விவாதத்தில் போட்டுடைத்த சிங்கப் பெண் உலகளவில் மிகவும் பிரபலமான தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் ஒன்றான - ஹூ வாண்ட்ஸ் டு பி எ மில்லினெயரின் - இலங்கை வடிவமான "சிரச லட்சாதிபதி" (தமிழ்நாட்டு தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் "நீங்களும் வெல்லலாம் ஒரு கோடி") நிகழ்ச்சியில் பங்கேற்ற 19 வயது பெண்ணொருவர் தெரிவித்த கருத்து தற்போது நாட்டில் தீயாகப் பரவி அந்தப் பெண்ணுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது.



ஐநா மரபுச் சின்னமான சிங்கராஜா வனப் பகுதி - அபிவிருத்தி எனும் போர்வையில் அழிக்கப்படுகிறது என்று அந்தப் பெண் தெரிவித்த விஷயம் உள்நாட்டில் மட்டுமல்ல பன்னாட்டு அளவிலும் ஒலிக்கத் தொடங்கியுள்ளது.

இதையடுத்து பாக்யா அபேரட்ண என்ற அந்தப் பெண்ணின் வீட்டிற்கு பொலிசாரும் வனத்துறை அதிகாரிகளும் சென்று அச்சுறுத்தலில் ஈடுபட்டுள்ளனர் என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

அந்த நிகழ்ச்சியில் சிங்கராஜா வனப்பகுதியில் நடைபெறும் கட்டுமானப் பகுதிகளை உடனடியாக தடுத்த நிறுத்த வேண்டும் என்று உருக்கமான வேண்டுகோளை அவர் விடுத்திருந்தார். கடந்த 1988 ஆம் ஆண்டு சிங்கராஜா வனப்பகுதி ஐ நா மரபுச்சின்னமாக அறிவிக்கப்பட்டிருந்தாலும், கட்டுக்கடங்காத வகையில் அப்பகுதியில் கட்டுமானங்கள் இடம்பெறுகின்றன என்று அந்தப்பகுதி வாசியான பாக்யா அபேரட்ண கூறியிருந்தார்.



சுற்றுச்சூழல் அழிப்பு

"எனது கண்களால் ஒவ்வொரு நாளும் காலையும் மாலையும் அப்பகுதியில் சுற்றுச்சூழல் அழிக்கப்படுவதைக் காண்கிறேன்" என்று பாக்யா அபேரட்ண அந்த நிகழ்ச்சியில் கூறியிருந்தார்.

"அங்கிருக்கும் பசுமையைப் பற்றி மட்டுமே நான் பேசவில்லை. அந்தச் சுற்றுச்சூழல் கட்டமைப்பில் மிகப் பெரிய விலங்குக் கூட்டம் வாழ்கிறது. அவர்களின் வாழ்விடங்களை அழிப்பது எனது வீட்டை இடிப்பதற்குச் சமம்" என்று அவர் அந்த நிகழ்ச்சியில் கூறிய போது நாடே அதிர்ந்தது.

தங்குதடையின்றி அங்கு நடைபெறும் காடழிப்பை பிரபலமான அந்தத் தொலைக்காட்சி நிகழ்ச்சி மூலம் வெளிப்படுத்துவதில் தனது மகள் உறுதியாக இருந்தார் என்று அரங்கத்தில் பார்வையாளராக இருந்த அவரது தந்தை கூறியுள்ளார். "இதற்குப் பிறகு நான் வீட்டில் பாதுகாப்பாக இருக்க முடியுமா என்பது உறுதியில்லை" என்றும் அப்பெண்ணின் தந்த அபேரட்ண அச்சம் வெளியிட்டுள்ளார்.



நேரடி மிரட்டல்

அபேரட்ண அஞ்சியதற்கு காரணம் உள்ளது. அரசுக்கு எதிராகவோ அல்லது மக்களை பாதிக்கும் வி'யங்களையோ எடுத்துச் சொன்னால் இலங்கையில் என்ன நடக்கும் என்பதை நாட்டிலுள்ளவர்கள் நன்கு அறிவர்.

சிரச தொலைக்காட்சியின் இந்த நிகழ்ச்சியில் பாக்யா அபேரட்ண சிங்கராஜா வனப்பகுதியில் நடைபெறும் காடழிப்பைச் சுட்டிக் காட்டியதை அடுத்து மகாராஜா தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமையாளரை நேரடியாகவே அச்சுறுத்தும் வகையில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பேசியுள்ளார்.

"எமது நாட்டில் ராஜாக்களோ அல்லது மகாராஜாக்களோ இல்லை. இந்தக் குற்றக் குழுக்கள் அரசு மற்றும் ஆட்சியாளர்களைக் கட்டுப்படுத்த நினைக்கிறது. அது என்னிடம் நடக்காது. தேவைப்பட்டால் அவர்களுக்கு எப்படி பாடம் கற்பிப்பது என்று எனக்குத் தெரியும்" என்று பலத்த கைத்தட்டல்களுக்கு இடையே தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற போது அவர் எச்சரித்துள்ளார். மகாராஜா தொலைக்காட்சிக்கு மட்டுமல்ல, அவரது எச்சரிக்கை அனைத்து ஊடகங்களுக்குமானது போலவே உள்ளது. "எனது கடந்த 14 மாத ஆட்சியில், நான் ஊடகங்களின் மீது எவ்விதமான அழுத்தங்களையும் அளிக்கவில்லை. ஆனால் அவர்கள் ஊடக சுதந்திரத்தை துஷ்பிரயோகம் செய்ய முயன்றால், அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க சட்டங்கள் உள்ளன. அப்படிப் பல வழிகள் உள்ளன, அந்த வழிகளில் நான் நடவடிக்கை எடுப்பேன்" என்று அதிகாரத்துடன் கூடிய அச்சுறுத்தலை விடுத்துள்ளார் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச.

ஐநாவுக்கு அவசரக் கடிதம்

இதனிடையே இலங்கையிலுள்ள சுற்றுச்சூழல் மற்றும் இயற்கை வளங்கள் கற்கை மையம் - செண்டர் ஃபார் என்விரோண்மெண்டல் அண்ட் நேச்சர் ஸ்டடீஸ் - ஐநாவின் ஒரு அங்கமான யுனெஸ்கோவுக்கு இலங்கையில் நடைபெறும் சுற்றுச்சூழல் சீர்கேட்டை விளக்கி கடிதம் ஒன்றை எழுதியுள்ளது.



"ஐ நா மரபுச்சின்னம் மற்றும் மழைக்காடுகளில் இரண்டு நீர் நிலைகளைக் கட்டுவது ஏற்புடையது மட்டுமல்ல, அது இயற்கைக்கு எதிரான குற்றமும் ஆகும். மேலும் அங்கு நிலவும் மிகவும் செழிப்பான பல்லுயிர் தன்மைக்குப் பாரதூரமாக தீங்கை ஏற்படுத்தும்" என்று அந்தக் கடிதத்தில் அவ்வமைப்பின் தலைவர் ரவீந்திர காரியவசம் குறிப்பிட்டுள்ளார்.

அந்த வனப் பகுதி இலங்கைக்கே உரிய 60% பறவைகள் மற்றும் தாவரங்களின் மூலாதார இடமாகும். சிங்கராஜா வனப்பகுதி 1978 ஆம் ஆண்டு உலகின் பல்லுயிர் பாதுகாப்பு வலையங்களில் ஒன்றாகவும், பத்தாண்டுகளுக்குப் பிறகு உலக மரபுச்சின்னமாகவும் அங்கீகரிக்கப்பட்டது. கடந்த 2017ஆம் ஆண்டு இயற்கை பாதுகாப்பான பன்னாட்டுக் கூட்டமைப்பு - ஐயூசிஎன் - சிங்கராஜா வனப்பகுதியின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு குறித்து "கணிசமான கவலையை வெளியிட்டிருந்தது" என்று காரியவசம் தனது கடிதத்தில் மேலும் கூறியுள்ளார்.

எனவே சிங்கராஜா வனப்பகுதியைச் சீரழிப்பது, இலங்கையில் மிகவும் பெருமதியான இயற்கை வளத்தையும், பல்லுயிர் சூழலையும் மிகவும் பாதித்து சீர் செய்ய முடியாத தீங்கை ஏற்படுத்தும் என்று கூறி "அதை உடனடியாகத் தடுத்து நிறுத்த உதவுங்கள்" என்று அந்தக் கடிதம் கோரியுள்ளது.

முன்மொழிவு மட்டுமே என்று அரசு "பல்டி"

உள்நாட்டில் எழுந்த கடும் எதிர்ப்பு மற்றும் விமர்சனங்கள் காரணமாக அரசு இப்போது "அந்தர் பல்டி" அடித்துள்ளது.

சிங்கராஜா வனப்பகுதியில் இரண்டு நிலைகளை சீன நிறுவனம் ஒன்று கட்டுகிறது என்று அறிவித்த அரசு, இரண்டே நாட்களில் அது பிரேரணை மட்டுமே என்று செவ்வாய்க்கிழமை (23 மார்ச்) அறிவித்தது.

இரண்டு நாட்களில் அறிவிப்பிலிருந்து பின்வாங்கிய ராஜபக்சக்களுக்கு பாதுகாக்கப்பட்ட வனப் பகுதியில் கைவைப்பது தேன்கூட்டில் கை வைப்பது போன்றது என்பது தெரியாதா அல்லது நாட்டில் எந்தத் தேனீயும் நம்மைக் கொட்டாது என்கிற நம்பிக்கையா என்பது அவர்களுக்கே வெளிச்சம்.

ஏற்கனவே இறுதிகட்டப் போரின் போது இலங்கை அரசும் இராணுவமும் தேன் கூட்டில் கையை வைத்தது. அப்போது தேனை நக்கி சுவை கண்ட அரசு பின்னர் தேனீக்கள் கொட்ட ஆரம்பித்தவுடன் அதன் வலியை உணர்ந்தது. தமிழ்த் தேனீக்கள் கொட்டியதைச் சுலபமாகப் புறந்தள்ளிவிடலாம் என்று கருதிய அரசு அதன் பாதிப்புகளை இன்னும் அறிந்ததாகத் தெரியவில்லை.

இப்போது நாட்டின் மிக முக்கியமான இயற்கை வளத்தில் கைவைக்க எண்ணும் அவர்கள் அதை மாற்றிக் கொள்வது அவர்களுக்கும் நாட்டுக்கும் நல்லது.

தமிழர்களின் நிலங்கள் அபகிர்க்கப்படும் போது வாய் மூடி மௌனிகளாக இருந்த தென்னிலங்கை மக்கள் இப்போது சிங்கராஜா வனப்பகுதிக்காக குரல் கொடுப்பது வரவேற்கத்தக்கது.

---

நேரிட்டது. இதையடுத்து, புதிய முதல் மந்திரியார் என காங்கிரசில் கேள்வி எழுந்தது. அப்போதுசி. சுப்பிரமணியத்தை கொண்டு வரமுயன்றார், ராஜாஜி. ஆனால் பெருந்தலைவர் காமராஜர் சாதுர்யமாக செயல்பட்டு எம்எல்ஏக்களின் பெரும்பான்மை ஆதரவைப் பெற்று முதல் மந்திரியாகப்பதவிஏற்றார். பொதுவாக அப்போது காங்கிரசில் நிலவிய பிராமண ஆதிக்கத்தை காமராஜர் விரும்பவில்லை. எனவே, ராஜாஜியின் ஆதரவாளர் கையில் முதல்வர்பதவி செல்வதை அவர் தடுக்க எண்ணினார். அவரது இந்த எண்ணத்துக்கு ஈவெரா பெரியாரும் (திக), அறிஞர் அண்ணாவும் (திமுக) துணை நின்றனர்.

குடியாத்தத்தில் வென்ற காமராஜர்

முதல் மந்திரியான காமராஜர் அப்போது சட்டமன்ற உறுப்பினராக இல்லை. ஸ்ரீவில்லிபுத்துகீர் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தார். அந்தப்பதவியை ராஜினாமா செய்துவிட்டு, கம்யூனிஸ்டுகள் வலுவாகஇருந்த குடியாத்தம் சட்டமன்றத்தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிட்டார். அவருக்கு திமுகவும், திகவும் நிபந்தனையற்ற ஆதரவு அளித்தன. "குணாளாவா குலக்கொழுந்தேவா..." எனஅழைத்து, காமராஜரை குடியாத்தத்தில் போட்டியிடவைத்தார், அண்ணா. அந்தத்தேர்தலில் காமராஜர் வெற்றி பெற்று, ஏழை மாணவர்களுக்கும் கல்விஎளிதில் போய்ச்சேரும் வகையில்திட்டங்கள் தீட்டி, 1957 வரை நல்லாட்சி செய்தார். இதற்கு முன்னதாகவே, தமிழகத்தில் இருந்த ஆந்திரத்தின் பகுதிகள் பிரித்து எடுக்கப்பட்டு அம்மாநில மக்களின் கோரிக்கையை ஏற்று, 1953ல் ஆந்திரமாநிலம் உருவாக்கப்பட்டது. கர்நாடகம், கேரளம் ஆகிய மொழிவழி மாநிலங்களும் 1956ல்தோன்றின.

தமிழ்நாடு, சென்னை மாகாணமாகவே நீடித்தது. தமிழ்நாடு என்ற பெயர்க்கோரிக்கையை காங்கிரஸ் அரசு ஏற்றுக்கொள்ள மறுத்தநிலையில் அடுத்த சட்டமன்றத்தேர்தல் 1957ல் நடந்தது.

(1957 சட்டமன்றத்தேர்தல் நிலவரத்தை அடுத்து பார்ப்போம்).

**- மணிராஜ், திருநெல்வேலி**

# கூட்டமைப்பினரின் பல செயற்பாடுகள் அரசாங்கத்தை பாதுகாப்பது சிலரின் நலன்களை பாதுகாப்பதுடன் அமைகின்றது



கூட்டமைப்பினரின் பல செயற்பாடுகள் இந்த அரசாங்கத்தை பாதுகாப்பதுடன் ஒரு சிலரின் நலன்களையும் நிறைவேற்றிக் கொள்ளும் வகையிலேயே அமைகின்றது. இதனை எமது மக்கள் தெளிவாக விளங்கிக் கொண்டு செயற்பட வேண்டும்தமிழினத்திற்கு துரோகமிழைக்கும் ஆட்சியாளர்களை பாதுகாக்கின்ற செயற்பாடுகளையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னெடுத்து வருவதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றஞ்சாட்டியுள்ளார்.

யாழ்ப்பாணம் கொக்குவிலிலுள்ள தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் நேற்றுக் காலை நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்படி குற்றச்சாட்டை கஜேந்திரகுமார் முன்வைத்துள்ளார்.

அது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது, கடந்த சில தினங்களுக்கு முன்னர் யாழில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது ஜெனீவா விவகாரம் தொடர்பில் அரசாங்கத்தை பாதுகாத்து அரசின் ஊதுகுழலாக எமது கட்சி செயல்படுவதாக சுமந்திரன் முன்வைத்த குற்றச்சாட்டை அடியோடு நிராகரிக்கின்றோம்.

இத்தகைய பொய்யான குற்றச்சாட்டுகளை அவர் வேண்டுமென்றே முன்வைக்கின்றார். ஏனெனில் கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக ஜெனீவா விடயத்தில் நாம் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு செல்ல வேண்டுமென தெரிவித்து வருகிறோம். ஆனால் அவ்வாறு செய்வது சாத்தியமில்லை என்றும் இலங்கை அரசாங்கத்திற்கு கால அவகாசம் வழங்கி இலங்கை அரசாங்கத்தை பாதுகாக்கின்ற வேலைகளை சுமந்திரன் உள்ளிட்ட கூட்டமைப்பினர் தொடர்ச்சியாக செய்து வந்தனர்.

அதேபோன்று தற்போது ஜெனீவாவில் கொண்டுவரப்படவுள்ள 46.1 என்ற உத்தேச வரைவுத் தீர்மானம் தமிழ் மக்களுக்கு பெரும் ஏமாற்றத்தை அளித்திருக்கும் நிலையில் அதனை கண்ணை மூடிக்கொண்டு அவசர அவசரமாக கூட்டமைப்பு ஆதரிக்கின்றது. என்றார்.

# அமைச்சர டக்ளஸ் தேவானந்வைச் சந்திப்பதில் எவ்வித பயனில்லை

## - காணமால் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள்

# என்னை சந்திப்பதும் விடுவதும் அவர்களது விருப்பம்

## - அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா



"எமது பிள்ளைகளையும் அன்பக்குரியவர்களையும் காணாமல் ஆக்கியதில் முக்கிய பங்கு வகித்தவரும் தற்போதைய ஜனாதிபதியுமான கோட்டாபாய இராஜபக்சாவின் அறிவிப்புக்கு அமைவாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களை தான் சந்திக்கவுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். ஆனால் இலங்கையில் வடக்கு கிழக்குப் பகுதிகளில் அரசாங்கத்த்தினாலும் அரச படையினராலும் காணா-மல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களாகிய நாம் அந்த அமைச்சரை ஒரு போதும் சந்திக்கப் போவதில்லை. அவரை சந்திக்கும் விருப்பமும் இல்லை".



இவ்வாறு வடக்கு கிழக்கு மாகாணங்களில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கத்தின் தலைவி யோ. கனகரஞ்சினி பகிரங்கமாகத் தெரிவித்துள்ளார். இந்த விடயம் தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு மேலும் தெரிவிக்கையில்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், அனைவரும் தங்களின் உறவினர்கள் காணாமல் ஆக்கப்பட்டமைக்கு அரசாங்கத்தின் முக்கிய பள்ளிகள் தொடக்கம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வரை பலரும் தொடர்புடையவர்கள் என்றும் இதனால் அவர்களே இந்த விடயம் தொடர்பாக பொறுப்புக் கூற வேண்டும் என தொடர்ச்சியாக கூறி வருகின்றனர். மேலும், தற்போதைய ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்த போதே எங்கள் உறவுக்ள அதிகம் காணாமல் ஆக்கப்பட்டனர். அந்த பின்னர் மகிந்த ராஜபக்ஸ அரசின் காலத்திலும் காணாமல் ஆக்கப்பட்ட எம் உறவுகளுக்கு அரே-சா அவ்வரசில் அமைச்சராக இருந்த டக்ளஸ் தேவானந்தாவோ எவ்விதமான ஆதரவையும் வழங்கிவில்லை. அத்துடன் அவர்கள் பாதிக்கப்பட்ட அந்த உறவுகளுக்கு எந்த தீர்வையும் பெற்றுத்தரவில்லை.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கு இலங்கை அரசினால் நீதி கிடைக்கும் என்ற நம்பிகை அற்றுப் போய்விட்டது. இந்த நிலையில் அந்த அரசின் பிரதிநிதியாக உள்ள அமைச்சரை சந்திப்பதில் பயனில்லை என்றும் இதனால் சர்வதேசமே எமக்கான நீதியை பெற்றுத் தர வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கத்தின் தலைவி யோ. கனகரஞ்சினி பகிரங்கமாகத் தெரிவித்துள்ள கருத்துக்கள் தொடர்பாக கொழும்பில் பத்திரிகையாளர்களக்கு தனது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பின்வருமாறு தெரிவித்தார்.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கத்தின் தலைவி யோ. கனகரஞ்சினி தெரிவித்த கருத்துக்களில் அவர்களுடைய பாதிப்பு எனக்கு விளங்குகின்றது. ஆனால் நான் அவர்களுக்கு உதவி செய்யவே விரும்புகின்றேன். ஆனால், என்னை சந்திப்பதும் விடுவதும் அவர்களது விருப்பம். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் ஒவ்வொரு அமைப்புக்களும் ஒவ்வொரு உள்நோக்கங்களுடன் செயல்படுகின்றன. எனவே அவர்கள் அதற்கேற்ற மாதிரியே செயற்படுவார்கள். நான் பிரச்சினையை தீர்க்க வேண்டும் என்று யோசிக்கின்றேன் அவர்கள் பிரச்சினையை தீராப் பிரச்சினையாக வைத்திருக்க யோசிக்கின்றார்கள். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களை சந்திப்பதற்கு கடந்த முறை நான் அழைப்பு விடுத்து நூற்றுக்கணக்கானவர்கள் வந்து சந்தித்தார்கள். பின்னர் அச் சந்திப்புக்களை அரசியல் சூழ் நிலையால் தொடர முடியவில்லை.



தற்போது நான் அதனை திருப்பி தொடர்கின்றேன் எனக் குறிப்பிட்ட அமைச்சர், நான் சங்கங்களுக்கு அழைப்பு விடவில்லை. பாதிக்கப்பட்டவர்களுக்கே அழைப்பு விடுத்துள்ளேன். அவர்களை நான் வலிந்து அழைக்கவுமில்லை, எனவே அவர்கள் விரும்பினால் வந்து சந்திக்கலாம். மேலும் எனக்கும் அந்த பாதிப்புக்கள் உண்டு. எனது தம்பி மற்றும் நெருக்கமானவர்கள் என பலர் கொல்லப்பட்டுள்ளனர், காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்" இவ்வாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

# தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் குருதிக்கொடை முகாம்








தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் குருதிக்கொடை முகாம் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் குருதிக்கொடை முகாம் இன்று சனிக்கிழமை (20.03.2021) திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் நடைபெற்றுள்ளது. யாழ். போதனா வைத்தியசாலையைச் சேர்ந்த வைத்திய கலாநிதி ரூபிகா சேயோன் அவர்களின் தலைமையில் இரத்தவங்கிப் பிரிவினர் கலந்துகொண்டு குருதிச் சேகரிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

இது தொடர்பாகத் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் பொதுச் செயலாளர் திரு. மகேசன் கஜேந்திரன் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், அவசர தேவைகளுக்குப் பயன்படுத்துவதற்குக் குருதிக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுவதாகவும், இரத்தம் வழங்கி உதவுமாறும் இரத்த வங்கி அவசர கோரிக்கை ஒன்றை விடுத்திருந்தது. அரசியற் கட்சிகளுக்கு அரசியற் செயற்பாடுகளில் மாத்திரம் ஈடுபடாமல் சமூகத்தின் ஏனைய விடயங்களிலும் பங்கேற்க வேண்டிய கடப்பாடு இருக்கின்றது. இதன் அடிப்படையிலேயே குருதிக்கொடை முகாமை ஏற்பாடு செய்திருந்தோம். ஆர்வத்துடன் அனேகர் கலந்து கொண்டு இரத்தம் வழங்கியிருந்தார்கள். ஆனால், இவர்களிற் பலர் ஏற்கனவே குருதிக்கொடையில் ஈடுபட்டவர்கள். குருதிக்கொடை தொடர்பாகத் போதிய விழிப்புணர்வு இல்லாததன் காரணமாக புதிதாகக் குருதியை வழங்க வருகின்றனவர்களின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளது என்று தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், ஒருவர் ஒருதடவை வழங்கும் 1பைந்து இரத்தம் 3 உயிர்களைக் காப்பாற்றக்கூடியது. உயிர் காக்கும் இந்த உன்னத பணி குருதியைக் கொடையாக வழங்குபவர்களுக்கும் பல்வேறு நன்மையைத் தரக்கூடியது. இது தொடர்பாக விழிப்புணர்வைச் சமூகத்தில் நாம் ஏற்படுத்த வேண்டும். இந்த முகாம்கள் அதற்கு வழிசமைக்கும். தொடர்ந்தும் பல்வேறு இடங்களிலும் இதுபோன்ற முகாம்களைச் செய்யவுள்ளோம் என்றும் குறிப்பிட்டார். குருதிக்கொடை முகாமில் பங்குகொண்ட அனைவருக்கும் செவ்விரத்தம் பூச்செடிகள் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் அவர்களால் வழங்கி வைக்கப்பட்டமையும் குறிப்பிடப்பட்டது.


பாதிப்பற்றது என நீங்கள் கருதும் தேநீர் இடைவேளை நீங்கள் நினைப்பதை விட அதிக பாதிப்பை ஏற்படுத்தக் கூடும்.
COVID-19 பரவுவதைத் தடுக்க முகக் கவசம் அணியுங்கள், உங்கள் கைகளைக் கழுவுங்கள், தனிநபர் இடைவெளியைப் பேணுங்கள்.
ontario.ca/covid-19 மூலம் மேலும் அறியுங்கள்
ஒன்ராறியோ அரசாங்கத்தால் கட்டணம் செலுத்தப்பட்டது
Ontario

# தென்கிழக்கு மார்க்கம் பகுதிக்கு கோவிட் - 19 சம்பந்தமான அதிமுக்கியத்துவமான சமூகச் செயற்பாடுகள்

நீங்கள் கோவிட் - 19 நோயினால் பாதிக்கப்பட்டிருந்து, உங்களுக்குச் சமூக ஆதரவு தேவைப்பட்டால் எங்களை அழையுங்கள்.

**Carefirst** இனது சமூக ஆதரவு சேவைகள் உள்வாங்கல் தொடர்பு எண்:

**416 646 5108** (திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை, முற்பகல் **9. 00** மணியிலிருந்து பிற்பகல் **5. 00** மணிவரை)

எமது பணியாளர்களால் கீழ்வரும் மொழிகளில் உங்களுக்கு உதவ முடியும்:
ஆங்கிலம், கன்ரனீஸ், மன்டறின், ஹிந்தி, பஞ்சாபி, தமிழ், உருது

## கிடைக்கக்கூடிய சேவைகள்:

- உணவுப் பாதுகாப்பு
- போக்குவரத்து
- மளிகைப் பொருள் கொள்வனவு
- குழந்தைப் பராமரிப்பு, தன்னார்வத் தனிமைப்படுத்தல் மையம், தங்குமிடம், வருமான உதவி ஆகியவற்றிற்கான சமூக வளங்கள்
- உளரீதியான ஆதரவு, ஆதரவுக்கான ஆலோசனை (மெய்நிகர் வழியாக)
- மருந்து / அத்தியாவசியப் பொருள் விநியோகம்
- பராமரிப்பு ஒருங்கிணைப்பு

***தகுதியானவர்களுக்கு மானியங்கள் கிடைக்கின்றன.**

## ஏனைய வளங்கள்:

**ஒன்ராரியோ தொலைபேசிச் சுகாதார சேவை உங்களுக்கு நோய்க்குரிய அறிகுறிகள்** காணப்பட்டால் அழைக்க வேண்டியது:
Tel: 1-866-797-0000

**ஒன்ராரியோ 211 / சமூகம் மற்றும் சமூக சேவைகள் உதவித் தொடர்பு:**
211ontario.ca

யோர்க் பிராந்திய கோவிட் - 19 தன்னார்வத் தனிமைப்படுத்தல் நிலையம்
**York Region COVID-19 Voluntary Isolation Centre**
1-877-464-9675
york.ca/isolationcentre

**யோர்க் பிராந்தியப் பொதுச் சுகாதாரப் பிரிவு**
1-800-361-5653

Carefirst **முதியோர், சமூக சேவை இணையம் மற்றும் கீழ்வரும் சேவைப் பங்காளர்களினால் இது எடுத்துவரப்படுகிறது**:

Carefirst Family Health Team
Centre for Immigrant and Community Services
Community & Home Assistance to Seniors (CHATS)
City of Markham
EYRND Ontario Health Team
Health Common Solutions
Health for All Family Health Team
Hong Fook Mental Health Association
Islamic Society of Markham - Jam'e Masjid Markham
Markham Chinese Presbyterian Church
Markham Stouffville Hospital
Markham Wesley Centre
Social Services Network
Tamil Civic Action
The Cross-cultural Community Services Association
YMCA of Greater Toronto (Markham)
York Region Community and Health Services
York Region Public Health
105 Gibson Centre
360° Kids Support Services

**Funded by: Ontario Health and Central LHIN**


Updated on February 5, 2021

## We are proud of our Premier because he always wants to get the things done. - Ontario's Finance Minister Peter Bethlenfalvy

# எமது முதல்வர் பற்றி நாம் பெருமிதம் கொள்கின்றோம்: அவர் எப்போதும் திட்டங்களை நிறைவேற்றுவதையே விரும்புகின்றவர்

## மாகாண நிதி அமைச்சர் புகழாரம்





எமது மரியாதைக்குரிய முதல்வர் டக் போர்ட் அவர்கள் எப்போதும் திட்டங்களை உடனடியாக நிறைவேற்றுவதிலேயே கவனம் செலுத்துகின்றார். அதுவும் எவ்வளவு விரைவாக திட்டங்கள் மக்களுக்கு பலனைத் தருகின்றன என்பதை எப்போதும் உறுதி செய்கின்றார். எனவே அவரது வழிகாட்டலில் நாம் பணியாற்றுவதை பெருமையாகக் கொள்கின்றோம்".





இவ்வாறு கூறினார் ஒன்றாரியோ மாகாணத்தின் நிதி அமைச்சர் பீற்றர் பெத்லென்பல்வி.

நேற்று முன்தினம் ஒன்றாரியோ மாகாணப் பாராளுமன்றத்தில் அரசாங்கத்தின் 2021ம் ஆண்டிற்காக வரவு செலவுத்திட்டத்தை சமர்ப்பித்து உரையாற்றிய அவர், நேற்றைய தினம் வியாழக்கிழமை, ஒன்றாரியோ மாகாணத்திலுள்ள பல்மொழிப் பத்திரிகையாளர்களை இணையவழி ஊடாக சந்தித்து உரையாடுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேற்படி ஊடகச் சந்திப்பில் ஒன்றாரியோ மாகாண நிதி அமைச்சின் பாராளுமன்ற உதவீயாளர் ஸ்டான் சோ மற்றும் ஸ்காபுறோ அஜின்கோர்ட் தொகுதியின் உறுப்பினர் அரிஸ் பாபிகியன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

முதலில் கலந்துரையாடலை ஆரம்பித்து வைத்து ஒன்றாரியோ அரசின் சார்பாக மாகாண நிதி அமைச்சின் பாராளுமன்ற உதவீயாளர் ஸ்டான் சோ மற்றும் ஸ்காபுறோ அஜின்கோர்ட் தொகுதியின் உறுப்பினர் அரிஸ் பாபிகியன் ஆகியோர் தங்கள் கருத்துக்களைக் கூறினார்கள்.

அவர்கள் தங்கள் உரையில் மாகாண முதல்வர் மற்றும் நிதி அமைச்சர் ஆகியோர் எமது ஒன்றாரியோ மாகாண மக்கள் தொடர்பாக காட்டும் கரிசனை மற்றும் பிரச்சனைத் தீர்க்க எடுக்கும் நடவடிக்கைகள் ஆகியவை பற்றி எடுத்துரைத்தார்கள்.

அவர்களைத் தொடர்ந்து உரையாற்றிய மாகாண நிதி அமைச்சர் பீற்றர் பெத்லென்பல்வி அவர்கள் அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டம் தொடர்பான முக்கிய விடயங்களை எடுத்துரைத்தார்.

அவர் அங்கு உரையாற்றுகையில், கொரோனாவின் தாக்கத்தை அரசாங்கமும் ஒன்றாரியோ வாழ் மக்களும் எதிர்கொண்டு பின்னர் தடுப்பூசி பயன்படுத்து முறை உலகின் பல நாடுகளிலும் ஆரம்பிதத போது எமது முதல்வரும் சுகாதார அமைச்சரும் ஏனைய முக்கிய அமைச்சர்களும் அதிகாரிகளும் எமது மாகாண மக்களுக்கு தடுப்பூசியை உடனடியாக வழங்குவதற்கு முன்னுரிமை வழங்கினார்கள். ஆனால் ஆரம்பத்தில் ஒரு குறிப்பிட்ட நிதியே ஒதுக்கப்பட வேண்டும் என்று தீர்மானித்திருந்தாலும் நடவடிக்கைகளில் இறங்கிய பின்னரே எமக்குத் தெரிந்தது, இன்னும் அதிகளவு நிதி தடுப்பூசிகளை கொள்வனவு செய்வது மற்றும் கொள்வனவு செய்யப்பட்டவற்றை மக்களின் இடங்களுக்கு கொண்டு சென்று அவர்களுக்கு செலுத்துவதற்கு தேவைப்பட்டது என்ற வியடம்.

ஆனால் எமது முதல்வர் அவர்கள் கட்டுப்பாடுகள் எதுவும் இன்றி வைத்தியசாலைகள், மற்றும் முதியோர் நிலையங்கள், குழந்தைகள் காப்பங்கள், பாடசாலைகள் அத்துடன் தடுப்பபூசிகள் ஆகியவற்றுக்கு அதிகளவு நிதியை ஒதுக்கும் படி எம்மிடம் கேட்டுக்கொண்டார். எனவே நாம் அவருக்கும் அவரது அலவலகத்தின் அதிகாரிகளுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்" என்றார்.

தொடர்ந்து அமைச்சர் அவர்கள் பல்மொழிப் பத்திரிகையாளர்களினால் முன்வைக்கப்பெற்ற கேள்விகளுக்கு பதிலளித்தார்.

இந்த 2021ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் சிறு தொழில் செய்யும் நிறுவனங்கள் அல்லது தனி மனிதர்களுக்கு எவ்வாறான சாதகமான நிதி ஒதுக்கீடுகளை செய்துள்ளீர்கள்" என்று ஒரு சீன மொழிப் பத்திரிகை ஆசிரியர் முன்வைதத கேள்விக்கு பதிலளிக்கையில், இது நல்லதோர் கேள்வியாகும். இந்த கோவிட்-19 பாதிப்பு ஒன்றாரியோவின் சிறு தொழில் செய்கின்ற நிறுவனங்களையும் தனி மனிதர்களையும் மிகவும் பாதித்துள்ளது.

எனவே அவர்களை தூக்கிவிட வேண்டிய மாகாண அரசின் முக்கிய கடமையாகும்.

எமது 2021 வரவு செலவுத் திட்டத்தில் சிறு தொழில் நிறுவனங்களுக்கு பல சலுகைகளை வழங்குகின்றோம். உற்பத்தி சார்ந்த நிறுவனங்களுக்கு தொழில் சார்ந்த பணியாளர்களை தேர்ந்தெடுக்கும் போது, அவர்களுக்கு பயிற்சிகளை வழங்க நிதி உதவிகளை அறிவித்துள்ளோம். அந்த நிறுவனத்தின் பணியாளர்கள் மேலும் தொழிற்பயிற்சி தேவையாக இருந்தால் தொழில் நுட்பக் கல்லூரிகள் அல் சமூக கல்லூரிகள் ஆகியவற்றிற்குச் சென்று பயிற்சிகளை மேற்கொண்டு தகுதிவாய்ந்த தொழில் வல்லுனர்களாக பட்டம் பெற்ற அந்த நிறுவனத்தின் வளர்ச்சிக்கு உதவுகின்றவர்களாக விளங்குவார்கள். அத்துடன் சேதமடைந்த அல்லது இயந்திரங்கள் அல்லது கருவிகளை அகற்றி விட்டு புதிய இயந்திரங்களை கொள்வனவு செய்ய நிதி உதவிகள் வழங்கப்படும். அப்போது அந்த நிறுவனங்களின் உற்பத்தித் திறன் அதிகரிக்கும்" என்றார்.


# கோவிட் -19
## POP-UP சோதனை

**உங்களுக்கு ஏதேனும் அறிகுறிகள் இருந்தால், அல்லது நீங்கள் COVID-19 உடன் தொடர்பு கொண்டிருக்கலாம் என்று நினைத்தால், தயவுசெய்து ஒரு சந்திப்பை பதிவு செய்து சோதனை செய்யுங்கள்.**

எல்லாம் வரவேற்கத்தக்கது, வயது வரம்பு இல்லை. உங்கள் **OHIP** சுகாதார அட்டையை கொண்டு வாருங்கள். உங்களிடம் **OHIP** அட்டை இல்லையென்றால், தயவுசெய்து 1 துண்டு ஐடியைக் கொண்டு வாருங்கள்.

* தயவுசெய்து கவனிக்கவும், சர்வதேச பயண அனுமதிக்கு **COVID-19** சோதனை கோரும் நபர்கள் பொதுவில் நிதியளிக்கப்பட்ட **COVID-19** சோதனைக்கு தகுதியற்றவர்கள்

**Carefirst One-Stop Multi-Services Centre**
300 Silver Star Blvd, Scarborough ON M1V 0G2 (Midland & McNicoll)
ஒவ்வொரு வியாழக்கிழமை.
தொடக்க தேதி: ஜனவரி 14
2:00 p.m. - 6:30 p.m.

**YMCA**
101 YMCA Blvd, Markham ON L6G 0A1 (Kennedy & Hwy 407)
ஒவ்வொரு புதன் & வெள்ளி.
தொடக்க தேதி: ஜனவரி 30
9:30 a.m. - 2:30 p.m.

**Markham Chinese Presbyterian Church**
2250 Denison St, Markham ON L3S 1E9 (McCowan & Denison)
ஒவ்வொரு செவ்வாய் & புதன்.
தொடக்க திகதி: பிப்ரவரி 2
9:30 a.m. - 2:30 p.m.

**Islamic Society of Markham (நியமனம் மூலம் மட்டுமே)**
2900 Denison Street, Markham, ON L3S 4J8 (Denison & Middlefield)
தயவுசெய்து கவனிக்கவும்: இந்த இடத்தில் சோதனை செய்வது வாகன நிறுத்துமிடத்தில் **drive-thru** நடைமுறை மூலம் இயங்கும்
ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும்
(வானிலை அனுமதித்தால்)
தொடக்க தேதி: மார்ச் 12, 2021
9:30 a.m. - 2:30 p.m.

உங்கள் சோதனை சந்திப்பை முன்பதிவு செய்யுங்கள்
**www.carefirstontario.ca**
**Walk-In** ஆனால் காத்திருப்பு நேரம் மாறுபடலாம்

மேலும் தகவலுக்கு, தயவுசெய்து பார்வையிடவும் **www.carefirstontario.ca** அல்லது அழைக்கவும் **416-646-5108**

**உங்களிடம் கொண்டு வரப்பட்டது: Carefirst Seniors and Community Services Association**
Carefirst Family Health Team
Health for All Family Health Team
Markham Chinese Presbyterian Church
Markham Stouffville Hospital
YMCA of Greater Toronto

Updated on January 27, 2021

SPLC

## We Are Looking for Volunteers

**Are you interested in promoting healthy active living to older adults and seniors and seeking volunteer opportunities?**

**If you are, SPLC (Senior Persons Living Connected) cordially invites you to join our Team.**

**Eligibility:**

- Good communication skills in Tamil, or English
- Youth, Older Adults, and Seniors
- Friendly, respect privacy, and confidentiality
- Available to assist and support Teleconferencing or other Virtual Programs

**Benefits of volunteering:**

- Get trained on how to effectively reach out and engage seniors
- Build confidence in facilitating fun-filled activities
- Gain meaningful work experiences and satisfaction

**For more information, For more information, please call Lydia (lydia@splc.ca, 416-490-2966) or Siva (email: sivanesan@splc.ca , Call, 416-493-3333 ext 288).**

**Senior Persons Living Connected**
**3333 Finch Avenue East Scarborough, ON, M1W 2R9**
**www.splc.ca**
**(416) 493 – 3333**


# இரட்ணம் பவுண்டேசன் இலவச கணினி வகுப்பறை கட்டிட திறப்பு விழா நிகழ்வு







ஒலுமடு நெடுங்கேணி வவுனியா எனும் முகவரியில் உள்ள கிராமத்தில் இரட்ணம் பவுண்டேசன் நிறுவனத்தினால் சிவனருள் இலவச கல்வி நிலையத்தின் ஒரு பகுதியான இலவச கணினி வகுப்பு நடைபெற்று வருகின்றது. அதற்கான நிரந்தரமான வகுப்பறை கட்டிடம் 20.03.2021 அன்று மாலை 2.30 மணியளவில் வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

மேற்படி நிகழ்வு கணினி வகுப்பு தலைமை ஆசிரியர் திரு. வி. சுவேந்தன் தலைமையில் ஆரம்பமானது. இந் நிகழ்வில் பிரதம அதிதியாக வவுனியா வடக்கு வலய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப ஆசிரிய ஆலோசகர் திரு. ச. சிவராசா (ISA) கலந்து கொண்டார். மற்றும் சிவனருள் நிறுவன பணியாளர் து. சந்திரனும் ஆசிரியர் த. செந்தீபனும் கல்வி நிலையத்தின் நிர்வாகி திரு. கு. லோகிதாசன் அவர்களும் கலந்துகொண்டனர்.

விருந்தினர்களை மாணவர்கள் வரவேற்புடன் ஆரம்பமாகி மங்கள விளக்கினை திரு. ச. சிவராசா ஏற்றிவைக்க இரட்ணம் பவண்டேசன் இலவச கணினி வகுப்பு அறை கட்டிட பெயர் பலகையினை சிவனருள் நிறுவன பணியாளர் திரு. த. செந்தீபன் அவர்கள் திரைநீக்கம் செய்து வைக்க பிரதான கணினி வகுப்பறை கட்டிடத்தை திரு. ச. சிவராசா (ISA) நாடா வெட்டி திறந்து வைத்தார்.

தொடர்ந்து மாணவர்கள் கணினி வகுப்பு செயற்பாடுகளை ஆரம்பித்தனர். ஆதை தொடர்ந்து பிரதமவிருந்தினர் தனது உரையில் கணினியே எதிர்காலதில் சகல கல்விச் செயற்பாடுகளுக்கும் பிரதான காரணியாக மாறும் காலம் உருவாகி வருவதால் கணினி கற்கை நெறி மிக முக்கிய இடத்தை பிடித்துள்ளது என்பதை மாணவர்களுக்கு தெளிவுபடுத்தினார். பின்பு நிகழ்வுகள் யாவும் 4.00 மணிக்கு நிறைவடைந்தது. மேற்படி நிகழ்வில் கல்விநிலைய மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்களும் கலந்துகொண்டனர்.

நன்றி, து. சந்திரன்




# கனடாவில், தேய்கிறது தேன்நிலவு, நெருங்குகின்றன நெருக்கடிகள்...

நன்றி எமது கனடிய அரசுக்கு. கொரணா வியாதியில்தவிக்கும் எமக்கு தண்ணி மட்டுமல்ல, வடை, பாயாசத்துடன் சாப்பாடு தந்தது போன்று பல விதமான கொடுப்பனவுகளை அளித்து வருகிறது. மிக்க நன்றி.

இத்தகைய அரச கொடுப்பனவுகளின் பெரும்பகுதி, சமுதாயத்தின் அடிமட்டத்தில் வாழ்பவர்கள். அடிப்படை ஊதியம் பெறுபவர், சிறுதொழிலதிபர்கள். மாணவர்கள், மாற்றுத்திறனாளிகள் என கனடியர்களுக்கு பெருமளவு மடைதிறந்து பாச்சப்படுகிறது. இக் கொடுப்பனவுகள் எதிர்வரும் யூன் மாதம் வரை நீடிக்கபட்டிருக்கிறது என்ற செய்தியும் மகிழ்ச்சிக்குரியதே.

இவ்வாறானவேளை, நிதிபடைத்தவர்கட்கு உயர்தொழில்துறை நிறுவனங்களுக்கு இந்த இடக்குமுடக்கென. பொருளாதார நெருக்கடிகள் இல்லை. அவர்களின் சில நிறுவனங்களுக்கு மேலதிகவருவாய்கூட இக் கொரணா வியாதி உச்சத்தில் உள்ள இவ்வேளையில் கிடைக்கிறது.

இவ்வாறாக இருக்கும் நிலையில் கடன் பளுவாலும் வருவாய் இழப்பாலும் வெலை நீக்கத்தாலும். கணிசமான எம்மவர்கள் தவியாய்த் தவிக்கின்றார்கள். கடன் அட்டைகளை தாராளமாக பாவித்த அதற்கான வட்டியைக் கட்டியே மேலும் அது படுகுழிக்குள் தள்ளிவிட்டது. மாதக்கணக்காக, வருடக்கணக்காக கட்டி வந்த பின்னரும் கடன் கரையாமல் இருப்பது கண்டு கலங்குகின்றார்கள். அமெரிக்காவில் பல கிரடிட்காட் கம்பனிகள் வட்டிவீதத்தை குறிப்பிட்ட காலத்திற்கு பெருமளவு குறைந்துள்ளன. கனடாவில் இவ்வாறான நிதி நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டால் ஏதோ, காரணங்கள் கூறி மழுப்பிவிடுகின்றார்கள்.

இந்த நிலை மற்றும் கணிசமானவர்களின் கதவுகளை வெகுவிரைவில் தட்ட காத்திருக்கின்றது. அரச கொடுப்பனவுகள் வகுகின்ற யூன் மாதமோ அல்லது சற்று நீடிக்கப்பட்டாலும் அரச பானையில் பாயாசம், சமையல் கட்டில் அறுசுவை உணவு வற்றிவிடப்போகிறது. இதனைவிட அரசு வழங்கிய கடன் சுமார் அறுபதினாயிரத்தை அடுத்த ஆண்டு டிசம்பர் 31ம் திகதிக்குள் எண்பது வீதமளவில் கட்டியாக வேண்டும். அதற்குள் கட்டி கடனை அடைக்கத்தவறினால் கனேடிய வருமான வரி இலாகா வட்டியும். குட்டியுமாக அறவிடகூடிய சாத்தியகூறுகள் உண்டு. முடியமானால் உங்கள் சொத்துகளில். வீடுகளின் மேல்கூட அந்த கடனை ஏற்றியும் விடலாம்.

இந்நிலையில் உங்கள் துக்கத்தை துடைப்பேன். குறட்டை விட்டோ அல்லது விடாமலே நன்றாக தூங்க வழிவகைகள் உண்டு. கடன் பளுவால் மனைவி, பிள்ளைகள் மீது எரிந்து விழும் நிலையை மாற்ற அன்பாக, பண்பாக பக்குவமாக பாசத்துடன் வாழ நான் வழிசமைத்து தருவேன். உங்களுக்கு கனடிய சட்டதிட்டங்களுக்கு அமைய பயமின்றி கடன் சுமையை மலைபோல் களைந்து தரமுடியும். இந்த சேவைபற்றி பயப்படதெவையில்லை. பின்விளைவுகளும் பாரதூரமானவையல்ல.

எப்படியானவர்கள் என்னை அணுகமுடியும்? உதாரணமாக கடன் எடுத்து கல்லூரிகள், பல்கலைக்கழகங்களில் கற்று பின்னர் தகுந்தவேலை பெற்று போதிய வருமானம் பெறமுடியாதவர்கள் அந்த கடனை ஏழு வருடங்களுக்குள் அடைக்கமுடியாது போனால். நீங்கள் வங்குரோத் பதிவு செய்து பல பின் விளைவுகளை சந்திக்கத் தேவையில்லை. கனேடிய அரசிற்கு வருமானவரி இலாகாவை பொறுத்தமட்டில் வருடவட்டியல்ல. மாதவட்டியல்ல தினமும் வட்டியை பதிவு செய்கிறார்கள். இந்த வருமானவரி கட்டவேண்டிய தொகை பன்றி குட்டி போடுவதபோல ஏற்றி கொண்டே போகின்றது. ஆனால் நீங்களும் இலகுவில் பெருமளவு கடனை அடைக்க முடியும்.

கடன் அட்டைகள் எம்மில் பலரிடம் காணப்படுகிறது. நாம் பொதுவாக காசு கொடுத்து பொருட்கள் வாங்குவதாயின் பல தடைவைகள் யோசிப்போம். கிரடிட்காட்டுடன் கொள்வனவு செய்வதாயின் “ஊரா வீட்டு நெய்யே பெண்டாட்டி கையே” என தாராளமாக வாங்குகின்றோம். சிலவேளை வேலைப்பளு காரணமாக மாதாந்தம் செலுத்த வேண்டிய தொகையை தாமதமாக செலுத்த வேண்டிய கால அவகாசத்துக்குள் செலுத்தாவிட்டால், 19.9 வீத வட்டி வீதத்தை 29.9 வீதம் வரைக்கும் கூட உயர்த்தி விடலாம். அவ்வாறு கஸ்டப்படும் நீங்கள் அட்டமத்தி சனியின் பார்வையிலிருந்து வெள்ளி திசையின் பார்வைக்கு வந்த மாதிரி மகிழ்வாக இருக்கலாம்.



Suren Sornalingam BBA
Tel: (647) 274-2832

மற்றும் கார் கடன் கட்டணத்தை கட்டிக்கொள்ள முடியவில்லை மற்றும் பல கடைகளில் பொருட்கள் கடனுக்கு வாங்கி பின்னர் உரிய காலத்தில் செலுத்த முடியவில்லை. கவலையை விடுங்கள். கடனை கைவிடுங்கள். கடனை கரைத்துவிடும் மாத்திரை ஒன்று இருக்கின்றது. இது சத்திரசிகிச்சை செய்யாமல் நோயை குணப்படுத்தும் மூலிகை. இதனை பாவிப்பதால் வயிற்று கோளாறு அல்லது சுவாசப்பிரச்சனை எதுவும் வராது நோயை குணப்படுத்தும் மருந்து தான் இது.

அதுதான் கொன்சுயுமர் புறப்போசல் என்னும் விடயம் (Consumer Proposal). இதன்படி நீங்கள் பதிவு செய்தால், உங்கள் கடன்பளுவிலிருந்து சுமார் 80 வீதமளவில் கட்டாமல் தப்பிக்கொள்ளலாம். உதாரணமாக உங்களிடம் ஒட்டுமொத்த பலவிதமான கடன்கள். வங்கி கடன், கிரடிட்காட் கடன், கடைகளில் பெறப்பட்ட பொருள்களுக்கு செலுத்த வேண்டியகடன், கல்விக்கான மாணவர் கடன். வாகனம் வாங்கிய கடன் என இவற்றில் ஒன்று அல்லது அதில் சில அல்லது பலவாக இருக்கலாம். அவையனைத்தையும் சேர்த்து பதிவாக்கலாம். உங்கள் கடன் சுமார் ஒரு லட்சம் டொலரென வைத்து கொள்வோம். அதில் நீங்கள் எண்பதாயிரத்தை கட்ட தேவையில்லை. சுமார் இருபதாயிரத்தை மட்டமே செலுத்த வேண்டும். அதனையும் கூட உடனடியாக, ஒரேயடியாக கட்டதேவையில்லை. அதனை மாதாமாதம். கிழமைக்கு கிழமை ஐந்து வருடங்களுக்குள் செலுத்தினால் போதும். அதுவும் வட்டியின்றி.

இவ்வாறாக செலுத்த வேண்டிய தொகையை செலுத்தும்போது உங்களுக்கு கிரடிட் காட் கம்பனிகள், வங்கி நிறுவனங்கள் மற்றும் கடன் தந்த நிறுவனங்கள் கடிதம் போட்டோ அல்லது தொலைபேசியில் அழைத்தோ கரைச்சல் தருவது நிறுத்தப்பட்டுவிடும். நிம்மதியாக நீங்களும் தொலைபேசி அழைக்கும்பொழுது பதிலளிக்கலாம். கடன்காரன் அறம் புறமாக பேசி அலுப்பு தருவதும் நிறுத்தப்பட்டுவிடும். சட்டநடவடிக்கைகளும் நிறுத்தப்படும்.

இவ்வாறு கொன்சியுமர் புறப்போசல் பதிவு செய்வதினால் சில பின் விளைவுகளும் வரத்தான் செய்யும். அதனை வங்குரோத் பதிவு செய்வதுடன் ஒப்பிடும்போது வங்குரோத்து ஓர் பாரிய அறுவைசிகிச்சை. இங்கு எதுவும் செய்யாமல் கொன்சியுமர் புறப்போசல் என்பது மெல்லிய மாத்திரை விழுங்கிய மாதிரியாகும். இவ்வாறு பதிவான பின்னர் சிறிய காலம் கடன் அட்டைகள் பெறுவது போன்றவற்றை தள்ளிப்போட வேண்டிவரும். அடுத்து முக்கியமாக குடிவரவு விடயத்தில் உறவினரை ஸ்கான்சர் செய்வதில் எந்தவிதமான பாரதூரமான தடங்கல் எதுவும் ஏற்படபோவதாக தெரிவதில்லை. இந்த செயல்பாட்டின் சிறிது காலத்தின் அரச கொடுப்பனவுகள் தொடாந்து கிட்டக் கூடிய வாய்ப்புகள் உண்டு. உங்கள் கிரடிட் ரேற்றிங் சிறிதளவு இறங்கும். அவ்வளவுதான்.

இவ்வாறான கொன்சியுமர் புறப்போசல் செய்து பெருமளவு கடனை. இலகுவாகவும், வேகமாகவும், நேர்த்தியாகவும் அடைந்து வெற்றிகண்டு கொள்ள இத்துறையில் நீண்டகால அனுபவம்மிக்க, இன்றைய அரச சட்ட திட்டம் தொடர்பான மாற்றங்களை நன்கு அறிந்த, சமூகநலனும் அக்கறையும் கொண்ட ஒருவரை அணுகிக்ககொள்வது புத்திசாலித்தனமானது.

எனவே, நீங்கள் சுரேன் சொர்ணலிங்கம் ஆகிய என்னை அணுகுங்கள். முதலில் இதுபற்றி அலோசனை வேண்டுமென்றால் இலவச ஆலோசனை தொலைபேசி, மின்னஞ்சல். சமூகவலையம் அல்லது நேரடியாக சந்தித்து பெற்றுக்கொள்ளுங்கள். நாளைய வாழ்வு கரடுமுரடாக இருக்கக்கூடாது. இன்றைய வாழ்வைவிட இனிதாக இருக்க வேண்டும் என்பதே எனது சேவையின் அடித்தளமாகும்.




கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

Reduce your debts upto 80%

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தெலைமேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
°roted all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒயே கட்டுப்பணத்தில் எல்லாக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions with out Bankruptcy

crc
CREDIT RECOVERY CANADA

55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON. M1P 4X4



Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com

# WWW.THAGAVALKAL.COM

## கோவிட் தொடர்பான மற்றும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் தகவல்கள் இணையத்தளத்தில் உள்ளன

- வருமான ஆதரவு
- இளைஞர்கள், பெண்கள் மற்றும் மூத்தவர்களுக்கான சேவைகள்
- உணவு ஆதரவு
- குடிவரவு
- தங்குமிட ஆதரவு
- கல்வித்தகவல்கள்
- வேலைவாய்ப்பு சேவைகள்
- சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு சேவைகள்

THAGAVALKAL
தகவல்கள்
**416-221-2058**



TAMIL Canadian Centre for CIVIC ACTION

Funded by the Government of Canada | Financé par le gouvernement du Canada | Canada

United Way Greater Toronto

## உங்களுக்கு கோவிட் தொற்று உள்ளதா அல்லது தற்போது தனிமைப்படுத்தலில் இருக்கின்றீர்களா?

- சிறந்த நடைமுறைகளும், உங்கள் குடும்பத்தை எவ்வாறு பாதுகாக்க முடியும் என்பது பற்றிய கல்விமுறை வழங்கபடும்.
- உங்களை பாதுகாப்பான மற்றும் நியமிக்கப்பட்ட தனி மையத்துடன் இனணத்து விடுவோம்.
- உங்கள் வீட்டிற்கு தேவையான மளிகை பொருட்களும் சமைத்த உணவுப்பண்டமும் வழங்கப்டும்.
- நிதி உதவி.
- மருத்துவ முகமூடிகள், கை சுத்திகரிப்பான் (திரவங்கள்) வழங்கபடும்.
- மனநல ஆலோசனை சேவைகள்
- சோதனை மையங்களுக்கு போக்குவரத்து வாகன உதவி வழங்கப்படும்.

PCHS பல்வேறு மொழிமக்களுக்கு சேவை செய்ய உறுதிபூண்டுள்ளது
PCHS வழங்கும் உதவிகள் அனைத்தும் கட்டணம் இன்றி இலவசமாக வழங்கப்படும்

**எங்களை தொடர்பு கொள்ள**

தொலைபேசி எண்:
416-579-5942, 416-605-6134
மின்னஞ்சல்:
support@pchs.vom
திங்கள் முதல் வெள்ளி வரை: 9am to 6pm
சனியும் ஞாயிறும்: 10am to 6pm

pchs Serving Diverse Communities

www.pchs4u.com @PCHS @PCHS4U @PCHS4U

- மொன்ரியால் வீணைமைந்தன் எழுதுகின்றார்



# #38 சிவாஜி கணேசனும் தமிழ்ச் சினிமாவும்

வாழ்தல் வேண்டி கனடிய நாட்டுக்குள் குடிபெயர்ந்த நான் 1987 இலிருந்து மொன்றியல் நகரிலேயே வாழ்ந்து வருகிறேன். எந்த நாட்டுக்குப் போனாலும் சிவாஜி ஐயா பற்றிய நினைவுகளும் எனது நெஞ்சத்தில் பொக்கி'மாக பாதுகாக்கப்படுகின்றன!

1989 - 90 களில் மொன்றியல் நகருக்கு தென்னிந்திய திரைப்படக் கலைஞர்களையும், அரசியல் தலைவர்களையும், ஆன்மீக பெரியோர்களையும் அவ்வப்போது சில அமைப்புகள் அழைப்பதுண்டு.

ஒருசமயம் நிழல்கள் ரவி, வெண்ணிற ஆடை மூர்த்தி, நடிகர் ராஜேஷ், காந்திமதி, பல்லவி, திருமதி மணிமாலா மூர்த்தி ஆகியோர் கலை நிகழ்ச்சிக்காக அழைக்கப்பட்டிருந்தனர். பொதுவாக இங்கு நடக்கும் கலை - இலக்கிய நிகழ்ச்சிகளில் வரவேற்புரையை அல்லது சிறப்புரையாற்ற அமைப்பாளர்கள் என்னை அழைப்பதுண்டு!

ஒரு படப்பிடிப்பின் இடைவேளையின் போது நடிகர் வெண்ணிற ஆடை மூர்த்திக்கும் நடிகர் திலகம் ஐயாவுக்கும் நடந்த உரையாடலை நினைவுபடுத்தி திரு. மூர்த்தி அவர்களின் கல்வியறிவு பற்றிக் குறிப்பிட்டேன். சிவாஜி ஐயா கற்றோரிடத்து மதிப்பும் - மரியாதையும் கொண்டு பழகுவார். மூர்த்தி அவர்கள் சிறந்த படிப்பாளி அத்துடன் ஜோதிடக் கலையிலும் தேர்ச்சி பெற்றவர். மூர்த்தியுடன் சம்பாீத்துக் கொண்டிருக்கும் போது அவரிடமிருந்த பரந்த கல்வி அறிவையும், கேள்வி ஞானத்தையும் கேட்டு ரசித்துக் கொண்டிருந்த சிவாஜி அவர்கள், ”மூர்த்தி உன்னுடைய படிப்பு எல்லாவற்றையும் எனக்குத்தா! நான் பதிலுக்கு என் நடிப்பு அனுபவங்களை உனக்குத் தருகிறேன்!”, என்றதும் மூர்த்தி மிகவும் பரவசப்பட்டு போனார். இச்சம்பவத்தை நினைவுபடுத்தி பேசிக்கொண்டிருக்கும் போது மேடையில் நின்ற நடிகர் மூர்த்தி அவர்கள், அருகில் வந்து என்னை அணைத்துக் கொண்டார்.



”எப்படி சார், இந்த மாதிரி செய்தியெல்லாம் உங்களுக்கு தெரியும்” என ஆச்சரியப்பட்டு தனது பதிலுரையில் வழிமொழிந்தார்!.

இனி, 1986ல் சிவாஜி அவர்களுக்கு நடந்த பாராட்டு விழா ஒன்றில் “குருசாமி“ நம்பியார் ஆற்றிய உரையிலிருந்து சில நினைவுகளை பகிர்ந்து கொள்வோம்... நடிகர்திலகம் அவர்கள் வாழ்ந்த காலத்தில் நடைபெற்ற சம்பவங்கள் - நிகழ்ச்சிகளினூடாக எனது தகவல்களை பதிவு செய்கிறேன்.

தமிழ் திரையுலகில் உயிருடன் வாழ்ந்த மூத்த கலைஞர்கள் அனைவரினதும் பாராட்டுதலுக்கும், போற்றுதலுக்குமான ஒரு கலைஞரின் சிவாஜி ஐயா பற்றிய நினைவுகளைப் பதிவு செய்கிறேன். பல ஆண்டுகளுக்கு முன் வெளியான “பூப்பறிக்க வாருங்கள்“ படத்தில் கூட சிவாஜி அவர்களின் சகோதரனாக நடித்திருந்தார். திரையுலகில் 4 தலைமுறை நடிகர்களுடன் நடித்த “குருசாமி“ என்று பக்தியுடன் ஐயப்ப பக்தர்களால் போற்றப்படும் அந்த நல்லவரை அநேகம்பேர் வில்லனாகவே பார்த்திருப்பீர்கள். அவர்தான் வணக்கத்திற்குரிய எம் என் நம்பியார் அவர்கள். எந்தவித தீய பழக்கங்களும் இல்லாத சிறந்த புருஷர் ஒருவர் சுமார் 50 ஆண்டுகளாக திரையுலகில் வாழ்ந்து வந்தார் என்றால் ஆச்சரியமாகத்தான் இருக்கும். எந்தவிதமான சர்ச்சைகளுக்கும் ஆளாகாத அந்த உயர்ந்த பண்பாளர் நடிகர் திலகம் பற்றி அவரது 51வது ஆண்டு கலைச் சேவையைப் பாராட்டும் முகமாக கூறிய சில நினைவுகள் 1986 இல் இங்கே மீண்டும் நினைவு படுத்துவது இத்தொடருக்கு வலிமை சேர்க்கும் என நம்புகிறேன். ”எனது இனிய நண்பர் சிவாஜி கணேசன் அவர்களது 51வது ஆண்டு கலைச் சேவையைப் பாராட்டுபவர்களில் நானும் ஒருவன் என்பதில் பெருமை கொள்கிறேன். அவர் ஒரு பிறவி நடிகர். பிறவி நடிகன் என்று யாரும் இருக்க முடியாது என இயக்குனர் நண்பர் ஒருவர் கூறியிருந்தார். அவருடைய கருத்தை என்னால் ஒத்துக்கொள்ள முடியாது. பிறந்தவுடனேயே புத்திசாலி குழந்தைகளை புரிந்து கொள்கிறோம். விளையும் பயிரை முளையில் தெரியும் என முன்னோர்கள் சொல்லி இருக்கிறார்கள். நடிப்பதற்காகவே பிறந்தவர் நடிகர் திலகம். அகில உலக நடிகர்களிலேயே “திலகம்“ என்ற பொருத்தமான பட்டத்தை பேசும்படம் வாசகர் ஒருவர் வழங்கினார் என்று கருதுகிறேன். அவருக்கு வழங்கப்பட்ட “பத்மஸ்ரீ“ “பத்மபூஷன்“ விருதுகளைவிட “நடிகர் திலகம்“ என்ற பட்டத்தை வழங்கியவர் வாழ்க!

நடிகர் திலகத்தின் நடிப்பை ஒரு சிலர் “ஓவர் நடிப்பு“ என்று சொல்வார்கள். அதில் ஓரளவு உண்மை இருக்கிறது. ஆனால் அந்த நடிப்பை அவர் தெரிந்தே தான் செய்கிறார். வசனங்களைப் பேசாமல் நடிப்பின் மூலமே தான் நினைப்பதை வெளிப்படுத்தக்கூடிய நடிகர் அவர் ஒருவர் தான். உதாரணமாக... நமது முன்னோர்களாலும் அறிஞர்களாலும் நூற்றுக்கணக்கான வருஷங்களாக நமக்கு சொன்ன கருத்தை தான் மறைந்த கவியரசு கண்ணதாசன் நமக்கு வழங்கினார். ஆனால், கவிஞர் சொன்னது எளிமையாகவும் சுலபமாக நம்மால் புரிந்து கொள்ளும் வகையிலும் இருந்ததால், நம்மால் அவரை மறக்க முடியவில்லை!

நமது நடிகர் திலகத்தின் அணுகுமுறையும் அதே போன்றதுதான். ஒரு அசைவால் - பார்வையால் எவ்வளவோ விஷயங்களை நமக்கு உணர்த்தி விடுவார். அவருடைய நடிப்புக்கு 51 வருடம் என்பது (1986இல் நம்பியார் கூறியது) மிக மிகச் சாதாரணமானது. இன்னும் பல ஐம்பத்தியொரு வருட காலம் அவர் நடிக்க வேண்டும் என்று விரும்புபவன் நான்! ஆசைக்கு அளவில்லை அல்லவா! நடிப்பு களஞ்சியமான அவர்..” நடிப்பை இன்னும் கற்றுக் கொள்கிறேன்”.., என்று கூறுகிறார் என்றால் வியப்பாக இல்லை!



நல்லது எதுவானாலும் ஏற்றுக் கொள்ளும் நல்ல உள்ளம் படைத்தவர் அவர். நடிப்பிற்கு எல்லை இல்லை என்பது அவரது கருத்து. அவருடன் நான் நடித்த் படங்களை நினைவு கூர்ந்து பார்க்கிறேன். “பாகப்பிரிவினை“யில் தம்பியாக, “பாதுகாப்பு“ல் அண்ணனாக, “நான் பெற்ற செல்வம்“ “பாசமலர்“ “மக்களைப் பெற்ற மகராசி“யில் மைத்துனராக “உத்தம புத்திரன்“இல் மாமாவாக சில படங்களில் தோழனாக, பல படங்களில் எப்போதும் போல் எதிரியாக என்று அவருடன் நடித்த நாட்கள் நினைத்தாலே இனிக்கும் நல்ல நாட்கள். கடந்த 34 ஆண்டுகளாக (1986) வரை தொடர்ந்தாற் போல் படப்பிடிப்பிற்கு குறிப்பிட்ட நேரத்திற்கு வரும் ஒரே நடிகர் நடிகர் திலகம் தான். அவரது இந்த பழக்கத்தை மற்ற நடிகர்கள் பின்பற்றினால் தயாரிப்பாளர்களுக்கு பல லட்சங்கள் வீணாகாது. அவருக்கு வயதாகிவிட்டது, எனக்கும் தான்! ஆனால் நடிப்புக்கு ஏது வயது... வரம்பு! நடிகர் திலகத்தின் நடிப்பு இளமை குன்றாதது. நடிப்பில் அகில உலகப் புகழைப் பெற்றிருக்கும் என் நண்பர் நடிகர் திலகம் வாழ்க! குருசாமி நம்பியார் அன்று கூறியது போல் சிவாஜி அவர்கள் புகழ் என்றென்றும் பேசப்படும்!

புகழ் எனும் “கீர்த்தி“க்கும், நடிகர் திலகம் அவர்களுடைய கடின உழைப்பிற்கும் - விடா முயற்சிக்கும் நெருங்கிய தொடர்புண்டு. நடிப்புத் தொழிலை எவ்வளவுக்கு எவ்வளவு விரும்பியும், மரியாதை செய்தும் வந்தாரோ, அவ்வளவிற்கு அவ்வளவு அவரை புகழ் எனும் தேவதை அவரை அணைத்து மகிழ்ந்தாள்.

”தோன்றில் புகழோடு தோன்றுவேன்”, என அவர் நாடக மேடைகளிலும், திரைப்படங்களிலும் ஏற்றுக்கொண்ட பாத்திரங்கள் என்றென்றும் வாழும் சாட்சிகளாக விளங்குகின்றன. சிவாஜி ஐயாவுக்கு வழங்கப்பட்ட பாராட்டுக்கள், விருதுகள், கௌரவங்கள் சிலவற்றை எடுத்துச் சொல்லி அவருக்கு கிடைத்த மகிழ்வை, மனச்சாந்தியை உங்களுடன் இணைந்து நானும் மகிழ விரும்புகிறேன்.

“கல்கியின் கௌரவம்“ பழம்பெரும் பத்திரிகையான கல்கி - பல்வேறு பெருமைகளை கொண்ட வார இதழ். மூதறிஞர் ராஜாஜி, ரா.கிருஷ்ணமூர்த்தி மற்றும் பிரபல நாவலாசிரியர்கள், தமிழறிஞர்களின் எழுத்துக்களின் முத்து கோர்வையால் கீர்த்தி பெற்ற பத்திரிகையாகும். இந்த பத்திரிக்கையின் அட்டைப் படத்தில் ஒரு நடிகரது படம் இடம் பெற வேண்டுமானால் அதற்கு ஒரு நியதியை வகுத்திருந்தார்கள். பிரபல கர்நாடக இசைப் பாடகி திருமதி எம். எஸ். சுப்புலட்சுமி நடித்த “மீரா“ படம் தயாராகிக் கொண்டிருந்த போதும், வெளிவந்த பின்னும் “மீரா“ பட நாயகி எம்.எஸ் சுப்புலட்சுமி அம்மாவின் படத்தை “கல்கி“யின் முன் அட்டையில் பிரசுரம் செய்து கௌரவப்படுத்தியிருந்தார்கள். அதன்பின் பல ஆண்டுகளுக்குப் பின்னர் அட்டைப்படத்தில் இடம்பெற்ற சிறப்பை பெற்ற படம் திருவருட்செல்வர். இப் படத்தில் சிவாஜி அவர்கள் அப்பர் சுவாமிகளாக நடித்த காட்சியை அட்டைப்படத்தில் பிரசுரம் செய்து திருவருட்செல்வர் பெருமை சேர்த்தது, நடிகர் திலகத்திற்கும் கௌரவம் அளித்தது.



எனக்குத் தெரிந்த வகையில் “கல்கி“ வழங்கிய அட்டைப்படக் கௌரவம் கடைசியாக கே எஸ் கோபாலகிருஷ்ணனின் “என்னதான் முடிவு?“ படத்தில் முக்கிய பாத்திரம் ஏற்று நடித்த டி எஸ் பாலையா அவர்களுக்கே ஆகும்!

அடுத்து., ஒரு படத்திற்கு சிறப்பு மலர், கதை வசனம், வெளியிடும் சாதனைக்குப் பாதை பச்சைக் கொடிகாட்டியதும் நடிகர் திலகம் சிவாஜிகனேசனின் படங்கள் தான்.

சிவாஜி ஐயாவின் முதல் படமான “பராசக்தி“ திரையிடப்பட்டு வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கும் போதே அவ்வப்போது வெளிவந்த “போர்வாள்“ “திராவிடன்“ போன்ற திமு கழக பத்திரிகைகள் சிறப்பு மலர்களை வெளியிட்டன. இதனைத் தொடர்ந்து “மனோகரா“ “ராஜாராணி“ “இல்லற ஜோதி“ திரும்பிப்பார் மற்றும் பல படங்களில் கதை, வசன புத்தகங்கள் வெளியாகின. “பராசக்தி“ “மனோகரா“விற்கும் ஈடாக அதிக அளவில் விற்பனையான புத்தகம் வீரபாண்டிய கட்டபொம்மன் ஆகும்.

“சிவாஜி“ ஐயாவின் “வியட்னாம் வீடு“ வெளிவந்த பிறகு மீண்டும் சிவாஜி கணேசனின் வெற்றிப் படங்களுக்கு சினிமா பத்திரிகைகள் சிறப்பு மலர்களை வெளியிட்டன. எனவே சிறப்பு மலர், வசன புத்தகங்கள் சாதனைகளிலும் சிவாஜி ஐயாவிற்கே முதலிடம்.

(பம்பாயில்) மும்பையில் நடைபெற்ற நாடக விழா ஒன்றுக்கு நடிகர்திலகம் வந்திருந்தார். அவ்விழா நடைபெற்ற கலையரங்கில் அவரைக் காண ஆர்வத்தோடு காத்திருந்த மாபெரும் ரசிகர்களின் எழுச்சியை எழுத்தாகிப் புகழ்கிறது “ஸ்கிரீன்“ ஆங்கில சினிமா வார இதழ் (மார்ச் 1972)

"The first thing that caught my eyes when I reached the venue was the crowd. Believe me I have not seen such a crowd even for a Hindi play at any time in Bombay> where the number of people who knows and understand Hindi favour number those who don't " --SCREEN

மேலும் விருதுகளும் காட்சிகளும் நினைவுகளும் தொடரும் - வீணை மைந்தன்.

# சிங்கப்பூர் தேசிய நூலக வாரியத்தின் வாசிப்பு விழாவில் கபிலன் வைரமுத்து நூல்கள் தேர்வு



சிங்கப்பூர் தேசிய வாசிப்பு இயக்கத்தின் முக்கியமான நிகழ்வான வாசிப்பு விழாவில் கபிலன் வைரமுத்து எழுதிய மெய்நிகரி மற்றும் அம்பறாத்தூணி, சோ தர்மன் எழுதிய சூல் ஆகிய நூல்கள் இடம் பெறுகின்றன. இது குறித்து வெளியாகியிருக்கும் பிரத்தியேக செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது. நான்கு அதிகாரத்துவ மொழிகளில் சிங்கப்பூர் வாசகர்களின் வாசிப்பை ஊக்குவிக்க சிங்கப்பூர் தேசிய நூலக வாரியம் ஆண்டுதோறும் ஏற்பாடு செய்யும் சிறப்பு நிகழ்வுதான் சிங்கப்பூர் வாசிப்பு விழா. உரைகள், பட்டறைகள் போன்ற வழக்கமான நிகழ்ச்சிகளுக்கு அப்பால் எளிமையான முறையிலும் புதுமையான வழிகளிலும் வாசிப்பை அறிமுகம் செய்ய முனைகிறது வாசிப்பு விழா. கலைச் சிற்பங்கள், விளையாட்டுகள், புதுமையான இலக்கியத் தடங்கள் போன்றவை அதில் அடங்கும். தேசிய வாசிப்பு இயக்கத்தின் மிக முக்கியமான நிகழ்வு வாசிப்பு விழா. இளம் எழுத்தாளர் கபிலன் வைரமுத்துவின் மெய்நிகரி என்ற நாவலும் அம்பறாத்தூணி என்ற சிறுகதைத் தொகுப்பும் (இரண்டாவது), சாகித்ய அகாதமி விருது பெற்ற எழுத்தாளர், சோ தர்மனின் சூல் என்ற நாவலும் வாசிப்பு விழாவின் சிறப்பு அம்சங்களாக இடம் பெறுகின்றன. நூல்கள் மூலமும் அவற்றைச் சுற்றிய உரையாடல்கள் மூலமும் கற்றலை ஊக்குவிப்பதற்கு பொருத்தமான நூல்களாக இவை அமைந்துள்ளன. என்று அந்த செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. தொலைக்காட்சி ஊடகத்தின் பணியாற்றும் ஐந்து இளைஞர்களின் அனுபவங்கள் வழி நிகழ்கால காட்சி ஊடகத்தின் பின்னணியை விவரிக்கும் மெய்நிகரி கபிலன்வைரமுத்துவின் மூன்றாவது நாவல். இது 2014 ஆம் ஆண்டு வெளிவந்தது. பதினைந்து சிறுகதைகளைக் கொண்ட அம்பறாத்தூணி கபிலன்வைரமுத்துவின் இரண்டாவது சிறுகதைத்தொகுப்பு. இது கடந்த 2020 ஆம் ஆண்டு வெளியானது. வெளிவந்த முதல் மாதத்திலேயே ஆயிரம் பிரதிகள் விற்று சாதனை படைத்தது. 1806 ஆம் ஆண்டு நிகழ்ந்த வேலூர் புரட்சி, 1750களில் இயங்கிய பூலித்தேவன் ராணுவ முகாம், 1890-களில் ரஷ்யாவை விட்டு வெளியேறிய டுகோபர்ஸ், முப்பத்தோராம் நூற்றாண்டில் பயணிக்கும் ஒரு பெண், திரையுலகின் பின்னணி குரல் கலைஞர்கள் என பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு களங்களை மையமாகக் கொண்டு கபிலன்வைரமுத்து இந்தச் சிறுகதைகளை எழுதியிருக்கிறார். 2019 ஆம் ஆண்டிற்கான சாகித்ய அகாதெமி விருதை வென்ற நூல் எழுத்தாளர் சோ தர்மனின் சூல் என்ற நாவல். 1947-ல் சுதந்திரம் கிடைத்தபோது, தமிழகத்தில் 39,640 கண்மாய்கள் இருந்தன. அந்த கண்மாய்களின் இன்றைய நிலை என்ன என்பதே “சூல்” நாவலின் மையக்கரு. சூல் என்றால் நிறைசூலி. உயிரை உற்பத்தி செய்பவள். பிரசவிக்கும் தாயாக அந்த நாவலை உருவகப்படுத்தியுள்ளார் சோ தர்மன். நூலக வாரியத்தின் வாசிப்பு விழாவில் எழுத்தாளர்கள் இருவரும் கௌரவிக்கப்படவிருக்கிறார்கள்.

# நீதியின் சக்கரங்கள் மெதுவாகச் சுழல்கின்றன ஆனால் மிக நன்றாக அரைக்கின்றன!

கனடா நக்கீரன்

விழுந்தும் மீசையில் மண்படவில்லை என்று சொன்னவன் கதையாக "ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் (ஐநாமஉ) பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்குப் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றுக் கொள்வதற்கு மேற்குலக நாடுகளினால் முடியாமல் போயுள்ளது" என ஸ்ரீலங்காவின் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன திருவாய் மலர்ந்துள்ளார். அதாவது ஸ்ரீலங்கா தொடர்பில் ஐநாமஉ பேரவையில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்துக்கு பெரும்பான்மை வாக்குகள் கிடைக்வில்லை என்கிறார்.

"இலங்கை இந்தத் தீர்மானத்தை தேவையற்றது என்று கருதுகிறது. இலங்கைக்கு எதிரான இந்த தீர்மானம் சட்டவிரோதமானது அதனை இலங்கை நிராகரிக்கிறது" என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கை ஒரு இறையாண்மை கொண்ட நாடு என்றும் அந்த இறையாண்மையை பாதுகாக்கப் படும் என்றும் குணவர்தன கூறினார். இலங்கையில் தேர்தல்கள் தொடர்பாக ஐநாமஉ பேரவை எழுப்பியுள்ள கவலைகளையும் அமைச்சர் நிராகரித்தார். இலங்கையில் பொறுப்புக்கூறல் சிக்கல் உள்நாட்டுப் பொறிமுறையின் மூலம் அரசாங்கம் தீர்க்கும் என அவர் மேலும் தெரிவித்தார்.

ஐநாமஉ பேரவையில் ஸ்ரீலங்காவுக்கு எதிரான பிரேரணை நிறைவேற்றப்பட்டதன் பின்னர் வெளிவிவகார அமைச்சில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அமைச்சர் தினே' குணவர்த்தன இந்த வாதத்தை முன்வைத்தார்.



அவர் என்ன சொல்ல வருகிறார் என்றால் மொத்தம் 47 நாடுகளைக் கொண்ட ஐநாமஉ பேரவையில் 22 நாடுகளே ஐக்கிய இராச்சியம் மற்றும் அதன் நேசநாடுகள் கொண்டுவந்த தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர். அதாவது தீர்மானத்துக்கு ஆதரவாக 22 வாக்குகளும் எதிராக 11 வாக்குகளும் செலுத்தப்பட்டிருப்பதுடன் 14 நாடுகள் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை. மொத்தம் 47 உறுப்புநாடுகளில் பிரேரணைக்கு ஆதரவாக 22 நாடுகளும் எதிர்த்து 25 நாடுகளும் வாக்களித்துள்ளன!

இப்படியான சொத்தை வாதங்களை முன்னர் வெளியுறவு அமைச்சராக இருந்த ஜிஎல் பீரிஸ் அவர்களும் ஒரு காலத்தில் முன்வைத்திருந்தார்.

ஐநாமஉ பேரவையில் ஒரு தீர்மானம் செல்லுபடியாக வேண்டும் என்றால் அது அறுதிப் பெரும்பான்மை வாக்குகளால் (24) நிறைவேற்றப்பட வேண்டும் என்ற விதியில்லை. அல்லது மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளால் (32) நிறைவேற்றப்பட வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. சாதாரண பெரும்பான்மையே போதுமானது.

வாக்கெடுப்புக்கு முன்னர் ஐநாமஉ பேரவையில் ஸ்ரீலங்காவுக்கு எதிராகக் கொண்டு வரப்படும் தீர்மானத்தைத் தோற்கடிக்கப் பெரும்பான்மை நாடுகளது ஆதரவு இருப்பதாக அரச தரப்பில் வெளியுறவு அமைச்சர் தினேஷ் குணவர்த்தன உட்பட பலர் வீறாப்போடு பேசியிருந்தார்கள்.

இஸ்லாமிய நாடுகளின் ஆதரவைப் பெற இராசபக்ச அரசாங்கம் மெத்தப் பாடுபட்டது. தொலைபேசி ஊடாக ஆட்சித் தலைவர் கோட்டாபய இராசபக்ச, பிரதமர் மகிந்தா இராசபக்ச மற்றும் அமைச்சர் பிரதானிகள் மெய் வருத்தம் பாராது, பசி நோக்காது,
கண் துஞ்சாது, செவ்வி அருமையும் பாராது அவர்தம் கருமமே கண்ணாயினார்.

மகிந்த இராசபக்ச பங்காளதேசத்துக்குப் பயணம் செய்து அந்த நாட்டின் ஆதரவை நேரடியாகக் கேட்டார். இஸ்லாமிய நாடுகளைத் திருப்தி செய்ய கொறோனா தொற்றுக் காரணமாக இறந்த முஸ்லிம்களின் சடலங்களை எரிப்பதற்குப் பதில் அடக்கம் செய்யலாம் எனப் படியிறங்கி வந்தார்கள். ஆனால் அந்த எத்தனங்கள் பலிக்கவில்லை.

அரசாங்கத்துக்குள் இருக்கும் அதிதீவிர சிங்கள - பவுத்த பேரினவாதிகள் இராபக்சாக்களின் முயற்சியை முறியடித்தார்கள். பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகரா ஆயிரத்துக்கும் அதிகமான முஸ்லிம் மதறாஸ் பள்ளிகளை தடைசெய்யப் போவதாக அறிவித்தார். அதோடு நிற்காமல் பொதுவெளியில் முஸ்லிம் பெண்கள் புர்கா அணிவது தடை செய்யப்படும் எனவும் அறிவித்தார்.

கொழும்புவில் செய்தியாளர்களிடம் பேசிய பொது பாதுகாப்புத்துறை அமைச்சர் சரத் வீரசேகரர் புர்கா அணிவது நாட்டின் பாதுகாப்புக்கு நேரடியாக அச்சுறுத்தலாக அமைந்துள்ளதாகக் கூறினார். மேலும் புர்கா அணிவது மதத் தீவிரவாதத்தின் அடையாளமாக உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். யாரும் தாங்களாகவே பள்ளிகளை தொடங்கி அவர்களின் விருப்பத்துக்கு தேவையானதை கற்பிக்க முடியாது, அரசின் கல்விக் கொள்கைகளுக்கு உட்பட்டே கல்வி பயில வேண்டும் எனவும் அவர் கருத்துத் தெரிவித்தார்.

இதற்குப் பாகிஸ்தான் நாடு இலங்கைக்கான தனது தூதுவர் சாவாட் கத்தாக் மார்ச் 15, 2021 அன்று எதிர்ப்பைத் தெரிவித்தது. "இந்தத் தடை "இலங்கையிலுள்ள சாதாரண இலங்கை முஸ்லிம்களை மட்டுமல்ல உலகளாவிய முஸ்லிம்களின் உணர்வுகளைக் காயப்படுத்தும்" என டுவீட் செய்தார்.

மதம் அல்லது நம்பிக்கையின் சுதந்திரம் பற்றிய ஐக்கிய நாடுகளின் சிறப்பு அறிக்கையாளர் அஹ்மத் ஷாஹீத் "ஒருவரின் மதம் அல்லது நம்பிக்கை மற்றும் கருத்துச் சுதந்திரத்தை வெளிப்படுத்தும் உரிமையின் உள்ளார்ந்த சட்ட உத்தரவாதங்களுடன் புர்கா தடை பொருந்தாது" என்று ட்வீட் செய்தார்.

இப்படி ஸ்ரீலங்கா அமைச்சர்கள் ஒருவருக்கு ஒருவர் முரணான செய்திகளைப் பொதுவெளியில் பரவ விட்டார்கள். இதனால் மொத்த இஸ்லாமிய நாடுகளின் ஆதரவு தமக்குக் கிடைக்கும் என்ற ஆசை நிராசையாகப் போய்விட்டது. உலகில் முஸ்லிம்கள் அதிகம் வாழும் இந்தோனேசியா (20 கோடி) வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாது நடுநிலமை வகித்ததை இங்கு குறிப்பிட வேண்டும்.

ஐநாமஉ பேரவையில் இந்தியா நடுநிலமை வகித்தது பலத்த எதிர்ப்பலைகளை எழுப்பியுள்ளன. ஈழத் தமிழர்களுக்கு இந்திய அரசு துரோகம் இழைத்துவிட்டதாக, மதிமுக பொதுச் செயலாளரும் மாநிலங்களவை உறுப்பினருமான வைகோ அறிக்கை வெளியிட்டுள்ளார்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் மு.க. ஸ்டாலின், வி.சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன், தமிழர் தேசிய முன்னணித் தலைவர் பழ, நெடுமாறன், காங்கிரஸ் கட்சி மாநில மக்களவை உறுப்பினர் ப. சிதம்பரம் .ஆகியோர் மத்திய பாரதிய ஜனதா அரசைக் கடுமையாகக் கண்டித்து அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

இதில் ப.சிதம்பரம் அவர்கள் கண்டன அறிக்கை விடுவது வியப்பாக இருக்கிறது. இவரும் இவரது கட்சியும் பதவியில் இருந்த காலத்தில்தான் இந்திய அரசும் இலங்கை அரசும் சேர்ந்து முள்ளிவாய்க்கால் படுகொலைகளை அரங்கேற்றின என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியா வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை என்பது உண்மைதான். ஆனால் இலங்கை அரசுக்கு ஒரு மறைமுக எச்சரிக்கையை விட இந்தியா பின்நிற்கவில்லை. வாக்கெடுப்புக்கு முன்னர் இந்தியாவின் நிரந்தர தூதுவராலய முதல் செயலாளர் பவன்குமார் பாதே **(Pawankumar Badhe)** ஒரு அறிக்கையை வெளியிட்டார். அதில் கூறப்பட்டுள்ளதாவது:



"இந்தியா அண்டை நாடு என்ற முறையில் 2009 க்குப் பிறகு இலங்கையில் நிவாரணம், மீள்குடியேற்றம், புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு பணிகளுக்குப் பங்களிப்புச் செய்துள்ளது.

ஒன்று, இலங்கைத் தமிழர்களுக்கு சமத்துவம், நீதி, சுயமரியாதை மற்றும் அமைதிக்கு எங்கள் ஆதரவு. மற்றது இலங்கையின் ஒற்றுமை, உறுதிப்பாடு மற்றும் ஆட்புல ஒருமைப்பாட்டை உறுதி செய்வதில் உறுதியாக உள்ளது.

இந்த இரண்டு குறிக்கோள்களும் ஒன்றுக்கொன்று ஆதரவளிப்பதாக நாங்கள் எப்போதும் நம்புகிறோம். ஒரே நேரத்தில் இரு குறிக்கோள்களையும் நிவர்த்தி செய்வதன் மூலம் இலங்கையின் முன்னேற்றம் உறுதி செய்யப்படுகிறது.

"நல்லிணக்கச் செயல்முறையை முன்னெடுத்துச் செல்லவும் தமிழ்ச் சமூகத்தின் வேட்கைகளை நிவர்த்தி செய்யவும் அதன் அனைத்து குடிமக்களின் அடிப்படை சுதந்திரங்களும் மனித உரிமைகளும் முழுமையாகப் பாதுகாக்கப்படுவதை உறுதிசெய்யவும் சர்வதேச சமூகத்துடன் தொடர்ந்து ஆக்கபூர்வமாக ஈடுபடவும் இலங்கை அரசு கேட்டுக்கொள்கிறோம்."

மாகாண சபைகளுக்கான தேர்தல்களை முன்கூட்டியே நடத்துவதன் மூலமும் அனைத்து மாகாண சபைகளும் திறம்பட செயல்பட முடியும் என்பதை உறுதிசெய்வது உட்பட, இலங்கை அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் படி. அரசியல் அதிகாரப் பகிர்வு குறித்த தனது உறுதிப்பாட்டை நிறைவேற்ற இலங்கை அரசாங்கத்திற்கான பன்னாட்டு சமூகத்தின் வேண்டுகோளை இந்தியா ஆதரிக்கிறது. 13 ஆவது திருத்தத்தை செயல்படுத்த இந்தியா இலங்கைக்கு அழுத்தம் கொடுத்து வருகிறது.

இந்தியாவின் இதே நிலைப்பாட்டை கடந்த பெப்ரவரி 26 அன்று ஐநாமஉ பேரவையில் பேசிய இந்தியத் தூதுவர் இந்திரா மணி பாண்டே அவர்கள் பேசியிருந்தது நினைவு கூரத்தக்கது. அவரது உரை சிறிலங்கா அரசுக்கு ஒரு மறைமுக எச்சரிக்கையாக அமைந்திருந்தது.

இந்தியாவின் நிலையான நிலைப்பாடு இரண்டு தூண்களில் உள்ளது:

**(i)** இலங்கையின் ஒற்றுமை மற்றும் ஆட்புல ஒருமைப்பாட்டிற்கான ஆதரவு.

**(ii)** சமத்துவம், நீதி, அமைதி மற்றும் கவுரவத்திற்கான இலங்கைத் தமிழர்களின் வேட்கைகளுக்கு உறுதியளித்தல்.

இவை இரண்டில் ஒன்று அல்லது தேர்வுகள் அல்ல. தமிழ்ச் சமூகத்தின் உரிமைகளை மதிப்பது, அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு மூலம் உட்பட, இலங்கையின் ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டிற்கும் நேரடியாக பங்களிக்கிறது என்று நாங்கள் நம்புகிறோம்.

எனவே, தமிழ் சமூகத்தின் நியாயமான வேட்கைகளை நிறைவேற்றுவது இலங்கையின் சிறந்த நலன்களுக்காக நல்லது என்று நாங்கள் வாதிடுகிறோம். நல்லிணக்க செயல்முறை மற்றும் இலங்கை அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமல்படுத்துவது உள்ளிட்ட இத்தகைய வேட்கைகளுக்குத் தீர்வு காணத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க இலங்கையை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். **(http://www.dailymirror.lk/breaking_news/India-calls-upon-Sri-Lanka-to-fully-implement-13A-to-address-aspirations-of-Tamil-community/108-**

ஐநாமஉ பேரவை நிறைவேற்றிய தீர்மானத்தை புலம் பெயர் தமிழ் அமைப்புக்கள் வரவேற்றிருக்கின்றன. மனித உரிமை காப்பகம், சர்வதேச மன்னிப்புச் சபை இரண்டும் தீர்மானத்தை வர வேற்றிருக்கின்றன.

இந்த தீர்மானத்தில் தமிழ்மக்களுக்கு சாதகமாக இருக்கும் அம்சங்கள் என்ன?

(1) ஐநாமஉ பேரவையின் ஆணையாளர் மிச்சேல் பச்சிலட் அவர்களுக்கு இலங்கையில் நடந்ததாகக் குற்றம் சாட்டப்படும் தகவல்களையும் ஆதாரங்களையும் சேகரிக்கவும், ஒருங்கிணைக்கவும், பகுப்பாய்வு செய்யவும், பாதுகாக்கவும் அதற்காக அ.டொ 2.8 மில்லியன் செலவில் 12 பல்துறைசார் நிபுணர்களை பணிக்கு அமர்த்த ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதுது.

(2) இலங்கையில் மனித உரிமைகள் மொத்த மீறல்கள் அல்லது சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் கடுமையான மீறல்களுக்கான எதிர்கால பொறுப்புக்கூறல் செயல்முறைகளுக்கான சாத்தியமான உத்திகளை உருவாக்கவும், பாதிக்கப்பட்டவர்களுக்கும் உயிர் பிழைத்தவர்களுக்கும் ஆதரவாக வாதாடவும் அனுமதிக்கிறது.

(3) இலங்கை அரசு மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் இடையே 26 ஆண்டுகள் நடைபெற்ற இந்த உள்நாட்டுப் போரில் 80 ஆயிரம் பேர் முதல் ஒரு லட்சம் பேர் வரை உயிரிழந்ததாக ஐக்கிய நாடுகள் சபை கருதுகிறது.

(4) இலங்கை அரசு "பொறுப்புக்கூற வைக்கப்படுவதற்குத் தடையாக" இருப்பதாகக் குற்றம்சாட்டி உள்ளது.

(5) போர்க்குற்றத்தில் ஈடுபட்டதாக ஐயப்படும் ஆட்கள் மீது வெளிநாடுகளிலும் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று கோருகிறது.

(6) இலங்கை அரசு, தமிழீழ விடுதலைப் புலிகள் ஆகிய இரு தரப்புமே உள்நாட்டுப் போர் நடந்த காலத்தில் கொடுமைகளில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்படுகிறது.

(7) நீதி மற்றும் பிற நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கிறது.

மனித உரிமை அமைப்புக்கள் போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி பெற்றுக் கொடுப்பதில் ஒரு முக்கியமான படியாகும் என்றும் தற்போதைய இலங்கை அரசாங்கத்திற்கு குறிப்பிடத்தக்க தாக்கங்களை ஏற்படுத்தக்கூடும் என்றும் கூறுகின்றன.

இந்தத் தீர்மானம் இலங்கை அரசாங்கத்திற்குப் "பாரிய அடியாகும்" என்பதில் ஐயமில்லை. நாட்டின் போர்க்கால பாதுகாப்புச் செயலாளராகப் பணியாற்றிய சனாதிபதி கோட்டாபய இராசபக்ச உட்பட பல போர்க்கால இராணுவ தளபதிகளுக்கு எதிராக வழக்குத் தொடர்வதற்கு வழிவகுக்கும் என வழக்கறிஞர் யாஸ்மின் சூகா கருத்துத் தெரிவித்துள்ளார்.

நீதியின் சக்கரங்கள் மெதுவாகச் சுழல்கின்றன ஆனால் மிக நன்றாக அரைக்கின்றன. இதன் பொருள் நீதி விரைவாக செய்யப்படாவிட்டாலும் இறுதியாக அது கிடைக்கம் போது, குற்றவாளி தனது முழுத் தண்டனையையும் பெறுவதிலிருந்து தப்பிக்க மாட்டான்.

# முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர்

### ஆக்கம்: க. குமரகுரு




(அறுசீர் விருத்தம்)

1) வங்கக் கடலலை எந்நாளும்
வணங்கும் காரேறு மூதூரின்
கங்குல் அகற்ற வந்துதிக்கும்
காலைக் கதிரவ னொளிபரப்ப
மங்கல நாதம் ஒலியெழுப்ப
மக்கள் ஆர்த்தே குதூகலிக்கத்
தங்க மகன்தம் பிப்பிள்ளை
தரணி மகிழ வந்துதித்தான்!

2) தந்தை சாமித் தம்பிக்கும்
தாயாள் கண்ணம் மைதமக்கும்
வந்தே உதித்த அருமகனை
மகிழ்வாய் எடுத்துச் சென்றங்கே
கந்தன் உறையும் சன்னிதியாம்
கதிர்கா மத்தான் முன்னெதிரே
முன்னையப் பெயரை மாற்றிவைத்தார்
மயில்வா கனனாய் மலர்ந்திட்டான்!

3) குஞ்சுத் தம்பி யாசிரியர்
குருவாய் அமைந்த வாய்பாலே
செந்தமிழ் ஆங்கிலம் இரண்டையுமே
சிறப்பாய்க் கற்றே திறன்பெற்றார்
நெஞ்சம் பதித்தார் கல்வியிலே
நிறைந்தார் எல்லோர் மனதிலுமே
தன்னொளி பரப்பும் தாரகையாய்
தரணியில் சுடரொளி தந்தாரே!

4) கல்வியில் சிறந்து விளங்கியதால்
கற்றவக் கல்விக் கூடத்திலே
நல்லா சிரியர் பதவிதனை
நயந்தே பெற்றார் மகிழ்ச்சியுடன்
வல்ல துணிவும் வல்லமையும்
வரவே அறிவியல் கற்றதனால்
பல்கலைக் கழகப் பட்டமதைப்
பலரும் போற்றப் பெற்றாரே!

5) இந்துக் கல்லூ ரியில்வகித்த
ஈடிலா அதிபர் பதவியினைத்
தந்து விட்டுத் தமிழ்நாட்டில்
மைலாப் பூரின் ராமகிருஷ்ண
மன்ற மடைந்தே துறவுற்றார்
விபுலா நந்தர் எனப்பெற்றார்.
இன்னும் மேற்பல பணியாற்ற
இலங்கை மீண்டும் வந்தாரே!

6) கல்வியை ஏழைகள் கற்றறியக்
கடின உழைப்பை மேற்கொண்டார்
செல்லக் குழந்தைபோல் கல்லடியில்
சிவாநந்த வித்யா லயமமைத்தார்
எல்லா மக்களும் கல்விபெற
ஏற்றிய கல்வித் தீபத்தால்
வெள்ளத் தனைய மலர்நீட்டாய்
விளைந்தது மட்டக் களப்பதுவே!

7) முதற்தமிழ் தருபெரும் பேராசான்
முத்தமிழ் வித்தகர் ஈழத்தின்
முதற்தமிழ் பண்டிதர் அவரன்றோ
மூமது ரைத்தமிழ்ச் சங்கத்தில்
மதயின பேதங்கள் ஒழிப்பதற்கு
மாபெரும் பணிசெய்த மாமுனியே
பத்திரி கைக்குமா சிரியரெனப்
பணிசெய்த விண்ணுறை மாதவனே!

8) பண்டிதர் ஒதுக்கிய பாரதியை
பயமின்றி ஆட்கொண்ட பண்டிதரே
மண்ணும் மக்களும் பயனுறவே
மகத்தான சேவைகள் செய்தவரே
எண்ணற்ற பதவி பெற்றிருந்தும்
எள்ள வும்கனம் கொள்ளாது
எந்நாளும் உழைத்தீர் சோர்வின்றி
ஏற்றமும் பெற்றார் அனைவருமே!

(எண்சீர் விருத்தம்)

9) ஈழத்திரு நாட்டின் இலக்கிய வரலாற்றில்
இணையிலா முத்திரை பதித்த வள்ளலவர்
ஏழிரண்டு ஆண்டு ஆராய்ச்சி பலசெய்து
எமக்கெனத் தந்தார் இணையற்ற யாழ்நூலை
ஈழத்தார் அன்றி அனைவரும் கொண்டாடும்
ஈசனார் உவக்கும் இன்மலர் மூன்றினையும்
நாளெல்லாம் உதவும் மதங்கசூ ளாமணியை
நாடக நூலாக்கித் தந்தநல் ஆசானே!

(அறுசீர் விருத்தம்)

10) கலைச்சொல் அகராதி தந்தளித்த
கலைமகள் மைந்தன் வாழியவே
உலகெலாம் போற்றும் எங்களது
உன்னத வித்தகர் வாழியவே
நலிவுற்ற மக்கள் நலம்காக்க
நாளெலாம் உழைத்த நாயகனே
இலங்கைத் திருநிலம் பெற்றெடுத்த
இளங்கோ வேயென்றும் வாழியவே!

# ஈழத்துத் திருக்கோவில்கள் 939



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com



## வந்தாறுமூலை மகாவிஷ்ணுகோவில்
### மட்டக்களப்பு

**"வையம் தகழியா வாகடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காகச் செய்ய
சுடராழி யானடிக்கே சூட்டினேன' சொல்மாலை
இடராழி நீங்குகவே என்று."**

பூரணைதினத்தன்று மகாவிஷ்ணுவிற்குப் பூசை நடைபெற்றபின்னர், உள்வீதியில் அமைந்துள்ள இலக்குமி தேவியின் கோயிலின்முன், மங்கலப்பொருட்களை ஏந்திவந்த பெண்கள் இருவரிசையாக அமர்ந்து, தாம்கொண்டுவந்த தீபத்தை எண்ணெய் திரியிட்டு ஏற்றிவைத்து, பழ்பாக்கு ஆகியவற்றைப் பரவி, ஆலயக்குருக்கள் சொல்லுகின்ற சுலோகங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு மலராகப் போட்டு வணங்கி வழிபடுவார்கள். இவ்வழிபாட்டின்மூலம் பெண்கள் தமக்கு வேண்டிய வரங்களைப் பெறுவதான ஐதீகம் நிலவுகின்றது. குறிப்பாக தனம், சந்தானம், தானியம், தைரியம், மாங்கல்யம் போன்ற சௌபாக்கியங்களையும் தந்தருளும்படி, மகாலட்சுமியிடம் இத்தீபவழிபாட்டின்போது பெண்கள் பிரார்த்தனை செய்வார்கள். இவர்கள் பிரார்த்தனை செய்யும்போது,

**"அந்தி விளக்கே அலங்கார நாயகியே
பசும்பொன்விளக்கு வைத்து பஞ்சுத் திரிபோட்டு
குளம்போலே எண்ணெய் விட்டு
கோலமுடன் ஏற்றிவைத்தேன்
வைத்தேன் திருவிளக்கு மாளிகையும் தான் விளங்க
ஏற்றினேன் நெய்விளக்கு எந்தன் குடிவிளங்க."**

ஏன்று பாடிப்பரவசம் அடைவார்கள்.

புரட்டாதி மாதத்தில் நடைபெறும் கஞ்சன் கதை படிக்கும் காலத்திலும், மார்கழி மாதத்தில் நடைபெறும் வைகுந்த ஏகாதசியன்றும், காவேரி கண்டங்குடியாரால் சர்ப்ப சயனமும், கண்ணப்பபோடியார் கருடன் கட்டும் திருவேட்டையும், பரமக்குட்டிக் குடியார் தீர்த்தோற்சவத்தினையும் ஏற்று நடத்துவர். கருடன்கட்டு அன்று தயிர்முட்டி உடைத்தல், தீக்குளித்தல், ஆகியனவும் சிறப்பாக நடைபெறும்.

வந்தாறுமூலை மகாவிஷ்ணுஆலயத்தின் கோவில் வீதியில், இலக்குமி தேவியோடு, ஆண்டாள், நரசிங்கம், அநுமார், மற்றும் நவக்கிரகக் கோயில்களும் காணப்படுகின்றன. இவ்வாறு எழந்தருளியுள்ள தெய்வங்களுக்குத் தினமும் பூசை நடைபெறும். இவ்வாலயத்தில் சைவக் குருமாரே பூசையை நடத்தி வருகின்றனர். இவ்வாலயத்தின் வெளிவீதியிலே, முற்காலத்திலே வாழ்ந்து சமாதியான பெரியவர்களின் பெயரால் ஒரு ஆலயமும், மடமும் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாலய பரிபாலனத்திற்கு நிரந்தர வருவாயைக் கொடுக்கக்கூடிய காணிகள் பள்ளவெளிக்குளம், பாலையடி, குருக்கள்பட்டி, மாவிலங்கையடி, முன்மாரி, ஆகிய இடங்களிலே காணப்படுகின்றது. இதன்மூலம் கிடைக்கும் வருவாயினால் ஆலயத்தின் பரிபாலனமும் மிகச் சிறப்பாக நடைபெறும்.

சொத்துக்களால் மட்டுமன்றிச் சிறப்பான நிர்வாக சபையினரின் உழைப்பும் ஆலயங்களின் சிறப்பிற்கும் வளர்ச்சிக்கும் முக்கிய காரணமாக அமைகின்றது. இவ்வாலய வளர்ச்சியிலும் நிர்வாக சபை சிறப்பான பணியாற்றி வருகின்றது. இவ்வூர் மக்களின் விருப்பப்படி, காலத்திற்குகாலம் நிர்வாக சபை உறுப்பினர்கள் மாற்றப்பட்டு நிர்வாகம் நடைபெற்று வருகின்றது. அத்தோடு ஆலய சேவைகளில் ஈடுபாடு கொண்டவாகளும் ஆலயப்பணிகளில் சேவையாற்ற இவ்வாறான மாற்றம் உதவுகின்றது.

மட்டக்களப்பில் நிலவும் விஷ்ணு வழிபாட்டை நோக்கும்போது, மாடுகள் ஏராளமாக இருந்த பகுதிகளிலேயே தொடக்க காலத்தில், இவ்வழிபாடு இருந்திருக்கவேண்டும். மாடுகளைக் காப்பவன் கண்ணன் என்ற அடிப்படையில் மாடுகளை ஏராளமாகப் பேணிய பகுதிகளில், இவ்வழிபாட்டினை மேற்கொண்டிருக்கலாம். வந்தாறுமூலையிலே இன்றும் காணப்படும் சில வழக்கங்கள் இதற்கு ஆதாரமாகக் காணப்படுகின்றன.

மாட்டுப்பட்டியிலே முதன் முதற் கன்றினை அடைத்துப் பால்கறக்கும்போது, முதன்முதல் கறக்கும் பால்பிரயோசனம் அனைத்தையும் கண்ணன் ஆலயத்தில் படைக்கவேண்டும். அன்றேல் துர்நிமித்தங்கள் நடக்குமெனக் கருதுவர். வந்தாறுமூலையில் அதிகமான மக்களிடம் மாடுகள் உண்டு. மட்டக்களப்பிலுள்ள பழமையான பல விஷ்ணுகோவில்கள் குளக்கோட்டன் காலத்திலே அமைக்கப்பட்டதென்ற கருத்தும் மக்களிடம் காணப்படுகின்றது. எவ்வாறாயினும், மட்டக்களப்புத் தமிழகப் பொதுமக்களின் சமய வாழ்க்கையில் விஷ்ணு வழிபாடு முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்குகின்றது என்பது வெளிப்படை.

**"அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு
வடிவாய் நின் வலமார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு
வடிவார் சோதி வலத்துறையும் சுடராழியும் பல்லாண்டு
படைப்போர் புக்கு முழங்கும் அப் பாஞ்ச சன்னியமும் பல்லாண்டே."**

*வளரும்...*

# தேர்தல் பணிகளில் ஆர்வம் காட்டாத அதிமுகவினர்

## நெருக்கடியை சந்திக்கும் பாஜக வேட்பாளர்கள்

தேர்தல் பணிகளில் அதிமுகவினர் ஆர்வம் காட்டாததாலும், முஸ்லிம் பகுதிகளில் பிரச்சாரம் செய்ய அனுமதி மறுக்கப்படுவதாலும் பாஜக வேட்பாளர்கள் நெருக்கடியை எதிர்கொண்டு வருகின்றனர்.சட்டப்பேரவைத் தேர்தல் வாக்குப் பதிவுக்கு இன்னும் இரு வாரங்களே இருக்கும் நிலையில் தேர்தல் பிரச்சாரம் விறுவிறுப்படைந்துள்ளது.

சுட்டெரிக்கும் வெயில், கரோனா பரவல் என்று எதைப் பற்றியும் கவலைப்படாமல் அனைத்துக் கட்சி வேட்பாளர்களும் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அதிமுக கூட்டணியில் இடம்பெற்றுள்ள பாஜக, நாகர்கோவில், குளச்சல், விளவங்கோடு, திருநெல்வேலி, விருதுநகர், மதுரைவடக்கு, ராமநாதபுரம், காரைக்குடி, அரவக்குறிச்சி, திருவையாறு, திட்டக்குடி (தனி),மொடக்குறிச்சி, தாராபுரம் (தனி), கோவைதெற்கு, உதகமண்டலம், தளி, திருவண்ணாமலை, திருக்கோவிலூர், ஆயிரம் விளக்கு, துறைமுகம் ஆகிய 20 தொகுதிகளில் போட்டியிடுகிறது.இதில் நாகர்கோவில், குளச்சல், விளவங்கோடு தவிர மற்ற தொகுதிகளில் முழுக்க முழுக்க அதிமுகவை நம்பியே பாஜக களமிறங்கியுள்ளது.

ஆனால், பாஜக போட்டியிடும் தொகுதிகளில் அதிமுகவினர் தேர்தல் பணிகளில் ஆர்வம் காட்டுவதில்லை என்றும், அமைச்சர்கள், மாவட்டச் செயலாளர்கள் பலரும் தேர்தலில் போட்டியிடுவதால்



அவர்களின் தொகுதிகளில் மட்டுமே கவனம் செலுத்துவதாக பாஜக வேட்பாளர்கள் கட்சி தங்கள் கட்சி மேலிடத்தில் புகார் தெரிவித்துள்ளனர். பாஜக தேசிய பொதுச்செயலாளர் சி.டி.ரவி, மத்திய உள்துறை இணை அமைச்சர் கிஷண் ரெட்டி ஆகியோர் முதல்வர் பழனிசாமி, துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் ஆகியோரிடம், அதிமுகவினரின் ஒத்துழையாமை குறித்து பேசியுள்ளனர்.


ஆனாலும், அதிமுகவினர் நாங்கள் போட்டியிடும் தொகுதிகளை கண்டுகொள்வதே இல்லை என்கின்றனர் பாஜகவினர். இது தொடர்பாக தமிழக பாஜக நிர்வாகிகளிடம் விசாரித்தபோது, "பாஜகவுக்கு குறைந்தது 50 சதவீத வாக்குச் சாவடிகளில் 20 பேர் கொண்ட குழு உள்ள நாகர்கோவில், குளச்சல், விளவங்கோடு, ராமநாதபுரம், கோவை தெற்கு, உதகமண்டலம், துறைமுகம் போன்ற தொகுதிகளில் நிலைமையை சமாளித்து விடலாம்.

ஆனால், மற்ற தொகுதிகளில் அதிமுகவினரின் ஒத்துழைப்பு மிகமிக அவசியம். திமுகவை தோற்கடிக்க வேண்டுமானால் பாஜகவையும் வெற்றிபெறச் செய்ய வேண்டும் என்பதை அதிமுகவினர் உணர வேண்டும்" என்றனர்.அரவக்குறிச்சி உள்ளிட்ட பாஜக போட்டியிடும் தொகுதிகளில் முஸ்லிம்கள் அதிகம் வசிக்கும் பகுதிகளில் பிரச்சாரம் செய்ய பாஜக வேட்பாளர்கள் அனுமதிக்கப்படாததால் நெருக்கடியை சந்தித்து வருகின்றனர்.

திருச்சி மேற்கு, பழனி போன்ற பல தொகுதிகளில் அதிமுக வேட்பாளர்களும் இந்தப் பிரச்சினையை எதிர்கொண்டு வருகின்றனர். இது தொடர்பாக அரவக்குறிச்சி தொகுதி பாஜக வேட்பாளர் அண்ணாமலையிடம் கேட்டபோது, "அரவக்குறிச்சி தொகுதிக்குட்பட்ட பள்ளப்பட்டியில் சுமார் 20 ஆயிரம் முஸ்லிம்கள் வசிக்கின்றனர். அவர்களில் பலர் குறிப்பாக பெண்கள் பாஜகவுக்கு வாக்களிக்க தயாராக உள்ளனர். முஸ்லிம்கள் உள்ளிட்ட அனைத்து மதத்தினரையும் மதிக்கக் கூடிய கட்சி பாஜக.

இந்தியாவின் எந்தப் பகுதிக்கும் சென்று பிரச்சாரம் செய்ய அனைவருக்கும் உரிமை உள்ளது. பள்ளப்பட்டியில் கண்டிப்பாக நான் பிரச்சாரம் செய்வேன்" என்றார்.

# அதிமுக, திமுக கட்சிகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பொது இடங்கள் மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்படும்: மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன் உறுதி



அதிமுக, திமுக கட்சி களால் ஆக்கிரமிக் கப்பட்டுள்ள பொது இடங்கள் மீட்கப்பட்டு மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்படும் என மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல் ஹாசன் உறுதியளித்தார். கமல்ஹாசன் நேற்று பல்லாவரம் தொகுதி வேட்பாளர் செந்தில் ஆறுமுகம், தாம்பரம் இளங்கோ, சோழிங்கநல்லூர் ராஜீவ்குமார், ஆலந்தூர் வேட்பாளர் சரத் பாபு, செங்கல்பட்டு ஜஜேகே வேட்பாளர் எஸ்.முத்தமிழ்செல்வன் ஆகியோரை ஆதரித்து பிரச்சாரம் மேற்கொண்டார். அப்போது அவர் பேசியதாவது:

உங்களுக்கு புதிய அரசியல் மாற்றத்துக்கான வழி கிடைத்துள்ளது. மக்கள் நீதி மய்யம் என்பது கட்சி அல்ல; நீங்கள் தேர்ந்தெடுக்க வேண்டிய பாதை. நாங்கள் வெற்றி பெற்றவுடன் என்ன செய்ய வேண்டும் என்ற பட்டியல் வைத்திருக்கிறோம் அதை நிறைவேற்றுவோம். பல்லாவரம் தொகுதியில் உள்ள ஏரிகளில் கழிவுநீர் கலப்பதை தடுப்போம். அஸ்தினாபுரம் பேருந்து நிறுத்த நிழற்குடை அமைக்கப்படும். மழை பெய்தால் தண்ணீரில் தத்தளிக்கும் குரோம்பேட்டை அரசு மருத்துவமனை சிறந்த மருத்துவமனையாக மாற்றி அமைக்கப்படும்.

அதிமுக, திமுக 2 கட்சிகளும் ஆக்கிரமித்துள்ள பொது இடங்கள் மீட்கப்பட்டு பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில் மாற்றியமைக்கப்படும். போக்குவரத்து நெரிசல் சரி செய்யப்படும். பெண்களுக்கும், பொதுமக்களுக்கு இடையூறாக உள்ள டாஸ்மாக் கடைகள் மூடப்படும். பலருடைய பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளன. இளைஞர்கள் வந்தால், மாற்றம் ஏற்படும் என்பதால் இதுபோன்ற செயலில் சில கட்சிகள் ஈடுபட்டுள்ளன.

தற்போது தமிழகம் திவாலாகும் நிலை ஏற்பட்டுள்ளது. ஒவ்வொருவரின் தலையிலும் ரூ.65 ஆயிரம் கடன் இருக்கிறது. ஏழைகளின் சோகத்தை வைத்து அரசியல் செய்யும் நிலை மாற வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

# ஏப். 6க்கு பிறகு ஊரடங்கு என்ற தகவல் வதந்தி: சுகாதாரத் துறை செயலர் அறிவிப்பு

தமிழகத்தில் வரும் ஏப்ரல் 6ம் தேதிக்கு பிறகு முழு ஊரடங்கு அமல்படுத்தப்படும் என்ற தகவல் வதந்தி என்று சுகாதாரத் துறை செயலர் ராதாகிருஷ்ணன் கூறினார். இதுகுறித்து சென்னையில் அவர் நேற்று கூறியதாவது: தமிழகத்தில்



கரோனா பரவலை கட்டுப்படுத்த அரசு எடுத்துவரும் நடவடிக்கைகளுக்கு மக்கள் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.

தற்போது தகுதி உள்ள அனைவரும் தடுப்பூசிபோட்டுக் கொள்ள வேண்டும்.முகக் கவசம் அணிதல், சமூகஇடைவெளி பின்பற்றுதல், கை கழுவுதல் போன்றவற்றை பின்பற்ற வேண்டும். இதன்மூலம் தொற்று பரவலை கட்டுப்படுத்தலாம். ஒரு தெருவில் 3 பேருக்கு மேல் தொற்று பாதிப்பு கண்டறியப்பட்டால், அந்த தெரு நோய் கட்டுப்பாடு பகுதியாக அறிவிக்கப்படும். அந்த தெருவில் இருந்து, வெளிநபர்கள் உள்ளே வருவதும்,உள்ளே இருப்பவர்கள் வெளியே செல்வதும் தடுக்கப்படும்.

'தமிழகத்தில் வரும் ஏப்ரல் 6ம் தேதிக்கு பிறகு முழு ஊரடங்கு அமல்படுத்தப்படும்' என்றதகவல் பரப்பப்படுகிறது. இது வதந்தி. பொதுமக்கள் இதை நம்ப வேண்டாம். தமிழக அரசின் வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றினால், நோய் தொற்றை கட்டுப்படுத்தலாம். கரோனாபாதுகாப்பு முன்னெச்சரிக்கைகளை மக்கள் கட்டாயம் பின்பற்ற வேண்டும்.

# தமிழகத்தில் மீண்டும் ஜல்லிக்கட்டு வர மோடிதான் காரணம்: கிருஷ்ணகிரியில் துணை முதல்வர் ஓபிஎஸ் பெருமிதம்

தமிழகத்தில் ஜல்லிக்கட்டு மீண்டும் வர காரணமாக இருந்தவர் மோடி தான் என கிருஷ்ணகிரியில் நடந்த பிரச்சார கூட்டத்தில் துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்தார்.

கிருஷ்ணகிரியில் 5 ரோடு ரவுண்டானா அருகில் நேற்று முன்தினம் இரவு அதிமுக, கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து பிரச்சார பொதுக்கூட்டம் நடந்தது. இக்கூட்டத்தில் தமிழக துணை முதல்வரும், அதிமுக ஒருங்கிணைப்பாளருமான ஓ.பன்னீர்செல்வம் பங்கேற்று, அதிமுக வேட்பாளர்கள் வேப்பனப்பள்ளி கே.பி.முனுசாமி, ஓசூர் ஜோதி பாலகிருஷ்ணா ரெட்டி, கிருஷ்ணகிரி அசோக்குமார், பர்கூர் கிருஷ்ணன், ஊத்தங்கரை (தனி) தமிழ்செல்வம், தளி தொகுதி பாஜகவேட்பாளர் மருத்துவர் நாகேஷ்குமார் ஆகியோருக்கு ஆதரவாக பிரச்சாரம் மேற்கொண்டார். அப்போது அவர் பேசியதாவது:

பெண்கள் நலனில் முக்கியத்துவம் கொடுத்து தனிக் கவனம் செலுத்தியவர் ஜெயலலிதா. பெண்களுக்காக பல சிறப்பான திட்டங்களை செயல்படுத்தினார். 10ஆண்டுகால ஆட்சியில் ரூ.6 லட்சத்து 85 ஆயிரம் கோடி நிதியைசார்த்து தொழில்கள் தொடங்கப்பட்டன. இதன் மூலம் 19 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்புகள் கிடைத்துள்ளன. 2006 ல் திமுகதேர்தல் அறிக்கையில் நிலமற்றவர்களுக்கு 2 ஏக்கர் நிலம் தருவதாக கூறினார்கள். ஆனால் வழங்கவில்லை.

நாம் சொன்னதை செய்வோம். தற்போது தேர்தல் அறிக்கையில் வாஷிங் மெஷின், 6 சிலிண்டர்கள் தருவதாக குறிப்பிட்டுள்ளோம். திமுக காங்கிரஸ் கூட்டணி ஆட்சியில்தான் ஜல்லிக்கட்டுக்கு தடைவந்தது. காளையை காட்சிப்படுத்த தடை செய்யப்பட்ட விலங்குகள் பட்டியலில் சேர்க்க அவர்கள் ஆட்சியில்தான் ஒப்புதல் அளிக்கப்பட்டது. ஜல்லிக்கட்டு மீதான தடையை விலக்கி உடைத்தெறிந்த பெருமை நம்மை சாரும், தமிழகத்தில் ஜல்லிக்கட்டு மீண்டும் வர காரணமாக இருந்தவர் மோடி.

காங்கிரஸ் திமுக கூட்டணி ஆட்சியில் தமிழகத்தின் நலனுக்காக என்ன திட்டம் கொண்டு வந்துள்ளார்கள்? மதுரையில் உலகத்தரம் வாய்ந்த எய்ம்ஸ் மருத்துவமனையை நாம் கொண்டு வந்துள்ளோம். இன்னும் 6 மாதத்தில் அந்த மருத்துவமனை செயல்பட நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு ஓ.பன்னீர்செல்வம் பேசினார்.

# BEST INDIAN ASTROLOGER & PSYCHIC
## Pandit: VEERANANDA

காசியில் இருந்து வருகை தந்துள்ளார்

31 வருடங்கள் அனுபவமுள்ள மற்றும் 11 தலைமுறைகளாக ஜோதிடம் பார்பவர்

உலகத்தில் சூரிய சந்திர நவக்கிரக மகிமையினாலே

இன்ப துன்பங்கள், நன்மை தீமை பற்றி விபரம் கூறுவார்




**MOST POWERFUL SPIRITUALIST**

Family, Money, Childless, Health, Depression, Negativity, Husband Wife, Relationship, Marriage, Enemy, Court, Jealousy, Business, Work,Curses



- கை பார்த்து, முகம் பார்த்து அருள்வாக்கு சொல்லப்படும். புகைப்படம் பார்த்து
- ஜாதகம் பார்த்து, குறிப்புப் பார்த்து ஆரோக்கியம், மனநிம்மதி, லக்சுமி கடாட்சம் கிடைக்கவும்,
- இராசி, நட்சத்திரம் பார்த்து நடந்தது, நடப்பது, நடக்கப்போவது பற்றிச் சொல்லப்படும்.
- செய்வினை கோளாறு, பேய்பிசாசு தொந்தரவா, எதிரிகள் தொந்தரவா, கண் திருஸ்டி,
- நாகதோசம், காதல் விவகாரங்கள், தொழில், மனை அபிவிருத்தி, வாகனப் பொருத்தம்,
- காதலர் ஒற்றுமை போன்றவற்றிற்கும், வேறு பிரச்சனைகளுக்கும் உடனடியாக தீர்வு சொல்லப்படும்
- ஏந்தப் பிரச்னையாக இருந்தாலும் 5 நாட்களில் தீர்வு காண்பார

**Removes Black Magic, Jadoo, Vodoo, Obeya, Witchcft, Jinn Curses, & Gives 100% Protection**

- சர்க்கரை வியாதி
- ஆஸ்துமா
- தீராத கை-கால் வலி
- அல்சர்
- தோல் வியாதி
- அலர்ஜி
- மூட்டு வலி
- உடல் பருமான்
- அதிகரிக்க – குறைக்க
- காக்கா வலிப்பு
- ஆண்மை குறைவு
- ஞாபக சக்தி குறைவு
- மூலம்
- சிறுநீர்க் கோளாறு
- பெண்களுக்கான
- மாதவிடாய் பிரச்சனைகள்
- நரம்புத் தளர்ச்சி
- சரவாங்கி
- வாயுக்கோளாறு
- தலைவலி
- கழுத்து வலி
- முகப்பரு, தேமல்
- வெண்கு்‘டம்
- வாதம்
- மஞ்சல் காமாலை
- முடி உதிர்வு, உ‘டணம்
- பக்கவாதம்
- நரம்பு வாதம்

எந்தவித பக்கவிளைவுகளும் கிடையாது நம்பி வாரீர் நலமுடன் வாழ்வீர்

**ஆயுர்வேத சிகிச்சை**

**Call For Appoinment: 647-858-3355**

**1101 Victoria Pank Ave, # 3 , Scarborough ON M4B 2K2**

**Opp. NO FRILLS, ( VICTORIA PARK & ST CLAIR AVE )**

# அன்பின் தொனி - 605

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**ஜெபம் - ஜெபத்தின் வல்லமை.**

**எங்கள் பிதாக்கள் எகிப்திலே உம்முடைய அதிசயங்களை உணரவில்லை**

அல்லேலூயா, கர்த்தரைத் துதியுங்கள்ஞ, அவர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது. கர்த்தருடைய வல்லமையான செய்கைகளைச் சொல்லி, அவருடைய துதியையெல்லாம் பிரஸ்தாபப்படுத்தத்தக்கவன் யார்? நியாயத்தைக் கைக்கொள்ளுகிறவர்களும், எக்காலத்திலும் நீதியைச்செய்கிறவர்களும் பாக்கியவான்கள். கர்த்தாவே, நீர் தெரிந்துகொண்டவர்களின் நன்மையை நான் கண்டு, உம்முடைய ஜாதியின் மகிழ்ச்சியால் மகிழ்ந்து, உம்முடைய சுதந்தரத்தோடே மேன் மைபாராட்டும்படிக்கு, உம்முடைய ஜனங்களுக்கு நீர் பாராட்டும் கிருபையின்படி என்னை நினைத்து, உம்முடைய இரட் சிப்பினால் என்னைச் சந்தித்தருளும். எங்கள் பிதாக்களோடுங்கூட நாங்களும் பாவஞ்செய்து, அக்கிரமம் நடப்பித்து, ஆகாமியம்பண்ணினோம். எங்கள் பிதாக்கள் எகிப்திலே உம்முடைய அதிசயங்களை உணராமலும், உம்முடைய கிருபைகளின் திரட்சியை நினையாமலும் போய், சிவந்த சமுத்திர ஓரத்திலே கலகம்பண்ணினார்கள். ஆனாலும் அவர் தமது வல்லமையை வெளிப்படுத்தும்படி, தம்முடைய நாமத்தினிமித்தம் அவர்களை இரட்சித்தார். அவர் சிவந்த சமுத்திரத்தை அதட்டினார், அது வற்றிப்போயிற்று, வெட்டாந்தரையில் நடக்கிறதுபோல அவர்களை ஆழங்களில் நடந்து போகப்பண்ணினார். பகைஞன் கைக்கு அவர்களை விலக்கி இரட்சித்து, சத்துருவின் கைக்கு அவர்களை விலக்கி மீட்டார். அவர்கள் சத்துருக்களைத் தண்ணீர்கள் மூடிக்கொண்டது, அவர்களில் ஒருவனும் மீந்திருக்கவில்லை. அப்பொழுது அவர்கள் அவருடைய வார்த்தைகளை விசுவாசித்து, அவருடையதுதியைப் பாடினார்கள். ஆனாலும் சீக்கிர மாய் அவருடைய கிரியைகளை மறந்தார்கள்ஞ அவருடைய ஆலோசனைக்கு அவர்கள் காத்திராமல், வனாந்தரத்திலே இச்சையுள்ளவர்களாகி, அவாந்தரவெளியிலே தேவனைப் பரீட்சைபார்த்தார்கள். அப்பொழுது அவர்கள் கேட்டதை அவர்களுக்குக் கொடுத்தார், அவர்கள் ஆத்துமாக்களிலோ இளைப்பை அனுப்பினார். பாளயத்தில் அவர்கள் மோசேயின்மேலும், கர்த்தருடைய பரிசுத்தனாகிய ஆரோனின்மேலும் பொறாமைகொண்டார்கள். பூமி பிளந்து தாத்தானை விழுங்கி, அபிராமின் கூட்டத்தை மூடிப்போட்டது. அவர்கள் கூட்டத்தில் அக்கினி பற்றியெரிந்தது அக்கினி ஜுவாலை துன்மார்க்கரை எரித்துப்போட்டது. அவர்கள் ஓரேபிலே ஒரு கன்றுக்குட்டியையுண்டாக்கி, வார்ப்பிக்கப்பட்ட விக்கிரகத்தை நமஸ்கரித்தார்கள். தங்கள் மகிமையைப் புல்லைத் தின்கிற மாட்டின் சாயலாக மாற்றினார்கள். எகிப்திலே பெரிய கிரியைகளையும், காமின் தேசத்திலே அதிசயங்களையும், சிவந்த சமுத்திரத்தண்டையிலே பயங்கரமானவைகளையும் செய்தவராகிய, தங்கள் இரட்சகரான தேவனை மறந்தார்கள். ஆகையால், அவர்களை நாசம்பண்ணு வேன் என்றார், அப்பொழுது அவரால் தெரிந்துகொள்ளப்பட்ட மோசே, அவர்களை அவர் அழிக்காதபடிக்கு, அவருடைய உக்கிரத்தை ஆற்றும்பொருட்டு, அவருக்கு முன்பாகத் திறப்பின் வாயிலே நின்றான். - **சங்கீதம் 106: 1-23**

**அவர்களைச் சிறைபிடித்த யாவரும் அவர்களுக்கு இரங்கும்படி செய்தார்.**

அவருடைய வார்த்தையை விசுவாசியாமல், இச்சிக்கப்படத்தக்க தேசத்தை அசட்டைபண்ணினார்கள். கர்த்தருடைய சத்தத்திற்குச் செவிகொடாமல், தங்கள் கூடாரங்களில் முறுமுறுத்தார்கள். அப்பொழுது அவர்கள் வனாந்தரத்திலே மடியவும், அவர்கள் சந்ததி ஜாதிகளுக்குள்ளே அழியவும், அவர்கள் பற்பல தேசங்களிலே சிதறடிக்கப்படவும், அவர்களுக்கு விரோதமாகத் தம்முடைய கையை எடுத்தார். அவர்கள் பாகால்பேயோரைப்பற்றிக்கொண்டு, ஜீவனில்லாதவைகளுக்கு இட்ட பலிகளைப் புசித்து, தங்கள் கிரியைகளினால் அவருக்குக் கோபம் மூட்டினார்கள், ஆகையால் வாதை அவர்களுக்குள் புகுந்தது. அப்பொழுது பினெகாஸ் எழுந்து நின்று நியாயஞ்செய்தான். அதினால் வாதை நிறுத்தப் பட்டது. அது தலைமுறை தலைமுறையாக என்றைக்கும் அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது. மேரிபாவின் தண்ணீர் களிடத்திலும் அவருக்குக் கடுங்கோபம் மூட்டினார்கள், அவர்கள் நிமித்தம் மோசேக்கும் பொல்லாப்பு வந்தது. அவர்கள் அவன் ஆவியை விசனப்படுத்தினதினாலே, தன் உதடுகளினால் பதறிப்பேசினான். கர்த்தர் தங்களுக்குச் சொன்னபடி, அவர்கள் அந்த ஜனங்களை அழிக்கவில்லை. ஜாதிகளுடனே கலந்து, அவர்கள் கிரியைகளைக் கற்று, அவர்களுடைய விக்கிரகங்களைச் சேவித்தார்கள், அவைகள் அவர்களுக்குக் கண்ணியாயிற்று. அவர்கள் தங்கள் குமாரரையும் தங்கள் குமாரத்திகளையும் பிசாசுகளுக்குப் பலியிட்டார்கள். அவர்கள் கானான்தேசத்து விக்கிரகங்களுக்குப் பலியிட்டு, தங்கள் குமாரர் குமாரத்திகளுடைய குற்றமில்லாத இரத்தத்தைச் சிந்தினார்கள், தேசம் இரத்தத்தால் தீட்டுப்பட்டது. அவர்கள் தங்கள் கிரியைகளினால் அசுத்தமாகி, தங்கள் செய்கைகளினால் சோரம்போனார்கள். அதினால் கர்த்தருடைய கோபம் தமது ஜனத்தின்மேல் மூண்டது, அவர் தமது சுதந்தரத்தை அருவருத்தார். அவர்களை ஜாதிகளுடைய கையில் ஒப்புக்கொடுத்தார், அவர்களுடைய பகைஞர் அவர்களை ஆண்டார்கள். அவர்களுடைய சத்துருக்கள் அவர் களை ஒடுக்கினார்கள், அவர்களுடைய கையின்கீழ்த் தாழ்த்தப்பட்டார்கள். அநேகந்தரம் அவர்களை விடுவித்தார், அவர்களோ தங்கள் யோசனையினால் அவருக்கு விரோதமாய்க் கலகம் பண்ணி, தங்களுடைய அக்கிரமத்தினால் சிறுமைப்படுத்தப்பட்டார்கள். அவர்கள் கூப்பிடுதலை அவர் கேட்கும்போதோ, அவர்களுக்கு உண்டான இடுக்கத்தை அவர் கண்ணோக்கி, அவர்களுக்காகத் தமது உடன்படிக்கையை நினைத்து, தமது மிகுந்த கிருபையின்படி மனஸ்தா பப்பட்டு, அவர்களைச் சிறைபிடித்த யாவரும் அவர்களுக்கு இரங்கும்படி செய்தார். எங்கள் தேவனாகிய கர்த்தாவே, நாங்கள் உமது பரிசுத்த நாமத்தைப்போற்றி, உம்மைத் துதிக்கிறதில் மேன்மைபாராட்டும்படி எங்களை இரட்சித்து, எங்களை ஜாதிகளிலிருந்து சேர்த்தருளும். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் அநாதியாய் என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்படத்தக்கவர். ஜனங்களெல்லாரும்: ஆமென், அல்லேலூயா, என்பார்களாக. - **சங்கீதம் 106: 1-48**

**தேவன் தமது பரிசுத்தத்தைக்கொண்டு விளம்பினார்**

தேவனே, என் இருதயம் ஆயத்தமாயிருக்கிறது நான் பாடிக்கீர்த்தனம் பண்ணுவேன், என் மகிமையும் பாடும். வீணையே, சுரமண்டலமே, விழியுங்கள், நான் அதிகாலையில் விழிப்பேன். கர்த்தாவே, ஜனங்களுக்குள்ளே உம்மைத்துதிப் பேன் ஜாதிகளுக்குள்ளே உம்மைக் கீர்த்தனம்பண்ணுவேன். உமது கிருபை வானங்களுக்கு மேலாகவும், உமது சத்தியம் மேகமண்டலங்கள் பரியந்தமும் எட்டுகிற தேவனே, வானங்களுக்கு மேலாக உயர்ந்திரும், உமது மகிமை பூமிய னைத்தின்மேலும் உயர்ந்திருப்பதாக. உமது பிரியர் விடுவிக்கப்படும் பொருட்டு, உமது வலதுகரத்தினால் இரட்சித்து, எங்கள் ஜெபத்தைக் கேட்டருளும். - **சங்கீதம் 108: 1-6**

*தொடரும்...*



தலைமன்னார் முதல் தனுஷ்கோடி வரை...

# 28 கி.மீ. தூரம் கடலில் நீந்தி சாதித்தார், தெலுங்கானா ஆசிரியை

**த**மிழகத்தின் தனுஷ்கோடிக்கும், இலங்கையின் தலைமன்னாருக்கும் இடையே 28 கிலோ மீட்டர் தூரத்துக்கு கடல் உள்ளது. பாக் நீரிணை அல்லது பாக்ஜலசந்தி எனப்படும் இந்த கடல் பகுதியில் இதுவரை பல நீச்சல் வீரர்கள் நீந்தி சாதனை செய்துள்ளனர்.

ஈரோட்டில் பிறந்து உலக அளவில் சாதித்த நீச்சல் வீரர் குற்றாலீசுவரன் 12 வயது சிறுவனாக இருந்தபோது தலைமன்னார் - தனுஷ்கோடி இடையிலான கடல்பகுதியை 16 மணிநேரத்தில் நீந்திக்கடந்து சாதனை படைத்தார். அதில் கிடைத்த உற்சாகத்தால் இங்கிலீஷ் கால்வாயையும் நீந்திக்கடந்து உலக அளவில் சாதனை படைத்தார்.

அதன்பிறகு பல நீச்சல் வீரர்கள் பாக் நீரிணை கடல் பகுதியை நீந்திக்கடந்து சாதனை புரிந்துள்ளனர். அவர்களில் தமிழக உயர்போலீஸ் அதிகாரியான சைலேந்திரபாபுவும் ஒருவர்.

இப்போது முதல்முறையாக ஒரு பெண், தலைமன்னாரில் இருந்து தனுஷ்கோடி வரை கடலில் நீந்தி வந்து சாதனை படைத்துள்ளார். அவர் பெயர் ஷியாமளா ஹோலி. 48 வயதாகும் இவர், தெலுங்கானா தலைநகர் ஐதராபாத்தில் ஆசிரியையாகப்பணியாற்றி வருகிறார். நீச்சல் வீராங்கனையும் கூட.

இந்தியாவில் பல ஆறுகளில் நீந்தியுள்ள இவர், கடலில் நீந்தி சாதனை படைக்கத் திட்டமிட்டு, தலைமன்னார் - தனுஷ்கோடி இடையிலான கடலைத்தேர்வுசெய்தார். கடந்த ஆண்டே அதற்குத்தயாராகி வந்த நிலையில் கொரோனா வைரஸ் பரவலால் அவரது முயற்சி தடைபட்டது. இந்த ஆண்டு அவரது சாதனை முயற்சிக்கு அனுமதி கிடைத்ததும், சில நாட்களுக்கு முன் ராமேசுவரம் வந்தார்.



ராமேசுவரம் சங்குமால் கடற்கரையில் இருந்து தன்னுடைய பயிற்சியாளர் தலைமையிலான குழுவுடன் படகில் தலைமன்னார் சென்றார். அங்கிருந்து நேற்று (19-ந்தேதி) அதிகாலை 4.15 மணிக்கு நீந்தத்தொடங்கினார். தலைமன்னார் கடல் பகுதியிலிருந்து சர்வதேச கடல் எல்லை வரை இலங்கை கடற்படை அவருக்கு பாதுகாப்பு வழங்கியது.



இந்திய கடல் பகுதிக்குள் நீந்தி வரும்போது அலைகளின் வேகம் அதிகமாக இருந்ததால் அவருக்கு நீந்துவதில் சற்று சிரமம் ஏற்பட்டது. என்றாலும், தொடர்ந்து 13 மணிநேரம் 35 நிமிடங்கள் சளைக்காமல் நீந்திய அவர், மாலை 5.50 மணிக்கு தனுஷ்கோடி அரிச்சல்முனை கடற்கரையை வந்தடைந்தார்.

அரிச்சல் முனையில் ஷியாமளா ஹோலியை சமூக ஆர்வலர்களும் சுற்றுலா பயணிகளும், மாலை - பொன்னாடைகள் அணிவித்து உற்சாகமாக வரவேற்றார்கள்.

அப்போது அவர் கூறுகையில், “இலங்கை கடல் பகுதியில் நீந்துவதற்கு ஏற்ப கடல் நீரோட்டம் இருந்தது. ஆனால் இந்திய கடல் பகுதியில் நீரோட்டம் அதிகமாக இருந்ததால் சற்று சிரமமாக இருந்தது. எனினும் சமாளித்து நீந்தி வந்து சேர்ந்து விட்டேன். அடுத்து இங்கிலீஷ் கால்வாயை நீந்திக்கடப்பது எனது லட்சியம்” என்று தெரிவித்தார்.

தலைமன்னார் - தனுஷ்கோடி இடையிலான கடற்பகுதியை ஒரு பெண் நீந்திக்கடந்தது இதுவே முதல் முறையாகும்.



ஷியாமளா ஹோலியின் இந்த சாதனையைப்பார்க்கும்போது, கவியரசர் கண்ணதாசன் எழுதிய “காற்றுக்கென்ன வேலி கடலுக்கென்ன மூடி... கங்கை வெள்ளம் சங்குக்குள்ளே அடங்கி விடாது... மங்கை நெஞ்சம் பொங்கும்போது விலங்குகள் ஏது...” என்ற வரிகள் தான் நினைவுக்கு வருகின்றன.

**- மணிராஜ், திருநெல்வேலி**

# கல்கியின் பொன்னியின் செல்வன்

## வந்தியத்தேவனின் கடம்பூர் பயணம்... *அத்தியாயம் 4*

அதற்குப் பதில் ஒன்று வந்தது. 'இரண்டு வருடத்திற்கு முன்பே ஆதித்த கரிகாலனுக்கு இளவரசர் பட்டம் கட்டிவிட்டாயிற்றே. சுந்தர சோழருக்குப் பின்னால் அவர் மூத்த மகன் ஆதித்தகரிகாலன் தான் ராஜ்ஜியம் ஆள்பவன் ஆவான். அவனிற்கு அதற்குரிய பலமும் உண்டு' என்றது. பழுவேட்டரையர் தொடர்ந்தார் 'உண்மை உண்மை ஆனால் இப்படி இளவரசர் பட்டம் கடடுவதற்கு முன்னர் நம்மில் யாருடைய யோசனையாவது கேட்கப்படடதா? இங்கே கூடியுள்ள நாம் ஒவ்வொருவரும் நூறு ஆண்டுக்கு மேலாக, நாலு தலைமுறையாக சோழ ராஜ்ஜியத்தின் மேன்மைக்காக பாடுபட்ட பழங்குடியைச் சேர்ந்தவர்கள். என் பாட்டனாருக்கு தந்தை திருப்புறம்பலம் போரில் இறந்தார். என் பாட்டனார் வேளூரில் நடந்த போரில் உயிர் விட்டார். என் தந்தை தக்கோலத்தில் உயிர் தியாகம் செய்தார். அம் மாதிரியே உங்கள் ஒவ்வொருவர்கள் மூதாதையரும் இந்த சோழ நாட்டின் மேன்மையை நிலை நாட்டுவதற்காக உயிரைக் கொடுத்திருக்கிறார்கள். நம் ஒவ்வொருவர் குடும்பத்திலும் இளம் பிள்ளைகள் யுத்த களத்தில் செத்திருக்கிறார்கள். இன்றைக்கு ஈழநாட்டில் நம் குலத்தை, குடும்பத்தை சேர்ந்தவர்கள் போர் செய்து வருகிறார்கள். ஆனால் அடுத்தபடியாக பட்டத்திற்கு வர வேண்டியவர் யார் என்பது பற்றி தீர்மானிப்பதில் நம்முடைய அபிப்பிராயத்தை மகாராஜா கேட்கவில்லை' என்று ஆவேசத்துடன் கூறினார்.

அது மட்டுமன்றி பாண்டிய நாடு, நாஞ்சில் நாடு யாருக்கும் இதுவரையில் வணங்காத சேரநாடு, தொண்டை மண்டலம், பாகி நாடு, கங்கபாடி, நுளம்பாடி, வைதும்பர் நாடு, சிட்டுவி நாடு, அபருபாணம்பாடி, பொன்னி நதி உற்பத்தியாகும் குடகு நாடு ஆகிய இத்தனை நாடுகளும் சோழ சாம்ராஜ் ஜியத்திற்கு அடங்கி கப்பம் செலுத்தி வருகின்றன. இவ்வளவு நாடுகளிலும் எம் சோழ நாட்டுப் புலிக்கொடி பறக்கிறது. அத்தனை பெரும் ராமராஜ்ஜியம் எம் அரசு! ஆனால் மகாராஜாவிற்கு சுயமாக சிந்திக்கும் புத்தி இழந்து இன்று அதற்கு ஆலோசனை கேட்டாலும் கண்டராதித்த தேவர் மனைவி பெரிய பிராட்டியான செம்பியன் மாதேவியைக் கேளுங்கள், இளைய பிராட்டி குந்தவையிடம் கேளுங்கள் என்று மறுமொழி கூறுகின்றார். முக்கியமான விடயங்களில் கூட எங்கள் ஆலோசனையை கேட்பது இல்லை. இராஜகாரியங்களில் பெண்கள் தலையிட்டதாக இதுவரையில்லை. இது எத்தனை அவமானம்? என்று குற்றம் சுமத்தப்பட்டது. பெண்ணரசுக்குப் பரிகாரம் என்ன? என்றார். மேலும் இளவரசர் ஆதித்தகரிகாலர் கங்கம்பாடி நூளம் பாடி, குடகு முதலிய நாடுகளை வெற்றி கொண்டு, கைப்பற்றிய பொருட்களில் எதுவும் தலை நகரிலுள்ள பொக்கிஷ சாலைக்கு தரவில்லை. மாறாக தனக்கென காஞ்சியில் பொன் மாளிகை கட்டுகிறார். இதைவிட ஈழத்தில் போர் நடத்த சென்றிருக்கும் இளரசர் அருள்மொழிவர்மனின் (இவர் சுந்தர சோழனின் இரண்டாவது மகன் பொன்னியின் செல்னவன் என அழைக்கப்படுபவர். பிற்காலத்தில் இராஜ ராஜ சோழன் ஆனான்.) யுத்ததர்மம் என்னவெனப் பார்ப்போம்.





எம்முன்னோர்கள் கடைப்பிடித்த யுத்த தர்மம் நம் நாட்டுப் படைகள் வேறு நாடுகளில் மீது படையெடுத்துச் சென்றால், நம் படைகளுக்கு வேண்டிய உணவுகளை அந்த நாட்டிலேயே சம்பாதித்துக் கொடுக்க வேண்டும். அந்த நாடுகளில் சம்பாதிக்கும் பொருட்களைக் கொண்டே வீரர்களுக்கு ஊதியம் கொடுக்க வேண்டும். மிகுதிப் பொருட்களை அரசாங்க பொக்கிஷத்திற்கு அனுப்ப வேண்டும். ஆனால் அருள்மொழிவர்மனின் யுத்த தர்மம் என்னவென்றுகேட்கிறீர்களா? போர் வீரர்களுக்கான உணவை இங்கிருந்து கப்பல்களில் அனுப்பி வைக்க வேண்டுமாம். ஓரு வருடத்தில் பத்து தடவை பல கப்பல்களில் இதுவரை அனுப்பி வைத்து விட்டேன். இதற்கு அவர் கூறும் காரணத்தையும் கேட்டு வைத்துக் கொள்ளுங்கள். ஈழத்து அரச குலத்தாரோடு சண்டையே தவிர ஈழநாட்டு மக்களிடம் சண்டையில்லை மக்கள் எந்த விதத்திலும் கஸ்டப்படக்கூடாது. வீரர்களிற்கு வேண்டிய உணவை இங்கு எடுத்துக் கொண்டால் குடிமக்கள் கஸ்ரப்படுவார்கள். நாம் போராடி வெல்லும் வரை நீங்கள் இங்கிருந்து அனுப்ப வேண்டுமாம். என்று பழுவேட்டரையர் நடப்பை விளக்கினார். அதற்கு சம்புவரையர், 'எங்களின் தைரியத்தைக் கைவிடக் கூடாது. ஆயிரமாயிரம் வீரர்கள் நாலு தலைமுறையாக இரத்தம் சிந்தி ஸ்தாபித்த சோழ சாம்ராஜ்ஜியம் சின்னாபின்னமாகக் கூடாது' என்றார். அதே சபையிலிருந்த வணங்காமுடியார் 'நீர் புது மணம் புரிந்து கொண்ட இளைய ராணியை போகும் இடமெல்லாம் பல்லக்கில் அழைத்து செல்கிறீர் பெண்கள் ராஜகாரியங்களில் தலையிடுவது நல்லதல்ல என்று நீங்கள் குற்றம் சுமத்துகிறீர் அப்பொழுது ஏன் உம் புது மனைவியை ராஜ காரியங்கள் பற்றிய ஆலோசனைகளுக்கு அழைத்து வந்தீர்? என்றான்.

அந்தப் புரத்தில் இருக்க வேண்டிய பல்லக்கு ஏன் இங்கு இருக்கிறது என்றார். அதற்கு பழுவேட்டரையர், 'இது நியாயமான கேள்வி. பதில் சொல்வது என் கடமை அதற்கு முதல் யார் அடுத்து அரசாட்சிக்குரியவர் என்பதை தீர்மானித்த பின் இதற்கு பதில் சொல்லுகிறேன்' என்றான். 'சோழ அரசன் கண்டராதித்த தேவர் இருபது ஆண்டுகளுக்கு முன்னர் காலமானார். அப்பொழுது அவர் மகன் மதுராந்தக தேவர் அரியணை ஏற முடியாத ஒரு வயதுக் குழந்தை அதனால் அவர் தம்பி அரிஞ்சய தேவர் பட்டத்திற்கு வந்தார். இவர் ஓராண்டில் அமரத்துவமெய்தினார். அவ்வேளை இவர் மூத்த புதல்வன் சுந்தர சோழன் இருபது வயது நிரம்பிய வாலிபன். அதனால் ராஜ்ஜியத்தின் பிரமுககர்கள் யாவரும் ஆலோசித்து சுந்தர சோழரை அரியணை ஏற்றினர். இப்பொழுது மதுராந்தகன் பருவம் வந்து ராஜ்ஜியம் ஆளும் தகுதி கொண்டுள்ளார். இந்நிலையில் யார் அடுத்த அரியணை ஏறுவது நியாயம்?' என்று கூடியிருந்தோரைப் பார்த்துக் கேட்டார். யாவருமே மதுராந்தகருக்கே பட்டம் என அபிப்பிராயம் சொன்னார்கள்.

அதற்கு பழுவேட்டரையர் மேலும் கூறினார், 'இளவரசர் மதுராந்தகரின் ராஜ்ஜியம் ஆளும் கருத்துப் பற்றி நான் உங்களிற்குச் சொல்லுகிறேன். மதுராந்தகர் உலகியல் வாழ்வை வெறுத்து சிவபக்தியில் முழுமையாக ஈடுபட்டுள்ளார் அவரிற்கு இராஜ்ஜியம் ஆளும் விருப்பமும் இல்லை. இவர் அன்னை செம்பியன் மாதேவி கண்டராதித்ததேவர் மனைவி, தன் மகன் பட்டத்திற்கு வருவதை முற்றிலும் விரும்பவில்லை. இதனால் மதுராந்தகரும் அதை விரும்பவில்லை இப்பொழுது

(தொடர்ச்சி 28ம் பக்கம்)

SHIVA SAI DURGA ASTROLOGICAL CENTER
Pandit: Kumara swamy


Most Powerful Spiritual Healer
We can Handle any Problem
25 வருடங்கள் அனுபவமுள்ள மற்றும் 8 தலைமுறைகளாக ஜோதிடம் பார்பவர்
உலகத்தில் சுரிய சந்திர நவக்கிரக மகிமையினாலே
இன்ப துன்பங்கள், நன்மை தீமை பற்றி விபரம் குறுவார்
Remove Black Magic,Witchcraft, Obeya,Evil Spirits
Bad Luck & Jadoo & Give 100%,Life Long Protection
கை பார்த்து. முகம் பார்த்து அருள்வாக்கு சொல்லப்படும். Photo பார்த்து
ஜாதகம் பார்த்து, குறிப்புப் பார்த்து ஆரோக்கியம், மனநிம்மதி, லக்சுமி கடாட்சம் கிடைக்கவும்,
இராசி, நட்சத்திரம் பார்த்து நடந்தது, நடப்பது, நடக்கப்போவது பற்றிச் சொல்லப்படும்.
செய்வினை கோளாறு, பேய்பிசாசு தொந்தரவா, எதிரிகள் தொந்தரவா, கண் திருஸ்டி,
நாகதோசம், காதல் விவகாரங்கள், தொழில், மனை அபிவிருத்தி, வாகனப் பொருத்தம்,
காதலர் ஒற்றுமை போன்றவற்றிற்கும், வேறு பிரச்சனைகளுக்கும் உடனடியாக
தீர்வு சொல்லப்படும்
எந்தப் பிரச்னையாக இருந்தாலும் 9 நாட்களில் தீர்வு காண்பார்
Are you depressed & Lonely? All Religions welcome. 100% Guaranteed Result
Call for Appointments/Walk ins Welcomed 647-766-9775
2607 Eglinton Ave E Scarborough, M1K 2S2,
UPSTAIRS ERRA MARKET, EGLINTON & BRIMLEY

# இவ்வார ராசிபலன்

**26-03-2021 வெள்ளி தொடக்கம் 01-04-2021 வியாழன் வரையும்**




**மேஷம்:** பொல்லாத காலங்கள் சொல்லாமல் விலகக்கூடிய அற்புதமான வாரம். இனிப்பான செய்திகள் வரும். பழிச் சொல்லிலிருந்து விடுபடுவீர்கள். சொத்துப் பிரச்சனைகள் தீரும். பணியாட்களால் தொல்லை மாறும். கல்வியில் மந்த நிலை மாறும். ஜவுளித் தொழில் உயர்வு தரும். கலைத் தொழில் திருப்பம் வரும். அலுவலகங்களில் பாராட்டு குவியும். மனைவி-யின் அன்பு அதிகரிக்கும். மற்றவரின் தொல்லைக் குறையும். பிரித்து குடும்பம் ஒன்று சேரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: பிரளய தேவி, அதிர்ஷ்ட எண்: 1,9,5,2
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,U




**ரிஷபம்:** ஆதாயமும், ஆதாரமும், அதிகாரமும் சேரக்கூடிய அற்புதமான வாரம். சுய வீடு வாங்க முயற்சி செய்யலாம். மங்களமான நாள். அரசு வாய்ப்பு தடைப்படும். கணவன், மனைவி சச்சரவு ஏற்படும். கலைத்துறையில் முன்னேற்றம் கொடுக்கும். பயணம் அனுகூலம் தரும். திருமண முயற்சி வெற்றி தரும். பணத்தட்டுப்பாடு ஏற்படும். தோற்றப் பொலிவு கூடும். நல்லவர் நட்பு கிட்டும். எதிரிகள் பலம் குறையும்.
வழிபடவேண்டிய தெய்வம்: வேலவப்பெருமாள், அதிர்ஷ்ட எண்: 9,4,3,1
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,Z




**மிதுனம்:** ஆலய தரிசனத்தால் ஆத்மபலம் பெறக்கூடிய அற்புதமான வாரம். காரியத்தடை ஏற்படும். உறவினர்களால் நன்மை உண்டு. எதிரிகளால் தொல்லை உண்டாகும். பழைய கடன் வசூலாகும். வாகனச் செலவு ஏற்படும். வெளிநாட்டு தொடர்பு ஏற்படும். திறமையில் பெருமை சேரும். பேச்சில் இனிமை கூடும். கலைத் தொழிலில் நிலை உயரும். சான்றோர்களின் சந்திப்பு கிட்டும். உதவிகள் கிடைக்கும் நாள். மனைவியின் பிரார்த்தனை மாற்றம் தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: நவ தேவதை, அதிர்ஷ்ட எண்: 6,9,2,3
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்'ட எழுத்துக்கள்: PU




**கடகம்:** மேலான ஆசியும், மேதைகளின் நட்பும் கிடைக்கக்கூடிய வாரம். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. பயணம் வெற்றி தரும். பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். பதவி உயர்வு கிட்டும். மனக்கசப்பு நீங்கும். அரசு வழியில் ஆதாயம் கிடைக்கும். கணி-னி துறையில் ஊதிய உயர்வு கிட்டும். திறமைகள் வெளிப்படும் நாள். ஆரோக்கியம் சீராகும். சூழ்ச்சிகள் இருந்து விடுபடுவீர்கள். மங்கள நிகழ்ச்சிகளில் பங்கு பெறுவீர்கள்.
வழிபடவேண்டிய தெய்வம்: பஞ்சபூதக்கடவுள், அதிர்ஷ்ட எண்: 6,0,2,3
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,N




**சிம்மம்:** இனிய கனாக் காணவும், இன்ப உலா செல்லவும் இனிமையான வாரம். காரியம் கைகூடும். கலைத்துறையில் ஆர்வம் ஏற்படும். வில்லங்கம் விலகும். போட்டிகள் உருவாகி மறையும். வியாபாரத்தில் கவனம் தேவை. வீடு வாங்கும் யோ-கம் உணடு. வயிறு உபாதைகள் தோன்றி மறையும். வழக்குகள் சாதகமாகும். வரவு திருப்தி தரும். குடும்ப கௌரவம் உயரும். குதூகலமான எண்ணம் உருவாகும். மின்சாரத்தில் கவனம் தேவை.
வழிபடவேண்டிய தெய்வம்: சுக்கிர பகவான், அதிர்ஷ்ட எண்: 4,6,1,5
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,P




**கன்னி:** வீணான அலைச்சலும், வேதனைக் காலங்களும் விலகக்கூடிய அற்புதமான வாரம். ஆடம்பர செலவு அதிகரிக்கும். மாற்று இன நட்பு பெருகும். வயிற்று உபாதை வந்து சேரும். வங்கி சேமிப்பு உயரும். தொல்லை தந்தவர் விலகிவிடுவர். தொழில் வளர்ச்சி மேன்மை தரும். ஆனந்தம் குடிக்கொள்ளும். அணிகலன் ஆர்வம் அதிகரிக்கும்.பேச்சில் கணிவு தேவை. களவுப் போன பொருள் திரும்ப கிடைக்கும்.
வழிபடவேண்டிய தெய்வம்: தேவிகாளிகாம்பாள், அதிர்ஷ்ட எண்: 3,2,7,1
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,V




**துலாம்:** வாடும் நிலை விலகி வீடு, நிலமும் வாங்கக் கூடிய நல்ல வாரம். சிக்கனத்தை கையாள வேண்டும். ஞாபகத் திறன் அதிகரிக்கும். சுபகாரியம் கைகூடும். உடல் நலனில் அக்கறை தேவை. குடும்பத்தில் அமைதி நிலவும். நண்பர்கள் உதவி கிட்டும். புதிய முயற்சி கைகூடும். நீண்ட நாளைய நோய் விலகும். பண-வரவு திருப்தி தரும். மன மகிழ்ச்சி அதிகரிக்கும். இல்லத்தில் அமைதி கூடும். சுமூகமான சூழ்நிலை பெருகும்.
வழிபடவேண்டிய தெய்வம்: ஏழுமலை ஆண்டவர், அதிர்ஷ்ட எண்: 3,4,6,8
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள். அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,P




**விருச்சிகம்:** அனைத்து விதத்திலும் ஆதாயம் கிடைக்கக்கூடிய அற்புதமான வாரம். விரக்திகள் மறையும். வாகனத்தில் செலவு ஏற்படும். கலைத்துறையில் கௌரவம் கூடும். நீண்ட நாள் முயற்சி நிறைவேறும். முன்னோர்கள் ஆசிர்வாதம் கிடைக்கும். உடல்நலம் சீராகும். உற்சாகம் மேலோங்கும். உறவுகளால் நன்மை ஏற்படும். பயணம் வெற்றிதரும். நீண்டநாள் கனவு நிறைவேறும். பிள்ளைகள் வழியில் கவனம் தேவை. திண்டாட்டங்கள் மறை-றயும். வேதனைகள் சாதனையாகும். சொந்த முயற்சிகள் பலன் கொடுக்கும். உத்தியோக உயர்வு கிட்டும்.
வழிபடவேண்டிய தெய்வம்: திருமுருகக் கடவுள், அதிர்ஷ்ட எண்: 3,8,4,9
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,H





**தனுசு:** மனைவி மக்களால் மகிழ்ச்சி ததும்பக் கூடிய மகத்தான வாரம். இல்லம் தேடி வாய்ப்பு வரும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். நம்பிக்கை துளிர்விடும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். வியாபாரிகளுக்கு லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். உறவுக-ளால் செலவு அதிகரிக்கும். நண்பர்களிடம் எச்சரிக்கை தேவை. அயல்நாட்டுப் பயணம் உண்டு. பொருளாதாரம் மேம்படும். துணிவோடு செயல்படுவீர்கள்.
வழிபடவேண்டிய தெய்வம்: சயன கணபதி, அதிர்ஷ்ட எண்: 5,9,8,2
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,K


ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377




**மகரம்:** தொழில் வகையில் மேன்மையும், தொகை தொ-கயாய் லாபமும் சேரக்கூடிய வாரம். வீடு, மனை யோ-கம் உண்டு. விவசாயம் லாபம் தரும். வியாபாரம் மந்தமாக இருக்கும். எதிர்ப்புகள் அதிகமாகும். சச்சரவுகள் சமாதானத்தில் முடியும். சேமிப்பு அதிகரிக்கும். ஆடம்பர பொருள் சேரும். பண வரவு மேலோங்கும். பாக்கிகள் வசூலாகும். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. உழைப்பு கடுமையாக இருக்கும். மனித நேயம் மிகுதியாகும். நீண்ட தூரப் பயணம் லாபம் தரும். பிள்ளைகள் வழியில் சந்தோ'ம் கூடும். குடும்பத்தில் குழப்பம் தீரும். சுபச் செய்தி தேடி வரும். ஆபரணப் பொருள் களவு போகும்.
வழிபடவேண்டிய தெய்வம்: மங்கள மாரியம்மன், அதிர்ஷ்ட எண்: 7,6,4,0
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: A,N




**கும்பம்:** வீரியமான செயல்பாடுகளால் விசேஷமான பலன்கள் கிடைக்கக்கூடிய வாரம். கன்னிப் பெண்களின் உற்சாகம் அதிகரிக்கும். உங்களால் மற்றவர்களுக்கு அதிகம் நன்மைகள் கிடைக்கும். திடீர் செலவுகளால் கையிருப்பு குறையும். உறவினர் வருகை உண்டு. பெற்றோரின் ஆசி கிடைக்கும். கர்ம வினைகள் அகலும். பணம் புரளும். எதிலும் வெற்றி கிட்டும். விரக்திகள் மறையும். வீடு, மனை யோகம் உண்டு. நிதானத்தோடு செயல்பட வேண்டும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். உடல் பொலிவு கூடும்.
வழிபடவேண்டிய தெய்வம்: சுவாமி தர்மசாஸ்தா, அதிர்ஷ்ட எண்: 2,1,0,0
அதிர்ஷ்ட நிறம்: பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,R




**மீனம்:** நாடிய பொருளும், தேடிய வாய்ப்பும் கிடைக்கக்கூடிய அற்புதமான வாரம். கடன் உபத்திரவம் குறையும். குடும்ப கௌ-ரவம் ஓங்கும். மற்றவர் தொல்லை நீங்கும். வெற்றி நிலை தொடரும். நடவடிக்கையில் மாற்றம் வரும். எதிர்பாராத லாபம் சேரும். எண்ணிய காரியம் கூடும். இல்லத்தில் நல்லவை நடக்கும். தோற்றப் பொலிவு கூடும். வேற்று மதத்தினரால் உதவி சேரும். பழையக் கடன் தீரும். புதிய வாய்ப்பு கூடும். தெய்வப் பணியில் ஈடுபடுவீர்கள். மாற்று எண்ணம் உதயமாகும். பெண்களின் திறமை பெருமை தரும். கற்பனை ஆற்றல் பெருகும். வெளிநாட்டு வாய்ப்பு தேடி வரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: மீனாட்சிஅம்மன், அதிர்ஷ்ட எண்: 5,3,0,1
அதிர்ஷ்ட நிறம்: அரக்கு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,W

*(27ம் பக்கத் தொடர்ச்சி)*

## பொன்னியின் செல்வன்

அவர் மனம் முற்றிலும் மாறிவிட்டது. சோழ ராஜ்ஜியம் தனக்கே உரியது அதை ஆள்வது தனது மனதின் எண்ணம் என்கிறார். இதற்கு சாட்சியும் நான் பகிர்கிறேன்' என்று அங்கு வைக்கப்பட்டிருந்த மூடு பல்லக்கருகே சென்று, 'இளவரசே வெளியே எழுந்தருள வேண்டும்! இந்த வீராதி வீரர்கள் உடல், பொருள் ஆவி உங்களிற்கு அளிக்க சித்தமாய் இருக்கிறார்கள் தங்கள் முக தரிசனம் தந்தருள வேண்டும்!' என்று தாழ்மையுடன் கேட்டுக் கொண்டார்.

பழுவேட்டரையர். கண்டராதித்த தேவரின் புதல்வரான இளவரசர் மதுராந்தகர் மூடுபல்லக்கில் இருந்து வெளியே வந்தார். அப்பொழுது மேல் மாடத்தில் தூண் மறைவில் ஒளித்திருந்த வந்தியத்தேவன் மெல்ல எட்டிப் பார்த்தான். தான் முதல் முறை கண்ட பொன் வண்ணமான கரம், அதில் வளையல் போல் கங்கணம் (அரச குமாரர்கள் அணிவது) மன்மதன் ஒத்த ஓர் அழகிய உருவம் எல்லோர் முன் புன்னகை பூத்து நின்றதைக் கண்டான். அப்பொழுது 'மூடு பல்லக்கில் இருந்தபடியால் தான் தவறாக பெண் என்று எண்ணிவிட்டேன். இப்பொழுது தான் உண்மை புரிகி-றது' என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டு என்ன நடக்கிறது என்று மேலும் பார்த்துக் கொண்டிருந்தான். அங்கிருந்த யாவரும் எழுந்து நின்று வாளையும் வேலையும் உயர்த்திப் பிடித்தபடி 'மதுராந்தகதேவர் வாழ்க, பட்டத்து இளவரசர் வாழ்க, வெற்றி வேல் வீரவேல்' என்று கோசமிட்டனர்.

இதைக் கேட்ட வந்தியத்தேவன், 'தமிழகத்தில் பழைமையான மரபுப்படி, குல முறைப்படி, மனு நீதிப்படி, மதுராந்தகதேவர் பதவிக்கு வரவேண்டும். ஆனால் மூடு பல்லக்கில் ஒழிந்து வரும் இவரை பெரும் ராஜ்ஜியமான சோழ நாட்டிற்கு அரசர் ஆக்குவது முறையா?' என்ற ேள்விக்கணையுடன் தன் படுக்கைக்கு விரைந்தான். சோழ ராஜ்ஜியத்திற்கும், சுந்தர சோழ சக்கரவர்த்தியின் குடும்பத்தவருக்கும் நடத்க இருக்கும் சூழ்ச்சிகளை எல்லாம் தன்காதுகளில் வாங்கிக் கொண்டதால் அவன் மனநிலை குழப்பம் அடைந்திருந்தது. அவன் கண்கள் மூடியபடியிருந்தாலும், உடல் பிரயாணத்தால் களைப்புற்றிருந்தாலும், குழப்பமான மன நிலையுடன் அவனால் தூங்க முடியவில்லை. வந்தியத்தேவன் பாலாற்றுக்கருகே வடக்கேயுள்ள வரண்ட பிரதேசங்களிலே அவன் வாழ் நாளைக் கழித்தவன். இதன் காரணமாக நீந்தக் கற்றுக் கொள்ளவில்லை. ஓரு சமயம் வட பெண்ணைக் கரையில் எல்லைக் காவல் புரிந்த போது ஆற்றில் குளிக்கச் சென்றான். அப்பொழுது ஒரு நீர் சுழலில் அகப்பட்டு தத்தளித்து தன் பலம் யாவும் இழந்தவனாக சாவை தழுவும் தருணத்தில், தெய்வாதீனமாக ஒரு வெள்ளம் அவனை கரை ஒதுக்கியது. அந்த நிகழ்வின் பின் தண்ணீர் என்றாலே அவனுக்கு பெரும் பயம். அன்று அந்த நிகழ்வு வந்து அவனைத் துன்புறுத்தியது. 'அத்தனை கொடுமையான அந்த நீர்ச் சுழியில் தப்பினேன். எப்படி இந்த சதிச் சுழலில் இருந்து தப்புவேன்?' என்று எண்ணிக் கொண்டேயிருந்தான். இளவரசர் ஆதித்த கரிகாலன் ஒரு மகாவீரர் போர்க் கலையில் நிபுணர். ராஜதந்திரத்தில் சாணக்கியர். தம்முடைய அறிவாற்றல்களையும், சோழ நாட்டுப் படைகளின் போர்த்திறனையும் பூரணமாகப் பயன்படுத்தி இரட்டை மண்டலத்துக் கிருஷ்ண மன்னனின் ஆதிக்கத்தை தொண்டை மண்டலத்தில் இருந்து அடியோடு தொலைத்து, நாட்டின் வெளிப் பகைவர்களை ஒழித்தார். இப்பொழுது உட்பகை உதயமாகிறது. இதன் விளைவு தான் என்ன? ஆதித்த கரிகாலனோடு போட்டி போட யாராலும் முடியாதே! இந்தப் போட்டியில் யார் வெற்றி பெறுவார் என் கனவு என்ன? ஆதித்தகரிகாலருடன் இணைந்து அவருக்கு உகந்தபடி நடந்துசோழப் பேரரசில் பெரிய பதவிகளைப் பெற்று, வாண குலத்தின் பூர்வீக ராஜ்ஜியத்தை மீண்டும் பெற்று விட வேண்டும் என்பதே.

*தொடரும்...*

---

Jenita.Jaffna@gmail.com
**தொகுப்பு, எழுத்தாக்கம்: மேரி ஜெனிரா செபஸ்ரியாம்பிள்ளை மாதினி நிமலன்**

# கனடாவின் 'நிவாரணம்' புகழ் செந்தில் குமரன் தாயகத்தில் இருதய நோயாளர்களுக்கு சிகிச்சை மேற்கொள்ள வழி செய்து அவர்களது உயிர்காக்கும் ஒரு மாமனிதர்

கனடாவைச் சேர்ந்த "நிவாரணம்" புகழ் செந்தில் குமரன் அவர்களது அளப்பெரிய சேவையின் மூலமாக எமது தாயகத்தில், வாழ்வாதாரங்களையும் இழந்து இருதய நோயினால் உயிருக்கும் போராடும் எம்மக்களில் பலருக்கு, இருதய சிகிச்சை மேற்கொள்ள வழி செய்வதன் மூலம் உயிர்காக்கும் ஒரு மா மனிதராகத் திகழ்கிறார் என்பதில் ஐயமில்லை.

இதனை Akathiyan Tholkapiyan என்ற ஒரு முகப்புத்தக கவிஞர் மேற்கண்டவாறு எழுதி அவரது மகத்தான சேவையினை செய்வதற்கு ஆர்வமூட்டச்செய்கிறார்.

"இவ்வாறான ஆத்மார்த்த விடயங்களுக்கு லைக்குகளோ பின்னூட்டங்களோ இட்டு ஊக்கமளிப்போர் தொகை குதிரைக் கொம்பாக இருப்பது கவலைக்குரிய ஒரு விடயமாக இருபினும், இச்செய்தி மனித நேயம் சார்ந்ததாக இருப்பதனால் அவற்றையும் கடந்து மக்கள் கவனத்திற்கு எடுத்து வரப்படுகின்றது என்பதனை முதலில் இங்கு தெரிவிக்க வேண்டியது எமது கடமையாகும்.

கனடாவில் நிதிசேகரிக்கும் முயற்சியோடு ஆரம்பிக்கப்பெற்ற முழு நீள இசைநிகழ்ச்சியான, நிவாரணம் புகழ் மனிதநேயச் சிகரம் திரு. செந்தில்குமரன் அவர்களின் இந்தச் சேவையானது.

நாம் அறிந்த அளவிற்கு, இரண்டு தசாப்த காலத்திற்கும் மேலாக பொதுப் பணிகளில் அதுவும் "உயிருக்காகப் போராடும் பொருளாத வசதி சிறிதளவும் அற்ற எமது தாயக மக்களுக்கு உயிர் காக்கும் வகையில் திட்டமிடப்படுகின்றன. நோய்களால் பாதிக்கப்பெற்ற மக்களுக்கு மறு பிறவி தருவதற்கான மனித நேயப்பணிகளில்" தனது குடும்ப வாழ்வையும் கடந்து தன்னை ஆழமாக ஈடுபடுத்தியவண்ணம் பூமிப் பரப்பெங்கனும் ஓடோடி தனது




பல் கலை வித்துவங்களின் மூலம் அயராது உழைத்து பல உயிர்களைக் காத்து புது வாழ்வு தரும் பணிகளில் ஈடுபட்டு வரும் மனித நேய இதயம் படைத்த எமது பெரு மதிப்பிற்குரிய திரு. செந்தில் குமரன் அவர்களுக்கு மனித நேய வாஞ்சை கொண்ட ஈழத்தமிழினத்தின் சார்பாக தலை சாய்த்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்வது பொருத்தமாக இருக்கும் என்று நம்புகின்றோம்.

இவரது சேவைகள் பற்றி அறியவும், இன்னும் பல உயிர்களை காக்க விரும்பியவர்கள் கீழ்கண்ட இணைய இணைப்பை தயவு செய்து கிளிக் செய்யவும் https://www.nivaranam.com/

மேலும், ஒரு பொது மக்கள் செயற் பட்டாளர் என்பவர் தனி நபரோ அன்றி நிறுவனங்களோ அவைதம் நம்பகத் தன்மையை உளத் தூய்மையுடன் பேணுதல் ஒன்றே அந்த செயற்பாட்டுத் தளத்தின் ஆணிவேராக ஆன்மாவாக நின்று மனிதத்தை மலர்விக்கும் பெரு விருட்சமாக செழித்தோங்கி பயன் தரும் வல்லமையினைப் பெற வல்லது என்பது அறிவு.

அந்த வகையில், திரு. செந்தில் குமரன் அவர்கள் மேற் கொள்ளும் உயிர் காப்பு செயற்பாடுகள் தொடர்பான, நிதி வழங்குவோர் தொடக்கம், அவரது மருத்துவர் குழாம், நிதி பெறுதல் தொடர்பாக தொண்டர்களாக சேர்ந்தியங்கும் பாடகர் மற்றும் இசைக் கலைஞர்கள், நிதி பெறுதலுக்காக தொழில் நுட்ப மற்றும் மேலும் பல துறை சார் வல்லுனர்களின் ஒத்துழைப்பு வரை, அனைத்து விடயங்களும், பங்களிப்புச் செய்தோர் பெயர்கள் தொலை பேசி எண்கள் மற்றும் வரவு செலவு அடங்கலான அத்தனை தரவுகளும் மிகத் தெளிவாகவும் நுணுக்கமாகவும் வெளிப்டையாகவும் பட்டியலிடப்பட்டு மக்கள் பார்வைக்காக பொதுத் தளங்களில் பதிவேற்றி தனது அதி உச்ச உண்மைத் தன்மையை ஏனையோருக்கும் ஒரு முன்னுதாரணமாக வெளிப்படுத்தும் செந்தில் குமரன் அவர்களது சேவை மதிக்கப்பெற வேண்டியதாகும்.




தற்போதைய கோவிட்- 19 தொற்று முடக்க நிலையிலும் கூட உயிர் காப்பு பணிகளை நிறுத்தி வைத்து ஒதுங்கி விடாது வழமையான தனது செயற்பாடுகளை சற்றும் பிசகாது இணைய வழி ஊடான உள்ளரங்க கலை நிகழ்ச்சிகள் மூலம் தளர்வின்றி பல்துறையினரையும் ஒன்று திரட்டி உழைத்து அவசர சிகிச்சை தேவையானோர்க்கான சத்திர சிகிச்சைகளுக்கு உதவிக்கரமாக இருந்து அக்குடும்பங்களுக்கு நல்வாழ்வு அளித்திருக்கின்றார் என்பதை நாம் ஒருகணம் எண்ணி. பார்க்க வேண்டிய எம் ஒவ்வொருவரின் கடமையாகும்.

அத்த வகையில் இவர் மட்டுமல்லாது இவர் போலவே வெளிப்படைத் தன்மையுடன் துன்பத்தில் ஆழ்ந்தோரைத் தூக்கி வாழ்வு தரும் நல்லெண்ணம் படைத்த செயற்பாட்டாளர் எவராயினும் அடையாளம் கண்டு மதிப்பளிக்கப் படல் வேண்டும் என்பது மனித உணர்வு படைத்த அனைவரது கடனாகும்.

ஏதோ நமக்குக் கிடைத்த வாழ்வை நாம் மட்டும் நமக்கென்றே இன்புற்று வாழ்ந்து விட்டுப் போகலாமே என்றில்லாமல், கதியற்றுக் கலங்குவோரையாம் கை கொடுத்து கரை சேர்க்க விளையும் இவ்வாறான மனிதத் தொண்டர்கள் எவராயினும் ஊக்குவிக்கப் படல் வேண்டும் என்பதனை இத்தால் பணிவன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

*வாழ்க செந்தில் குமரன் அவர்கள்,*
*வளர்க அவர் தம் மனித நேயப் பணிகள்.*



## கிழக்கிலங்கையின் புகழ்பெற்ற சுற்றுலா மையமான அறுகம்பையில் அமைந்துள்ள உல்லாசப் பயண விடுதி உடனடியாக விற்பனைக்கு உள்ளது






இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் வெளிநாட்டவர்களுக்கு நன்கு பிடித்தமான சுற்றுலா மையம் என்று அறியப்பெற்ற அறுகம்பையில் அமைந்துள்ள உல்லாசப் பயண விடுதி உடனடியாக விற்பனைக்கு உள்ளது.


பொத்துவிலுக்கு அண்மையில் கடற்கரை மற்றும் வெளிநாட்டவர் விரும்பும் இயற்கை வளம் ஆகியவை நிறைந்த அறுகம்பையில் நல்லதோர் முதலீடு.

40 பேர்ச் காணியில் 8 பெரிய அறைகள் கொண்ட இந்த உல்லாசப் பயணவிடுதியில் விசாலமான உணவகமும் உள்ளது. வெளிநாட்டவர்களைக் கவர்ந்த இந்த விடுதியின் விலை இலங்கைப் பணத்தில் 38 மில்லியன் ரூபாய்கள். வெளிநாட்டில் வாழும் இலங்கைத் தமிழர்கள் விரும்பினால், பங்குதாரராகவும் இணைந்து கொள்ளலாம். எதையும் பேசித் தீர்ப்பதற்கு உரிமையாளர் விரும்புகின்றார்.

ஆர்வமுள்ளவர்கள் இலங்கை வற்ஸ் அப் இலக்கம் 94777374433 அல்லது கனடா இலக்கம் (416) 587-0552 ஆகிய இலக்கங்களை அழைக்கலாம்.

ஜீவன் முக்தி (பகுதி) 110

## வளரும் சூழ்நிலையே நம் வாழ்வை வடிவமைக்கும்



சிறுவயதிலிருந்தே என்ன வார்த்தை உங்களுக்குள்ளே போகிறதோ, எந்தச் சூழ்நிலை உங்களுக்குள்ளே பதிவாகிறதோ, எந்தச் சூழ்நிலையில் வளர்கிறீர்களோ, எந்த விஷயங்களை ஆழமாக ஏற்றக்கொள்ள விரும்புகிறீர்களோ, அதுதான் உங்கள் வாழ்க்கையையே வடிவமைக்கிறது.

உடல்ரீதியான ஆரோக்கியத்திற்கோ, மனரீதியான தெளிவிற்கோ, உணர்வு ரீதியான, ஆன்ம அனுபவத்திற்கோ உதவி செய்கிறோம் என்றால், அதற்குக் காரணம் அண்ணாமலையாருடைய ஆலயம், என்னுடைய உணர்வில் ஏற்படுத்திய ஆழமான தாக்கம்...

சிறிய வயதில் பிறந்து, வளர்ந்த சூழ்நிலை என் வாழ்வை வடிவமைப்பதில் மிகப் பெரிய பங்களித்தது.

அதனால்தான் சொல்கிறேன், என்னுடைய வாழ்வை வடிவமைத்த இடத்தை நினைத்து நன்றியுணர்வுடன் சொல்கிறேன்...

வயதும் சூழ்நிலையும் சாதாரணமானது என்று நினைக்காதீர்கள்.

எந்த மனிதரையும் மகானாக மாற்றும் சூழ்நிலையையும், உத்வேகத்தையும் தரும் சக்தி, வாழும் சூழ்நிலைக்கு உண்டு.

----------

அன்று பெங்களூரில் தியான சத்சங்கம். நாங்கள் சென்ற வாகனம் கோளாறாகிவிட்டதால் ஆஸ்ரமத்திற்கு திரும்பி வர, பக்தர் ஒருவர் தன்னுடைய காண்டஸா காரில் வரும்படி கேட்டுக் கொண்டார்.

எனவே கண்டஸாகாரில் ஏறி உட்கார்ந்தபடி அங்கிருந்த பக்தர்களிடமிருந்து விடை பெற்றுக்கொண்டிருந்தோம். காரின் பக்கவாட்டில் இருந்து கையை எடுப்பதற்குள் காரின் கதவு சாத்தப்பட்டது. கதவிடுக்கில் சிக்கிய கட்டைவிரல் 'சதக்' என நசுங்க, வலியும், எரிச்சலும் அந்த இடத்தில் அதிகரித்துக் கோண்டே போனது. கொஞ்ச நேரத்திலேயே அந்த எரிச்சலும், வலியும் மறைந்து போனது.. அடுத்தடுத்த வேலைகளைப் பாரக்க ஆரம்பித்து விட்டோம். என்று ஆஸ்ரம பிரம்மச்சாரிகளிடம் பேசிக்கொண்டிருக்கும்போது சொன்னோம். வலியை கூட பரவசமாக்கும் சக்தி விழிப்புணர்விற்கு உண்டு.

*பரமஹம்ஸ நித்தியானந்தர் சுவாமிகள் வழங்கிய அமுத மொழிகள்*

மேலதிக தொடர்புகளுக்கு: (416) 439-2080


# MONEY PROBLEMS?
## பணச்சிக்கலா?

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

### நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

### நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.

தமிழில் தொடர்புகளுக்கு:

**வசந்தி சிவராஜா - 416-616-3077**




### எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

**416-671-0577**

4 இடங்களில் சேவை

ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா

வார இறுதி - இரவு நேரங்களிலம் சேவை உண்டு

**MISSISSAUGA OFFICE**
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

**SCAROBOROUGH OFFICE**
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

**HEAD OFFICE - TORONTO**
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

**RICHMONDHILL OFFICE**
10255 Yonge St. Suite # 204
Richmondhill

**NORTH YORK OFFICE**
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**
- Extended Health Care
- Private – Work Insurance
- MVA – WSIB
- ODSP – Social Service

**LIST OF SERVICES**
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle – Knee – Back Braces

**ENGLISH & TAMIL – SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**




உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7

**416.298.FOOT (3668)**



# Carefirst Family Health Team




## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

ACCREDITED WITH COMMENDATION
ACCREDITATION AGREMENT CANADA

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi Services Centre**
300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com














25 வெள்ளி விழா 2021 UTHAYAN உதயன்

உதயம் 1303 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday March 26, 2021


# ஜெனிவாவில் இலங்கை அரசிற்கு எதிராக வாக்களித்த 22 நாடுகள்



ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் 46-1 தீர்மானம் குறித்து கனடாவின் தமிழ் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி வெளியிட்ட அறிக்கை முக்கியத்துவம் பெறுகின்றது. மேற்படி ஸ்காபறோ-ரூஜ் பார்க் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி பின்வரும் அறிக்கையை கடந்த செவ்வாயன்று வெளியிட்டார்:

*(உள்ளே 5ம் பக்கத்தில் விபரமான செய்தி)*

# Many Faces of Markham என்னும் போட்டி இப்போது ஆரம்பித்துள்ளது

மார்க்கம் நகரில் வசிக்கும் மழலையர் பள்ளி முதல் 12 ஆம் வகுப்பு வரை-யிலான மாணவர்கள் தங்களது கட்டுரைகள், கவிதை, வீடியோ, கலைப்படைப்பு அல்லது **Spoken-word** ஆகியவற்றை **Many Faces of Markham** போட்டிக்கு சமர்ப்பிக்க அழைக்கப்படுகிறார்கள். இந்த ஆண்டின் கருப்பொருள்: கறுப்பு இனவெறியை எதிர்கொள்ள ஒன்றாக வேலை செய்வது.

இந்த போட்டி **City of Markham Race Relations** கமிட்டியால் வழங்கப்படும் வருடாந்த முயற்சி. இது மார்ச் 21, 2021 அன்று இனவெறி பாகுபாட்டை ஒழிப்பதற்கான ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச தினத்தையும், அனைவரையும் வரவேற்பதாகவும், சொந்தமானதாக உணரக்கூடிய ஒரு மாறுபட்ட மற்றும் அனைத்தையும் உள்ளடக்கிய நகரமாக மார்காம் நகரத்தின் உறுதிப்பாட்டை ஆதரிக்கிறது. கடந்த ஆண்டுகளில், இந்த போட்டிக்காக சமூகம் கூடியது. இருப்பினும், **COVID-19** காரணமாக, 2021 இல் போட்டிக்கு தனிப்பட்ட கூறுகள் எதுவும் இருக்காது. போட்டி விவரங்கள் மற்றும் படிவங்களை **markham.ca/ManyFaces** இல் காணலாம். சமர்ப்பிப்புகள் ஏப்ரல் 23, 2021 அன்று மூடப்படும்.

# ஜெனிவாவில் இந்தத் தடவை கொண்டு வரப்பட்ட தீர்மானம் , 2015ம் ஆண்டுத் தீர்மானத்தை விட மிகவும் பலவீனமானது என்கிறார் நிமால் விநாயகமூர்த்தி



"அண்மையில் ஜெனிவாவில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சபையில் கொண்டுவரப்பட்ட தீர்மானம் இலங்கைக்கு பாதிப்பை ஏற்படுத்தவில்லை.அது இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்பட்டது என்று கூறப்பட்டாலும் அவ்வாறு இடம்பெறவில்லை. மாறாக "குற்றவாளியே விசாரணைகளை நடத்தலாம் என்ற தமிழர்களின் விருப்புக்கு மாறாகவே அதன் உள்ளடக்கத்தில் கூறப்பட்டுள்ளது. அத்துடன், இந்தத் தடவை கொண்டு வரப்பட்ட தீர்மானம் என்பது 2015 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை விடவும் மிகவும் பலவீனமானது. 2015 ஆண்டு நிறைவேறிய ஐ.நா தீர்மானத்தில் கலப்பு பொறிமுறைகளுடன் கூடிய பல நாடுகள் இணைந்த நீதி விசாரணையை கோரியிருந்தது. ஆனால் இப்போதைய தீர்மானம் என்பது முழுக்கவும் இலங்கையே இந்த போர்க்குற்றத்தை விசாரிக்கலாம் என சொல்கிறது. இதை இந்தியா வாக்களிக்காமல் நடுநிலை வகித்தது தமிழ் மக்களுக்கே பாதகமான அதுவும், ஈழத்தமிழர்கள், தமிழக தமிழர்கள் மற்றும் உலகத்தமிழர்களின் மன எண்ணங்களுக்கு பாதகம் செய்த ஒன்றாகவே நான் பார்க்கின்றேன். இது பாதிக்கப்பட்ட ஈழத்தமிழர்களுக்கான தீர்மானம் என்பதை விடவும், மேற்குலக நாடுகள் புவிசார் அரசியலில் தங்களின் இருப்பை நிலைநிறுத்த எங்களை பயன்படுத்துவதாகவே இத்தீர்மானத்தை கொண்டுவந்ததாக பார்க்கிறேன். ஏனைய நாடுகளோடு சேர்ந்து இந்தியாவும் எமது மக்களை ஏமாற்றிவிட்டது".

இவ்வாறு கூறினார் கனடாவில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் முன்னாள் அமைச்சரும் தற்போதைய அங்கத்தவருமான திரு நிமால் விநாயகமூர்த்தி.

மேற்படி விடயம் தொடர்பாக அவர் தமிழ்நாட்டின் "புதிய தலைமுறை இணையத்திற்கு வழங்கிய பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

*(உள்ளே 8ம் பக்கத்தில் விபரமான செய்தி)*






# இலங்கை தொடர்பில் ஐ.நா.வின் கண்காணிப்பு நடவடிக்கைக்கு உதவுவதாக கனடிய வெளிவிவகார அமைச்சர் அறிவிப்பு



இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை வரவேற்கும் அதேவேளை அங்கு இடம்பெற்று வரும் மனித உரிமைகள் தொடர்பான ஐ.நா.வின் கண்காணிப்பு நடவடிக்கைக்கு உதவுவதாக கனடா அறிவித்துள்ளது.

இது தொடர்பாக கனடிய வெளிவிவகார அமைச்சர் மார்க் கார்னியோ அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளார்.

குறித்த பிரேரணை இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் ஆகியவற்றை உறுதிப்படுத்த சர்வதேச சமூகத்தின் தொடர்ச்சியான ஆதரவை பிரதிபலிக்கிறது.

இந்த தீர்மானத்தை நிறைவேற்றுவதற்காக சபை உறுப்பினர்களுடன் இணைந்து கனடா பணியாற்றியது.

மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான சட்டத்தின் மீறல்கள் பற்றிய தகவல்களையும் ஆதாரங்களையும் சேகரிக்கவும், ஒருங்கிணைக்கவும், பகுப்பாய்வு செய்யவும் பாதுகாக்கவும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தை கட்டாயப்படுத்துவதன் மூலம் இலங்கையில் பொறுப்புக்கூறலை புதிய தீர்மானம் முன்வைக்கிறது.

ஆகவே எதிர்கால பொறுப்புக்கூறல் செயன்முறைகளுக்கு இந்த ஆணை முக்கியமானதாக இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார் .

இந்நிலையில் மனித உரிமைகள் தொடர்பான கடமைகளை நிலைநிறுத்தவும், தண்டனையை முடிவுக்கு கொண்டுவரவும், ஒரு விரிவான பொறுப்புக்கூறல் செயல்முறையை மேற்கொள்ளவும் கனடா இலங்கையை தொடர்ந்து வலியுறுத்தும் என்றும் அவர் கூறியுள்ளார் .

மேலும் ஐநாவில் நிறைவேற்றப்பட்ட இந்தத் தீர்மானம் இலங்கைக்கு பாதுகாப்பான, அமைதியான மற்றும் அனைத்தையும் உள்ளடக்கிய எதிர்காலத்தைப் பாதுகாப்பதற்கான ஒரு படியாகும் என்றும், இந்த இலக்கை நோக்கிச் செல்லும் முயற்சிகளுக்கு ஆதரவளிக்க கனடா தயாராக இருப்பதாகவும் அவர் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# கிழக்கிலங்கையின் புகழ்பெற்ற சுற்றுலா மையமான அறுகம்பையில் அமைந்துள்ள உல்லாசப் பயண விடுதி உடனடியாக விற்பனைக்கு உள்ளது



இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் வெளிநாட்டவர்களுக்கு நன்கு பிடித்தமான சுற்றுலா மையம் என்று அறியப்பெற்ற அறுகம்பையில் அமைந்துள்ள உல்லாசப் பயண விடுதி உடனடியாக விற்பனைக்கு உள்ளது.

பொத்துவிலுக்கு அண்மையில் கடற்கரை மற்றும் வெளிநாட்டவர் விரும்பும் இயற்கை வளம் ஆகியவை நிறைந்த அறுகம்பையில் நல்லதோர் முதலீடு.

*(உள்ளே 30ம் பக்கத்தில் விபரமான செய்தி)*